மார்ச் 29 - ஏப்ரல் 04, 2004 | 28 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்




## தமிழ் கூட்டமைப்பின் வெற்றியில் தமிழர் எதிர்காலம்

## கருணாவுக்கு ஒரு பகிரங்க மடல்



## ரணிலா, சந்திரிகாவா? ஒருவாரத்தில் தெரிந்துவிடும் முடிவு!





## வெற்றியை நிர்ணயிக்கப் போகும் கூட்டணிக் கட்சிகள்

# பிசுபிசுத்துப் போனது கருணாவின் பிரதேச வாதம்

ஆரவாரத்துடன் அதிரடி நடவடிக்கையில் இறங்கி தனது கௌரவத்தைக் காற்றில் பறக்கவிட்ட மட்டு. – அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி கருணா அவிழ்த்துவிட்ட பிரதேசவாதம் பிசுபிசுத்துவிட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பொறுப்பில் இருந்து மட்டுமல்ல இயக்கத்தில் இருந்தும் வெளியேற்றப்பட்ட அவர், பொது மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கருணா தனது தனிப்பட்ட ஊழல் மோசடிகளை மறைப்பதற்காக பிரதேசவாதம் என்றொரு புரளியைக் கிளப்பினார். ஆரம்பத்தில் விடயம் அறியாத ஒரு சிலர் இவரின் பேச்சில் எடுபட்டாலும் இப்போது உண்மை புரியப்பட்டுவிட்டது. கருணாவின் போக்கு மக்களை விழிப்படையச் செய்துவிட்டது.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விதத்தில் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டிகள் கருணாவின் நிலைப்பாட்டை நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

கருணாவின் பிடியில் இருந்து வெளியேறிய சிலர் திருமலை, வன்னி சென்றுள்ளனர். மட்டக்களப்பின் உண்மை நிலையை அங்கு வெளிப்படுத்தி வருகின்றனர்.

இரத்தம் சிந்தாமல் நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும் என்று வன்னித் தலைமை விரும்புகிறது. பல விட்டுக்கொடுப்புகளுடன் அது மௌனம் சாதித்து வருகிறது. தேசியத் தலைவர் பிரபாகரனும் எவ்விதக் கருத்தும் சொல்லாது இருப்பதற்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்க வேண்டும். இது கருணாவுக்குப் புரியாதது தான் ஆச்சரியம்.

வன்னித் தலைமையின் முடிவுகளையும் நோக்கங்களையும் அவதானிக்கும் பொருட்டு கருணா திருமலைப் பகுதிக்கு தனது உளவாளிகளை அனுப்பி இருந்தார் என்று தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. அப்படி வந்தவர்கள் சிலர் உள்ளூர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைக் கண்டதும் மாயமாக மறைந்துவிட்டனர் என்று சொல்லப்படுகின்றது. கருணாவிடம் இருந்து தப்பிவந்தவர்கள் இப்படிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. வன்னித் தலைமையின் நடவடிக்கைகள் திருகோணமலை ஊடாக நடைபெறும் என்று எண்ணியே கருணா தனது உளவுப்படையை தூது விட்டிருக்கிறார் போலும்.

அதேவேளை, கருணாவின் பிடியில் இருந்த பலர் நாளுக்கு நாள் தப்பிச் செல்கின்றனர். சிலர் வெளிநாட்டுப் பயணத்தையும் மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. சிலர் செய்வதறியாது இரு தலைக் கொள்ளி எறும்புபோன்ற நிலையில் உள்ளனர்.

ஆயுதம் களைந்த நிலையில் அடிமைகளாகப் போராளிகளை வைத்திருப்பது வீரமா? பத்திரிகைகளை எரித்து இலத்திரனியல் சாதனங்களின் பாவனையைக் கட்டுப்படுத்தினால் மட்டும் உலை மூடியால் உலகத்தை மூடிவிட முடியுமா?

எப்படியாவது தென் தமிழீழத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தமிழ் தேசியத்தைப்பாதுகாக்க வன்னித் தலைமை முயற்சித்து வருகின்றது. அது கைகூட வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.

சர்வதேச சதி வலைப் பின்னலில் கட்டுண்டதாலேயே கருணா தான் செய்த சத்தியப் பிரமாணத்தை மறந்தார். வடக்குக் – கிழக்கு இணைந்த மாநிலம் வழங்கப்படும் போது தனது தமிழ்நாடு மாநிலம் காலக்கிரமத்தில் பறிபோகும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு. அதனால் தான் புலிகளைத் தோற்கடிப்பதில் பல முயற்சிகளையும் இராஜதந்திர நகர்வுகளையும் இந்தியா ஆரம்பம் முதலே மேற்கொண்டு வருகிறது.

இன்றைய சூழலில் ஆயுதம், நிதி மற்றும் பல தேவைகளை கருணா எப்படிச் சமாளிக்கப் போகிறார்? எனவே, நிச்சயம் பலத்த பின்புலம் இருக்க வேண்டும் என்றே நம்பப்படுகிறது. இன்று மாவீரர்களின் பெற்றோர் கொதிப்படைந்துள்ளனர். "எமது பிள்ளைகளைத் தியாகம் செய்தது பிரதேசவாதம் பேசவா?" என்று கேட்கின்றனர்.

இனத் துரோகிகள் ஏளனம் செய்யவும் எதிரிகள் எம்மைப் பலவீனப்படுத்தி எமது அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்கவும் சந்தர்ப்பம் கொடுக்கலாமா?

யாரோவெல்லாம் நன்றிமறந்தனர். கருணா நீங்களுமா? எந்தப்படையுடன் நாம் மோதி வெற்றி கொண்டோமோ அந்தப் படையுடன் கூட்டு ஒப்பந்தமா? கூட்டு ரோந்தா? ஆயுதக் குழுவுடன் சகவாழ்வா? வெளிநாட்டுக்கு கைக்கூலியா? மறத்தமிழன் – தன்மானத் தமிழன் – தலை குனிவதா?

**மனோ**



## அரசியல் அம்பலம்

### அர்த்தமே இல்லாமல் போன ஹர்த்தால்! யாருக்கு யார் குழி வெட்டுவது?

''இந்த பாழாய்ப் போன தேர்தல் வந்ததும் வந்தது. நம்ப கிழக்குச் சீமை மக்களின் நிம்மதி இல்லாமல் போச்சி'' என்று வேதனைப்பட்டார் அந்த சேகுனா.

''என்ன ஐயா அன்னையின் ஆணைப்படி தீவிர பிரசாரத்தில் இருந்த நீங்களே இப்படி அலுத்துச் கொள்ளும்படி நேர்ந்து விட்டது'' என்று கேட்டார் நண்பர்.

''பொறவு என்ன சார் சொல்வது நீங்க. முந்தி எல்லாம் ஹர்த்தால் என்றால் அந்த ஊரே பிரமித்துப் போகும். ஏதாவது ஒரு நல்ல காரியம் நடக்கும்'' என்றார் சேகுனா.

''இப்ப மட்டும் என்னவாம் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தானே ஹர்த்தால் செய்யிராங்க'' என்று சீண்டினார் நண்பர்.

''அதுசரிதான் சார். ஒருத்தரை ஒருத்தர் வெட்டி வீழ்த்துவதற்கும் குழிபறிப்பதற்கும் கூட ஒரு ஹர்த்தால் தேவைதான்'' என்றார் சேகுனா.

''என்னது வெட்டிவீழ்த்தவும் குழி பறிக்கவும் ஹர்த்தால்'' என மீண்டும் சீண்டி விட்டார் நண்பர்.

''உண்மைதான் சார். வரிசையாச் சொல்லுறன். கவனமா குறிச்சுக்கங்க'' என்று பட்டியல் போட ஆரம்பித்தார் சேகுனா.

''கொஞ்சம் கிழக்கைப் பாருங்கள். அக்கரைப்பற்றில் பாருங்க மரநாயகனுக்கு எதிராக அந்த அத்தாவானவர் ஹர்த்தால் செய்தார். அதேமாதிரி முன்னாள் தபாலதிபரும் இப்போ ஹிஸ்ஸாகிப் போனவருமான தம்பி, காத்தான் குடியில் ஹர்த்தாலை நடத்தினார்.

இதைப் பார்த்த மரக்கட்சிக் காரர்கள் சும்மா இருப்பார்களா? விட்டேன்னா பார் என்று ஓட்டமாவடி, அட்டாளைச் சேனை, வாழைச் சேனை என தொடர்ச்சியாக ஹர்த்தால் நடத்துகின்றனர்.

பாருங்க சார் முந்தி நாங்க தேர்தல் காலங்களில் கூட்டம் வைப்போம். பிரசாரம் பண்ணுவோம். சனங்கள் கூட்டத்துக்கு வருவாங்க. விரும்புகிறவர்களுக்கு ஓட்டுப் போடுவாங்க.

இப்ப என்னடா வென்றால் வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியவில்லை. கடைகளை திறக்க முடியவில்லை. புள்ளைகள் பாடசாலைக்குப் போக முடியவில்லை.

நாங்க அன்றாடம் உழைச்சு சாப்பிடுறவங்க. ஹர்த்தால் ஹர்த்தால் என்று சொல்லி எங்க வவுத்தில எல்ல அடிக்கப்பார்க்கிறாங்க.

மரத்தை துண்டு துண்டா வெட்டி மொட்டையாக்கினவுங்க இப்ப சனங்களோட வவுத்திலையும் அடிக்க ஆரம்பிச்சிட்டாங்க.'' என்றுகவலையுடன்சொன்னார் செகுனா.

''அப்படியானால் இப்ப ஒங்கட நிலைமை எப்படி வெற்றி கிடைக்குமா?'' என்றார் நண்பர்.

''நீங்க ஒன்று சார். என் கையை எடுத்து என் கண்ணையே குத்தப் பார்க்கின்றீர்கள்'' என்றார் சேகுனா.

''சீச்சீ அப்படி இல்லை சார். அந்த காத்தான்குடியில உங்களோட சத்தம் தான் கூடுதலாக இருந்ததாக சொன்னாங்களே! நீங்களும் ஹர்த்தாலில் சென்று கொண்டீர்களோ'' என்று கேட்ட போது செல்போன் 'டப்' பென கட்டாகிவிட்டது.

### வெட்டிய கைக்கே ஒத்தடம் கொடுக்கும் மாயோன்

தனித்துவம் தனித்துவம் என்று கூறி மரத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்த அந்த மர நாயகனுக்கு இப்பொழுது சோதனையான காலம்தான்.

தனக்கு தலதாமாளிகைப் பிரதேசத்தில் இடம் இல்லை என்றால் தான் மரத்தில் ஏறிக் கொள்வதைவிட வேறு வழி இல்லை என்று அடம் பிடித்தார். சமாதான நாயகரிடம் பாச்சா பலிக்கவில்லை. கடைசியாக மரத்தைத் தூக்கிக்கொண்டு கிழக்குச் சீமைக்குச் சென்றார்.

இவர் செல்வதற்கு முன்னரே கிழக்குச் சீமையில் கொடிகட்டிப் பறந்தவர்கள் பலர். அவர்களுள் மாயமானவர் மக்கள் செல்வாக்கும் அரச செல்வாக்கும் பெற்றவர்.

மரத்தை வளர்ப்பதற்கு இந்த மாயவனின் உதவி முக்கியம். அவரும் அந்தக் குழுவில் இடம் பெறுவார். அவருக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் மரநாயகர் உத்தரவாதம் அளித்தார்.

ஐயோ, பாவம். இந்த மாயன் மரநாயகனின் பேச்சை நம்பி யானை மீது சவாரி செய்யும் வாய்ப்பையும் விட்டுக் கொடுத்து விட்டாராம்.

கடைசியில் நடந்தது என்ன? இதோ அழைக்கிறோம், அதோ அழைக்கிறோம். எல்லாம் ரெடி. நீங்கள் எப்போது வந்தாலும் ஒப்பம் போடலாம் என மர நாயகன் கூறினாராம்.

இந்த மாயோனும் பேனா நிறைய பச்சை மையை நிரப்பிக் கொண்டு ஒப்பம் போடக் காத்திருந்தாராம். இரவு விடியலாகி, விடியல் பகலாகியும் அழைப்பு இல்லை. ஆனால், இந்த மாயனுக்கு தெரியாமலே மர நாயகன் கிழக்குச் சீமைக்கான பட்டியலைச் சமர்ப்பித்துவிட்டு கப்சிப் என இருந்து விட்டாராம்.

மாயன் எப்போதுமே நல்ல மனம் படைத்தவர். அவர் எதிர்பாராத வேளையில் அவரின் பெயரை தேசியப் பட்டியலில் சேர்த்து விட்டார் சமாதானத் தலைவன். ஆனால், மாயனுக்கு மரநாயகன் செய்தது பச்சைத் துரோகம் என்கின்றனர் மர நிழலில் இருப்பவர்கள்.

நிலைமை இப்படி இருக்க, மரநாயகனின் மேடையில் திடீரெனத் தோன்றினார் மாயன். மரத்தின் கிளை ஒன்றை கழுத்தில் மாட்ட வந்த போது, இல்லை இல்லை நான் யானை முகத்தானின் தீவிரபக்தன். உங்கள் மரக் கொம்பு வேண்டாம் என மேடையிலேயே மூக்கை உடைத்து விட்டாராம் மாயன்.

இது விடயமாக மாயமானவருடன் தொடர்பு கொண்ட நண்பர் ''என்ன ஐயா இது? உதைத்த காலுக்கு முத்தம் கொடுப்பது போல் இருக்கின்றதே!'' என்று கேட்டார்.

''ஆமாம் சார் வெட்டின கைக்கு ஒத்தடம் போட்டு உதவ வேண்டும். இதைத்தானே 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்று வள்ளுவர் அப்போதே கூறி விட்டார். அதைத்தான எங்கள் சமாதானத் தலைவனும் கூறினார். தலைவனை மதிக்கத் தெரிந்தவர்கள் நாங்கள். ஆனால், சில தலைவர்கள் தலைமைத்துவத்தையே அசிங்கப்படுத்துகின்றார்களே!'' என்று வேதனைப்பட்டார் அந்த மாயவன். அதுவும் சரிதான்.

## வாசகர் இதயம் பேசுகிறது

***சி.ஜெயப்பிரியா – இரணைப்பாலை.***

முதலில் வணக்கத்தைக் கூறிக் கொண்டு தொடர்கின்றேன். நீ ஒவ்வொரு வாரமும் எம் கரங்களில் தவழ்ந்து கொண்டு வருகின்ற சுடர் விளக்கு. உன் ஒவ்வொரு பக்கத்திலும் வரும்படைப்புக்கள் யாவும் தரமானவை. நீ மென் மேலும் வளர்ந்து உலகெங்கும் ஒளி வீச என் வாழ்த்துக்கள்.

***த.சி.சயந்தன் – வட்டுக்கோட்டை.***

எட்டுத்திசையும் சுடர் விட்டு பிரகாசிக்கும் சுடர் ஒளியே உன் புனிதமான பத்திரிகைப் பணி தொடரட்டும். உன்னுள் இடம் பெறும் அனைத்தும் தரமானவை.

சொற்சிலம்பம் சூப்பரோ சூப்பர். சிறு கதைகளும் தரமானவை. இளஞ்சுடர் பயன் மிகுந்தது. இவ்வாறு ஒவ்வொன்றையும் கூறிக் கொண்டே போகலாம்.

சுடர் ஒளியே ஒரு வேண்டுகோள். நான் நீண்ட நாட்களாகக் கேட்கும் பொது அறிவுத் தேடல் பகுதியை இணைத்து அதிகூடிய புள்ளி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசில் வழங்கலாம் தானே!

இன்றைய உலகில் பொது அறிவு மிக முக்கியமானதாகும். இவ் வேண்டுகோளை எம் சுடர் ஒளி வெகு விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுகின்றேன். உன் பணி மென் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

***ச.பிரியதர்சினி – வட்டக்கச்சி.***

சுடரே! நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் தரமானவை. அதிலும் கவிதைப் புனல், மசாலா மிக்ஸ், டேஸ்ட்கடை, பித்தன் பதில், சிறுகதைகள், விளையாட்டுச் செய்திகள் என்பன மிகவும் என்னைக் கவர்ந்தன. எனவே உனது சேவைக்கு எனது பாராட்டுக்கள். உன் பணிஎன்றும்தொடர என் வாழ்த்துக்கள்.



***க.நாகேஸ்வரா – சண்டிலிப்பாய்.***

இன்பங்கள் நின்றொலிக்க
இதயங்கள் சங்கமிக்க
இணையிலா செய்திகளை
இன்பத்தமிழினில்
இடையறாது ஈந்திடும்
இன்றைய ஊடகமாய்
இல்லமெலாம் கரந்தன்னில்
உனைப் பற்றிட...
உள்ளமெலாம் உன் சுடர்
உவகையால் மிளிர்ந்திட
உன் பணி... தொடரட்டும்.

***கிருஷ்ண தர்ஷா – கோண்டாவில்.***

அன்பின் சுடர் ஒளியே!

ஓங்கிய உனது பணியால் ஒளி பெறும் வாசகர்களில் நானும் ஒருத்தி. உனது வரவுக்கு வாரம் தோறும் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன். நீ சுமந்து வரும் சொற்சிலம்பம், சிறுகதை, குறுங்கதை, கவிதைப் புனல், பித்தன்பதில், பெண்கள், சிறுவர் பக்கம், இணையத்தளத்திலிருந்து, கலையமுதம் அத்தனையும் சூப்பர். உன் பணி தொடர ஆயிரம் கோடி வாழ்த்துக்கள்.


சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

# திருமலை புதிய சந்தைக் கட்டடம் கைவிட்டுப்போகும் ஆபத்து.

திருகோணமலை புதிய சந்தைக் கட்டடம் பொதுமக்களைவிட்டுகைவிட்டுப்போகும் நிலைஏற்பட்டிருக்கின்றது.

அதிக அளவான தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் திருகோணமலை நகரில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த சந்தைக் கட்டடம் போதிய வசதி அற்று இருந்ததால் புதிய சந்தைக் கட்டடம் வேண்டிய தேவை திருமலை நகராட்சி மன்றத்துக்கு இருந்தது.

மரக்கறிச் சந்தை என்றும், மீன் சந்தை என்றும் இரண்டு இருந்தாலும் அவற்றில் சிங்களவர்களின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன் அடிக்கடி பிணக்குகள் ஏற்படும் இடங்களாகவும் இருந்தன. மணிக்கூண்டுக்கோபுரம் என்றாலே தமிழர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குப்பிறகு செல்வதற்கு அஞ்சுவர். இத்தனைக்கும், மறைந்த எங்கள் ஏகாம்பரம் உட்பட தமிழ்பேசும் பிரதிநிதிகளாலேயே அவை ஸ்தாபிக்கப்பட்டன.

எனினும் பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சி, ரவுடித்தனம் மேலோங்கிவிட்டது. இந்தநிலையிலேயே முன்னாள் நகர பிதா பெ.சூரியமூர்த்தி மற்றும் அவர் சார்ந்த குழுவின் முயற்சியால் மின்சாரநிலைய வீதியில் பெரிய அளவிலான புதிய சந்தைக் கட்டடம் ஸ்தாபிக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இதனை நிறுவ முற்பட்டபோது பலத்த எதிர்ப்புகள் கிளம்பின. ஆளுநர், படைத்தரப்பு, அரசியல் வாதிகள் எனப்பல அதிகாரமிக்கவர்கள் தடுக்க முற்பட்டனர். எனினும் கட்டடம் 1995 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுவிட்டது.

ஒரு நகரபிதாவின் முயற்சியால் அமைக்கப்பட்ட இந்த புதிய கட்டடத்தை இதுவரை எந்த அரசியல் வாதியாலும், அதிகாரம்மிக்கவர்களாலும் திறக்க முடியாமல் போனது வெட்கக்கேடான விடயம்.

எவ்வித பிரயோசனமும் இல்லாமல்வெறுமனே கிடந்த இந்த அழகிய கட்டடம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் சிலகாலம் யாழ் — திருமலை கப்பல் பயணிகளுக்கு இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்துக்குப் பிறகு அது வெற்றுக் கட்டடமாகக் கிடந்தது.

இப்போது படையினர் இந்த வெற்றுக்கட்டடத்தை முழுவதுமாக ஆக்கிரமிக்கும் நிலை காணப்படுகின்றது. சில மாதங்களுக்கு முன்பு முன் வீதியில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பொலிஸார் மற்றும் படையினர் அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களை புதிய சந்தைக் கட்டடத்தில் இளைப்பாறும்படி காவலாளிகள் அழைத்தனர். இப்படி தற்காலிகமாக தங்கச் சென்றவர்களுக்கு சிலர் நுளம்பு வலை, கட்டில்போடும்வசதிகளைஏற்படுத்திச்கொடுத்துள்ளனர்.

உணவு சமைத்தல், உடை மாற்றல், உறங்கல் உள்ளிட்ட அன்றாட தேவைகள் இங்கு நடக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஒருமினி முகாமாகிவிட்டது எனலாம்.

-சுகி-


## சமாதானத்தையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்த

உங்கள் வாக்குகளை தீர்மானிப்பதற்கான அடிப்படை கொள்கைகள் ஐந்து

## உங்கள் அரசாங்கம்

1. சகல தரப்பினரது அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக்கூடிய ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கொண்டுவர முயலும் ஒன்று.
2. அச்சத்தையும் அவநம்பிக்கையையும் உருவாக்கி சமாதானத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத ஒன்று.
3. சகல சமூகங்களுக்கும் சமத்துவமும் சமவுரிமையும் உண்டு என நம்புகின்ற ஒன்று.
4. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதானச் செயற்பாட்டின் அத்திவாரத்திலிருந்து அதனை கட்டியெழுப்பும் ஒன்று.
5. சொல்லிலும் செயலிலும் சகல கருத்துக்களுக்கும் மதிப்பு கொடுக்கும் ஒன்று.



தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பற்றிய ஐ.தே.கட்சியின் பொய்யையும் புரட்டையும் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை உடைத்தெறிவதில் ஐ.தே.க எப்பொழுதுமே உறுதியாய் இருந்துள்ளது.

பேர்சி விக்கிரமசேகர, ஐக்கிய மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர், கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தின் போது டெய்லி நியூஸ் 22மார்ச் 2004, பக்கம் 3

இலங்கையில் கடந்த 56 வருட கால ஆட்சியின் போது இரண்டு பிரதான கட்சிகளும் சிங்கள பௌத்தர்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் எதனையும் மேற்கொள்ளவில்லை.

[illegible] அமரகீர்த்தி தேரோ, ஜாதிக ஹெல உறுமய, [illegible] நடைபெற்ற கூட்டத்தின் போது, டெய்லி மிரர் 23மார்ச் 2004 பக்கம் 4

மக்கள் விடுதலை முன்னணியினர் கொலை செய்வதிலும், வங்கிகளைக் கொள்ளையிடுவதிலும், பொய் பிரச்சாரங்களை செய்வதிலும் மிகவும் கைதேர்ந்தவர்கள். எந்தவித சம்பளமும் பெறாமல் தாங்கள் மட்டுமே சேவையாற்றுவதாகவும் அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். ஏற்கனவே அவர்கள், வங்கிகளிலும் பணக்காரர்களிடமும் கொள்ளையடித்த பணம் இன்னமும் அவர்களிடம் இருக்கின்றது போலும்.

கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு - ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர், அவிசாவளையில் ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் முன்னணியினரின் கூட்டத்தில். டெய்லி நியூஸ் 22.03.2004 - பக்கம் 06

ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்கள் மக்கள் தேவையை பூர்த்தி செய்யத் தவறிவிட்டனர். ஜனாதிபதி பாதுகாப்பு துறையை பொறுப்பேற்காது இருந்திருந்தால் வேலைநிறுத்தம் செய்தவர்கள் பட்டலந்த வதை முகாமில் தற்போது அடைக்கப்பட்டிருப்பார்கள்.

கலாநிதி சரத் அமுனுகம, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உதவித் தலைவர், கலகெதரவில் நடைபெற்ற கூட்டத்தில். டெய்லி நியூஸ் 22.03.2004 - பக்கம் 06

தெற்கு அரசியலைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிக்காவும் JVP யும் மக்களின் பயஉணர்ச்சியையே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர். ஏனென்றால் தெற்கில் பிரச்சினைகள் தீர்ந்தால் அரசியலில் அவர்கள் நிற்பதற்கு இடமில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைவர், ஐக்கிய தேசிய முன்னணி, திஸ்ஸமகாராமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது டெய்லி மிரர் 22மார்ச் 2004 - பக்கம் 02

மேற்கூறப்படும் கொள்கைகளை மீறி பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படுமாயின் அவற்றை நீங்கள் எமக்கு தொலை நகல் அல்லது ஈ-மெயில் மூலம் அனுப்பிவைக்கவும் - நீங்களும் ஒரு கண்காணிப்பாளரே!

செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக் கிழமைகளில் சமாதானக் கண்காணிப்பினைப் பாருங்கள்.....

## இலங்கை தேசிய சமாதானப் பேரவை

Tel: +94-11-2818344, 2854127, 2809348 Fax: +94-1-2819064
web site: www.peace-srilanka.org - E-mail: peace2@sri.lanka.net

IDW-Ads-3/4-06



## நாடாளுமன்றத் தேர்தல் 2004
## கொழும்பு மாவட்டம்

சமாதானத்திற்கும், சுபீட்சத்திற்கும் யோகராஜனுக்கு அமோக வாக்களித்து வெற்றிபெறச் செய்வோம்...



## ஆர். யோகராஜன்
B.Sc (Engg)

வெற்றியின் சின்னம் X

வெற்றி இலக்கம் 3

"எனது சேவையில் பொதுமகன் ஒருவன் நன்மையடைந்தால் நான் அடைவது ஆத்ம திருப்தியே"
- ஆர்.யோகராஜன்



## பேரன்புமிக்க வன்னி மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

தமிழர்களின் அபிலாசைகளை பாராளுமன்றத்தில் ஒரேகுரலில் ஒலிக்கச் செய்வதற்காக விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டும் வன்னி மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளராக நிற்கும் அ.இ.தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B



சிங்கத்தின் குகையில் அரசோச்சிய வீரத்தமிழர்களின் குரல் மாமனிதர்
**குமார் பொன்னம்பலம்**

குமாரின் வழியில் நிற்கும்
**திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி**

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி 4

சிறைகளில் வாடிய தமிழ் தேசிய இளைஞர்களின் விடுதலைக்காக நீதிமன்றங்களில் ஆஜர் ஆகி அவர்களை வெளிக்கொணர்ந்த மனித உரிமைவாதியும் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வழியில்செயலாற்றிக் கொண்டிருக்கும் திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களை ஆதரித்து கட்சி சின்னமான வீட்டுக்குப் பக்கத்தில் முதல் புள்ளடியிட்டு இலக்கம் 4க்கு மேல் உங்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றை புள்ளடியிடுமாறு வேண்டுகின்றோம்.

# சுடர் ஒளி

மார்ச் 29 — ஏப்ரல் 04, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com


## புலிகளின் தலைமையும் கருணாவும்

கிழக்கில் நெருக்கடி ஏற்பட்டு மூன்று வாரங்கள் கழிந்த விட்டன. இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீரும் அறிகுறிகள் எல்லாம் மறைந்து விட்டன. கருணா, தான் செய்த குற்றங்களை ஏற்று மன்னிப்புப் பெறுவதற்கான கால அவகாசமும் கடந்து விட்டது.

ஆகவே, தமிழீழ விடுதலைப்புலிகள் இனியும் பொறுமைகாப்பார்கள் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. பொறுமைக்கும் ஓர் எல்லைஉண்டு.

எமது இனத்தைக் காப்பதற்காக துரோகி கருணாவை எமது மண்ணில் இருந்து களைவதற்கான நேரம் வந்து விட்டது என்றே புலிகளின் தலைமை கருதுகின்றது. ஆகவே, இனிவரும் காலங்கள் கருணாவுக்கு பயங்கரமானவையாகவே இருக்கப் போகின்றன.

மூன்றுவார காலமாக மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்து வந்த புலிகள் இனியும் அதற்குத் தயார் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தற்பொழுது தென்படுகின்றன.

புலிகளின் தலைமைப்பீடம் கடந்த வார இறுதியில் விடுத்த அறிக்கை இதனை கோடிகாட்டுகிறது.

கருணாவுக்கு பக்கத்துணையாக நின்று வரலாற்றுத் துரோகத்துக்கும் பழிக்கும் துணை போக வேண்டாம் என்று மட்டக்களப்பு — அம்பாறைப் போராளிகளையும், பொறுப்பாளர்களையும்புலிகளின் தலைமை அந்த அறிக்கையில் கோரி இருக்கிறது.

போராளி எவராவது இனிமேலும் கருணாவின் சார்பாக ஆயுதம் ஏந்தி நின்றால் அதன் விளைவுகளுக்கு அப்போராளியே தனிப்பட்ட பொறுப்பாளி என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய போராளியின் இறப்பு மாவீரர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, கருணா விவகாரம் தொடர்பாக புலிகள் ஓர் இறுதி முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்றே தெரிகிறது.

தமிழீழப் போராட்டம் முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்திருந்த சமயம் அதனைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் கருணா செய்த துரோகம் எவராலும் மன்னிக்க முடியாதது. இது வரலாற்றுத் துரோகம்.

* பாலியல் குற்றங்கள் நிதி மோசடிகள், தன்னிச்சையான படுகொலைகள் ஆகியவற்றை மேற்கொண்டமை

* தான் புரிந்த குற்றங்களை மறைப்பதற்காக பிரதேச வேறுபாட்டையும் சகோதர சண்டையையும் ஒருங்கே ஏற்படுத்த முயன்றமை.

* மட்டக்களப்பு மக்களும் போராளிகளும் தேசியத் தலைவரை அணுகவிடாமலும் அவரோடு தொடர்பு கொள்ள முடியாமலும் தடுத்து வைத்திருந்தமை.

* விசாரணைக்காக அழைக்கப்பட்ட போது தலைமைப்பீட உத்தரவை மீறி பொய்யான பல பழிகளைச் சுமத்தியமை.

* தேசியத் தலைவரின் படங்களை உடைக்கும்படியும் எரிக்கும்படியும் தனது கட்டுப்பாட்டில் உள்ள போராளிகளை வற்புறுத்தியமை.

* மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு படுகொலைகளுக்கும் பாரிய சொத்தழிவுகளுக்கும் காரணமாக இருந்த தேசத் துரோகிகளுடனும் எதிரிப்படைத் தளபதிகளுடனும் தனது சுய நலத்துக்காக கூட்டு வைத்தமை.

இப்படிப் பல குற்றச்சாட்டுக்கள் கருணா மீது சுமத்தப்பட்டுள்ளன. இவற்றைவிட கருணாவின் சதியின் பின்னணியில் செயற்பட்ட சக்திகள் குறித்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

பிரதேசவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தி மட்டக்களப்பு — அம்பாறை மக்களை ஏமாற்றுவதே கருணாவின் திட்டம்.

ஆகவே, கருணாவின் கபடத் தனங்களையும் துரோகங்களையும் முறியடிப்பதற்கு தற்பொழுதுள்ள வரும் ஒரே ஒரு வழி இன்று கருணாவுடன் பிடியில் இருந்து வரும் — போராளிகள் அவரை விட்டு வெளியேறுவதே. அப் போராளிகள் தாம் விரும்பினால் தமது குடும்பத்துடன் சென்று இணைந்து வாழத் தேசியத்தலைவர் அனுமதி வழங்கி விட்டார். கருணாவும் அவரது அடியாட்களும் சுகபோகம் அனுபவிப்பதற்காக தாம் அநியாயமாக மடிந்து போவதை விட குடும்பத்துடன் சென்று வாழக் கிடைத்துள்ள வாய்ப்பை போராளிகள் பயன்படுத்த வேண்டும்.

# யாழ். மாவட்டத் தேர்தலும் தமிழ் கூட்டமைப்பு அலையும்

தேர்தல் பரபரப்பும் ஆரவாரமும் பிரசாரங்களும் சில வாரங்களுக்கு முன்பு நாட்டில் உச்சமடைந்து இருந்தன. ஆனால், யாழ்ப்பாணக் குடா நாட்டில் தேர்தல் அண்மிக்கின்ற இந்த நாட்களில் சூடு குறைந்து செல்லுகின்ற நிலைமையே காணப்படுகிறது.

எனினும், அச்சு ஊடகங்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் அனைத்துக் கட்சிகளினதும் பிரசார விளம்பரத் தயாரிப்புக்கள் பொறி பறக்கின்றன.

கொழும்பை மையப்படுத்தி நிலை கொண்டிருந்த தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் சிலவற்றினது யாழ். குடா நாட்டுக்கான பிரவேசத்தின் பின்னதாக இடம் பெறும் முதல் தேர்தல் இது என்ற வகையில் யாழ். மக்களுக்கு தேர்தல் விளம்பர மாஜாஜாலங்களை தொலைக்காட்சியில் ரசிக்கும் வாய்ப்பு நன்கு கிடைத்துள்ளது.

### வீட்டுக்கு ஆதரவு அலை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மிக லாவகமாக, அழகாக, நேர்த்தியாக அவசரமோ பரபரப்போ இன்றி சுதந்திர உணர்வோடு தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் ஆரம்பத்தில் நகரங்களிலும் கிராமங்களிலும் தமது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்திய வேளைகளில், யாழ்ப்பாண மாவட்ட மக்களின் 'ஆதரவு அலை' ஒரு தளம் பலின்றி திடமாக தம்பக்கம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

தற்பொழுது தேவையான ஒரு சில இடங்களில் தேவையான அளவுக்கு மட்டும் வேட்பாளர்கள் தமது பரப்புரைகளை மட்டுப் படுத்தியுள்ளனர். அவ்வகையில் கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நெடுந்தீவுக்குள் தமது பிரசார வாகன அணியுடன் இறங்கி, மக்களுக்கு சரி பிழைகளை விளக்கி வாக்குக் கேட்டனர்.

### வீடுபேறே விடுதலைப் பேறு

மாணவ சமூகம், வர்த்தக சமூகம், பெண்கள் உரிமைகளுக்கான அமைப்புக்கள், மருத்துவர்கள், தாதிமார்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உள்ளூராட்சித் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோர் மத்தியிலும் விவசாய சம்மேளனங்கள், கடல்தொழிலாளர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய சகல மட்டங்களிலும் வீட்டுக்குப் புள்ளடிபோடும் நிலைமை தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

இந்து கலாசார அமைச்சராக இருந்த தியாகராசா மகேஸ்வரன் ஏற்கனவே இந்துக் கோவில்கள் சார்ந்த அமைப்புக்களுக்கு செய்திருந்த நிதிஉதவிகள் காரணமாக இந்து குருமார் சமூகத்தினர் மத்தியில் கணிசமானோர் மகேஸ்வரனுக்கு 'வாக்கு வங்கியாக' செயற்படக் கூடிய நிலை இருந்தது. ஆனால், அவர் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடாத காரணத்தால் அந்த வாக்குகள் முழுமையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே சென்று சேரும் நிலைமை இருந்து வருகிறது.

கிறிஸ்தவ சமூகத்தைப் பொறுத்தவரையில் யாழ். நகரிலும் சரி ஏனைய யாழ்ப்பாணக் கிராமங்களான இளவாலை, சில்லாலை, ஏழாலை, சுன்னாகம், மானிப்பாய், உடுவில், வடமராட்சியின் கரவெட்டி போன்ற கிராமங்களிலும் சரி நூற்றுக்கு நூறு என்ற வகையில் வீட்டுக்கான அலையே வீசுகிறது.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகிய முன்னணி கிறிஸ்தவக் கல்லூரிகளின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என அனைவரும் வீட்டுக்கே தமது வாக்கு என்பதில் மிகவும் உறுதியாகவே உள்ளனர்.

இந்து மதகுருமாரும் சரி, கிறிஸ்தவ மதகுருமாரும் சரி தமது மக்களுக்கும், பக்தர்களுக்கும், விசுவாசிகளுக்கும் உரிமைப் போரினால் அடையப்பட்ட பலம் வீணாகாத வகையில் வாக்களிக்கும்படி வழிகாட்டுகின்றனர்.

முன்னைய காலங்களில் தேர்தல்களிலோ வாக்களிப்பு விடயங்களிலோ அதிக கரிசனை செலுத்தாத யாழ்ப்பாணத்திலுள்ள ரோமன் கத்தோலிக்கம் அல்லாத (Non RC) கிறிஸ்தவ சபைகள் கூட வீட்டுக்கே தமது வாக்கு என்று வெளிப்படையாக கூறி வருகின்றன. பாரம்பரியமாக விடுதலைப் போருக்கே உரமேற்றி ஆதரவும், பலமும் சேர்த்த ரோமன் கத்தோலிக்க மதகுருமாரும், அருட்சகோதரிகளும் என்றைக்கும் போல இன்றைக்கும் விடுதலைப்புலிகள் ஆதரவுத் தளத்தில் எள்ளளவும் பிசகாமல் நிற்கின்றனர்.

### வெந்த புண்ணில் ஈட்டியாக

எனினும் ஒரு சில அறிவிலிகள் மக்களை அறிந்து கொள்ளாமல், தத்தமது தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளை தமிழரின் விடுதலை அரசியல் மீது சீண்டி விளையாட பயன்படுத்துவது தூர நோக்கற்ற துயரங்களாக வரலாற்றில் ஆங்காங்கு பதியப்பட்டுள்ளன.

அவர்கள் தனிப்பட்ட ரீதியில் தமக்கும் தமது உறவுகளுக்கும், பாசபந்தங்களுக்கும், தமிழினத்துக்கும் களங்கமாக விளங்குவது வெந்த புண்ணிலே ஈட்டியாக பாய்கிறது.

### டக்ளஸ் - கருணா உறவு வளர்கிறதா?

அண்மையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, தனது தேர்தல் பிரசாரத்துக்கே எள்ளளவும் சாதகமாக அமையாத — ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கருத்துக்களையே புண்படுத்தும் வகையில் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியின் சாராம்சம் யாழ்ப்பாணத்தின் தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றில் வெளியாகியிருந்தது.

அப்பேட்டியில் டக்ளஸ் தேவானந்தா, ''நாங்கள் கருணாவைப் பாதுகாப்போம். கருணா எமது இரக்கத்தையும் பரிவையும் பெறுகிறார். நாங்கள் கருணாவைப் பலப்படுத்துவோம்..'' என்று கூறியுள்ளார்.

கருணாவை ஓரங்கட்டி, தமிழினத்தின் அரசியல் தலைவிதியை காப்பாற்ற தமிழர்கள் ஒன்றுபடும் இத்தருணத்தில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கும் கருத்துக்கள் மக்களை கடுமையாக விழிப்படையச் செய்துள்ளன.

டக்ளஸ் அப்பேட்டியில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவரது இவ்வாறான கருத்துக்கள் அவருக்கு மேலும் மிகப்பாதகமான தேர்தல் நிலைவரங்களையே ஏற்படுத்தப் போகின்றன.

தமிழினத்தைப் பொறுத்தவரையில் கருணா ஒரு வரலாற்றுப் புண்! டக்ளஸ்தேவானந்தா கருத்துரீதியாகவோ செயற்பாட்டு ரீதியாகவோ கருணாவை வைத்து அரசியல் லாபம் பெறமுயற்சிப்பாரானால் அது அவரது அரசியல் சதுரங்கத்தில் புத்தி சாதுரியமான காய்நகர்த்தலாக நிச்சயம் அமையாது. மாறாக அவர் தன்னைத்தானே காட்டிக்கொடுப்பதாக அமைந்து விடும்! 'அற நனைந்தவனுக்கு கூதல் என்ன குளிரென்ன' என்று டக்ளஸ் நினைப்பாராகில் அது அவரைப் பொறுத்தது!

### ஏனிந்தக் கற்பழிப்பு ஒலிபரப்பு

'ஊரோடு உறவாட' எனும் பெயரில் நிகழ்ச்சித் தொகுப்புக்களை வழங்கும் பிரித்தானிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற ஒலிபரப்பு நிறுவனம் லண்டனிலிருந்து செய்யும் ஒலிபரப்பை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்கிறது. கருணாவின் நெருக்கடியோடு ஆரம்பித்த இந்த வானொலி, கருணாவை ஒரு எதிர்ப் புரட்சியாளனாக உருவகித்து, கருணாவுக்கான பிரசார ஊடகமாகவே தொழிற்படுகிறது. அத்துடன் தமிழின விடுதலை அரசியலுக்கு அப்பட்டமான எதிர்ப்பாளர்களாகவுள்ளவர்களுக்கும் ஆடுகளம் அமைத்துக் கொடுக்கிறது.

மிக நிர்வாணமாக, ஊடக தர்மத்துக்கு அப்பாற்பட்டு வெறும் பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விடும் இந்த ஒலிபரப்புச் சேவை நச்சுக் கருத்துக்களை விதைக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்த் தேசிய சேவை பாதை திறந்து விட்டிருப்பது, தமிழ்த் தேசிய சேவைக்கு பாரிய கறைகளை விளைவிக்கும். வடபுல மக்களும் கிழக்கு மாகாண மக்களும் இலங்கை வானொலி மீது தீராத வெறுப்படைவர்.

தமிழ் மக்களின் உணர்வுகளையும் அரசியல் அபிலாஷைகளையும் எள்ளளவும் விளங்கிக் கொள்ளாத அறிவிலிகளான அத்தனைபேரும் சரியான பாடம் படிக்கும் வகையில் தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குகளை பயன்படுத்தவுள்ளனர்.

வார இறுதியில் எல்லாம் வெளிச்சம்.

என். பரமதைரியர்

# 5689 வேட்பாளர்கள் தேர்தலில்

13 ஆவது நாடாளுமன்றப் பெருந் தேர்தலை சந்திக்கும் இந்த வேளையில் வெற்றி வாய்ப்புக்களை தமதாக்கிக் கொள்வதற்காக அரசியல் பிரமுகர்கள் உச்சக்கட்ட நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் 196 ஆசனங்களில் எத்தனை ஆசனங்களை தாம் கைப்பற்ற முடியும் என்ற போட்டியில் ஆட்சியைப் பிடிப்பதற்காக இரு பெரும் கட்சிகளும் பகிரதப் பிரயாத்தனம் எடுத்து வருகின்றன.

24 அரசியல் கட்சிகளும், 192 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தம் 5689 வேட்பாளர்கள் இந்தத் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள்.

60 கோடி ரூபா செலவை எட்டிப் பிடித்திருக்கும் இத்தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் — அதன் வேட்பாளர்களும் — பல இலட்சம் ரூபாக்களை வாரி இறைத்து தமது வெற்றி இலக்கை அடையும் நோக்கோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சுதந்திர தொழிலாளர் சம்மேளனம், பவ்ரல், எம்.எவ்.எவ்.ஈ, சி.எம்.ஈ.வி. போன்ற தொண்டர் அமைப்புக்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவும், ஜப்பான் நாட்டின் கண்காணிப்புக் குழுவும் ஈடுபட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் 10670 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட உள்ளன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிக்க வசதியாகவும் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

இம்முறை பெண்கள் மட்டும் வாக்களிப்பதற்காக தனியாக 231 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட உள்ளதாக தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த வாக்களிப்பு நிலையங்கள் 9 மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ளன. கொழும்பு, களுத்துறை, கண்டி, நுவரெலியா, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம், கேகாலை ஆகிய மாவட்டங்களிலே இவை அமைக்கப்படவிருக்கின்றன.

மட்டக்களப்பிலுள்ள மாந்தீவு என்ற பகுதியில் வசிக்கும் 12 வாக்காளர்களுக்காக அங்கு ஒரு தனி வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடுதலான வாக்களிப்பு நிலையங்கள் (957) கொழும்பு மாவட்டத்திலும், ஆகக் குறைந்த வாக்களிப்பு நிலையங்கள் (208) வன்னி மாவட்டத்திலும் அமைய உள்ளன.

இத்தேர்தல் திருவிழாவின் இறுதிக் கட்டம் இன்னும் சில தினங்களில் நிறைவேறி விடும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகளும், சில உயிர்ப்பலிகளும் எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

—சாமினி—

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# தேர்தல் நாள்களில் நினைக்க... சிந்திக்க



> சுதந்திரம் அடைந்த பின்னர் நாடு பல பொதுத் தேர்தல்களைச் சந்தித்து விட்டது. கடந்த காலங்களில் தேர்தல் நாட்களிலும் அதன் பின்பும் இடம் பெற்ற சம்பவங்களை நினைவூட்டும் இந்த ஆக்கம் 16.03.2002, 23.03.2002 உதயன் பத்திரிகைகளில் இருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை அடுத்து ஒரு புரட்சிகரமான ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கதலைமையிலான அமைச்சரவையில் டாக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின்,ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன் போன்ற இடதுசாரிப் பிரமுகர்களும் இடம்பெற்ற வரலாறு அப்போது படைக்கப்பட்டிருந்தது.

நிதியமைச்சரான என்.எம்.பெரேரா அப்போது சமர்ப்பித்த அந்த முதலாவது வரவு செலவுத்திட்டம் மக்களுக்கு அதிரடியான ஒரு தகவலை தெரிவித்திருந்தது.

குறுகிய ஒரு கால எல்லையை அறிவித்து அக்காலத்திலிருந்து அதுவரை புழக்கத்திலிருந்த 50 ரூபா, 100 ரூபா நோட்டுக்கள் செல்லாது என்றும்மக்கள் தமது வசமுள்ள மேற்படி நோட்டுக்களை வங்கிகளில் ஒப்படைத்து அதற்குப் பதிலாக புதிய நோட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் என்.எம்.பெரேரா தெரிவித்திருந்தார்.

கணக்குக் காட்டாமலுள்ள பதுக்கல் பணத்தை வெளிக்கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாக இந்த அறிவித்தல் அப்போது கொள்ளப்பட்டது. நிதியமைச்சரின் அந்த அறிவித்தலால் நாடே குழம்பிப்போய் இருந்தது என்று கூடச் சொல்லலாம்.

அப்போது பென்னம்பெரிய நோட்டுக்கள் என்றால் அவை இந்த ஐம்பது, நூறு ரூபா நோட்டுக்கள் தான். ஐந்நூறு, ஆயிரம் ரூபாநோட்டுக்கள் எல்லாம் அப்போது கிடையாது. ஆனாலும் இன்றைய இவைகளைவிட அன்றைய அவைகளின் மதிப்பு பலமடங்கு அதிகம் என்றே சொல்லலாம். அப்போதைய வரதரின் பல குறிப்பு நாலாம் பதிப்பினைத் தட்டிப் பார்க்கின்றேன். பலாலி, கொழும்புக்கான விமானக் கட்டணம் அறுபது ரூபா என்றிருந்தது. அப்போது கேட்ட ஒரு சினிமாப்பாடல் 'ஐந்து ரூபா நோட்டை கொஞ்சம் கொஞ்சம் மாற்றி மிச்சமில்லை – காசு மிச்சமில்லை''. அது அப்போது ஒன்றும் பழைய பாடலில்லை....

பழைய் நோட்டுக்களுக்குப் பதிலாக புதிய நோட்டுக்களை வங்கிகளிலே பெற்றுக்கொள்ளலாம் என்று சாதாரணமாகச் சொல்லப்பட்டாலும், முதலில் வங்கிகளிலே கொண்டுபோய் போடுவது என்பது தான் முக்கியம். பெருந்தொகையாக அப்படிப் பணத்தைக் கொண்டுபோய் வங்கியில் வைப்புச் செய்தால், அவைகளில் ஒரு பகுதியை அரசாங்கம் பறிமுதல் செய்துவிடலாம் அல்லது அவைகளுக்கு வரி விதிக்கப் படலாம் என்றெல்லாம் கூட அப்போது அச்சம் நிலவியது.

பழைய நோட்டுக்களெல்லாம் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் தான் செல்லுபடியாகாது. என்றாலும் அவைகளைக் கட்டிக்கொள்ள எவரும் முன்வரவில்லை. மரண தண்டனைக்கு நாள் குறித்த ஒருவனுக்குப் போய் திருமணம் பேச முடியுமா? அந்த நிலைதான்எங்கும். சம்பளம் பெற வேண்டிய ஊழியர்கள் பழைய நோட்டுக்களைப் பெற மறுத்தார்கள். ஏற்கனவே கடன் கொடுத்தவன்கூட தனக்குப் புதுநோட்டாகத்தான் திருப்பித் தரவேண்டும் என்றான்.

கடைக்காரர்களும் புதிய நோட்டுக்குத் தான் வியாபாரம் என்று ஒற்றைக்காலில் கடையைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அது தீபாவளியை அண்டிய காலமாக இருந்ததால் புடைவைக் கடைக்காரர்களும் கொள்வனவு செய்வாரின்றி கடைகளை மெல்ல மெல்லக் கட்டிக்கொண்டிருந்தார்கள். நிதி அமைச்சரின் அந்த அறிவிப்பை தமிழர்கள் தீபாவளியைக் கொண்டாடவிடாது மேற்கொள்ளப்பட்ட இனத்துவேச சதி நடவடிக்கையாக அப்போது ஆய்வுசெய்த வர்களும் இருந்தனர்.





இவைகளுக்குப் பதில் வங்கிகளில் மட்டும்வெள்ளம்போல்கூட்டம் அலைமோதியது. பழைய நோட்டுக்களை வைப்புச் செய்வதற்கென ஒருகூட்டம். வைப்புச் செய்தவைகளிலிருந்து புதிய நோட்டுக்களை மீளப் பெறுவதற்கென இன்னொரு கூட்டம். இதைவிட முக்கியமாக வங்கியில் கணக்கு எதுவுமில்லாதவர்கள் கூப்பன் புத்தகத்தைக் காட்டி ஒரு தொகையை மாற்றிக் கொள்ளலாம் என்றிருந்தது. அதற்கு மாபெரும் கூட்டம்.

'அன்றாடங்காய்ச்சிகள்''சாமானியர்கள்' என்றெல்லாம் அறிஞர் அண்ணா குறிப்பிடுவாரே, அவர்களுக்கெல்லாம் அப்போது இந்தக் கவலைகள் இருந்ததில்லை. அவர்கள் இந்தக் கூட்டத்தை வேடிக்கை பார்க்க மட்டும் பெரிய கடைப்பக்கம் போனார்கள். அவர்கள் வங்கியிலிருந்து வெளியே வந்த தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் அந்தப் புதிய அதிசய நோட்டுக்களை ஒருமுறை வாங்கிப் பார்ப்பதுடன் திருப்தியடைந்தார்கள். ஆனால், அப்படியான பலரிடம் கூட சில பெருச்சாளிகள் கூப்பன் புத்தகங்களை இரவல் பெற்றுப் பயன்படுத்தத் தவறவில்லை. அப்படி மாற்றும்போது கூப்பன் புத்தக முகப்பில் வங்கி முத்திரையும், எவ்வளவு பணம் மாற்றப்பட்டது என்ற விவரமும் பொறிக்கப்பட்டன.

நிதி அமைச்சர் அறிவித்த அந்தக்கால எல்லையும் முடிவடைந்துவிட்டது. இனியும் எவராவது தப்பித்தவறி பழைய நோட்டுக்களை வைத்திருந்தால் அவை செல்லாதவைகள் என்ற நிலையிலே... அஞ்சல் அலுவலகங்களிலே பொதுவான வாராந்த உதவிப்பணம் பெற வந்தவர்களிடையே ஒரே சலசலப்பு .... சிலுசிலுப்பு... அவர்கள் தங்கள் நிவாரண அட்டையுடன் கூப்பன் புத்தகங்களையும் கொண்டு வரும்படி பணிக்கப்பட்டனர். அவர்களில் எவரிடமாவது கூப்பனில் வங்கியில் பணம் மாற்றிய குறிப்புகளிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டது. அத மேலிடத்து உத்தரவாம்.

அப்படி நிவாரணப்பணம் மறுக்கப்பட்டவர்கள் பின்னர் விதானைமார்கள், கச்சேரி, சமூகசேவைப்பகுதி என்றெல்லாம் தங்களின் கருணை விண்ணப்பங்களுடன் அலைந்து திரிந்தார்கள்.

சீவனோபாயத்துக்காக வளர்த்து வந்த ஆட்டை விற்றதன் மூலம் கிடைத்த பணம் தான் அதுவென்று அநேகமாக எல்லோருமே ஒரே மாதிரியான காரணம் காட்டியிருந்தார்கள்.

தீபாவளி சமயத்தில் மேற்படி அனர்த்தம் நடந்ததால்தான் அந்த ஆட்டு யோசனை.

**– சண் அங்கிள் –**

நீண்ட அலைச்சல்கள், தாமதங்களின் பின்னர் அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுபெருமனது கொண்டு அவர்கள் மீது கருணை காட்டப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். எப்படி என்று தானே கேட்கிறீர்கள்?

ஐம்பது ரூபா மாற்றியவர்களுக்கு ஐந்து மாதங்களின் பின்னர் உதவிப்பணம் வழங்கப்படும். (அப்பொழுது மாதாந்த உதவிப் பணம் ரூபா பத்தாக இருந்ததாக நினைவு.) அதபோல நூறு ரூபா மாற்றியவர்களுக்கு 10 மாதங்களின் பின்னர் அது நிச்சயம்..... இப்படியாகத்தான்.

## இது பழனி மலையல்ல நாடாளுமன்றம்

ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்திலேதான் இதுவும் நடந்தது. காலித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.தஹநாயக்கா நாடாளுமன்றத்தை நோக்கி கோவணத்துடன் வந்து கொண்டிருக்கிறார். அவரை ''ஏன் இப்படிக் கோவணத்துடன் இங்குற்றோர் ஆண்டியானாய்.... இது பழனி மலை அல்லவே... நாடாளுமன்றம் அல்லவோ'' என்று எவரும் கேட்கவில்லை. காரணம்அவரது நோக்கமே அக்கோலத்துடன் அதற்குள் நுளைய வேண்டும் என்பது தான்!

அக்காலத்தில் அரிசி, மா போன்ற உணவுப்பொருட்களின் மீதும், துணி வகைகளின் இறக்குமதிகள் மீதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவைகளைக்கொண்டு செல்வது கூடக் குற்றமாக்கப்பட்டிருந்தது. இதற்காக அப்பொழுது சோதனைகளும் சுற்றி வளைப்புக்களும் இருந்தன.

அந்தளவுக்கு உணவுக்கும், உணவுப்பொருள்களுக்கும் தட்டுப்பாடுகளும், கட்டுப்பாடுகளும் இருந்தன.

அரசாங்கமும் நாட்டின் நன்மை கருதி அரிசி, மா, உணவு வகைகளை மக்கள் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் வாரத்தில் ஒரு நாள் அதைத் தொட்டாலே குற்றம் என்றும் உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த நாளில் அவைகளுக்குப் பதில் மரவள்ளிக்கிழங்கு போன்றவைகளை (இஞ்சிச் சம்பலுடன் அல்ல) சாப்பிடச் சொன்னார்கள். பாண் கிடைப்பது கூடக் குதிரைக் கொம்பு தான். கிடைத்தாலும தலைகளுக்கு இத்தனை என்ற அடிப்படையில் தான். இதையும் தினமும் பெற முடியாது. இது கூடச் சுழற்சி முறையில் தான்.

துணி வகைகளைப் பொறுத்தவரை கூட இது தான் கதை... கூப்பனுக்கு இத்தனை யார் என்று அதற்கும் கட்டுப்பாடு. அவர்கள் வழங்கும் துணி பெண்களுக்கென்றால் 'உட்பாவாடை'க்கும் ஆண்களுக்கென்றால்'அதற்கும் தான்' போதும் என்றெல்லாம் கேலி பேசப்பட்ட அந்த வேளைதான் தஹநாயக்காவும் காலிமுகக் கடற்கரைக்கு எதிரேயுள்ள அப்போதைய நாடாளுமன்றத்துக்கு முன்னே அக்கோலத்தில் வந்தார்.

எண்ணெய் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் மாட்டு வண்டியில் நாடாளுமன்றம் சென்றார் அல்லவா? அருகேயுள்ள வாகனத்தரிப்பிடத்திலே வண்டியை நிறுத்திவிட்டு மாடுகளையும் சாய்த்துக் கொண்டு போய்த் தண்ணி காட்டிக் கட்டிவிட்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றார். ஆனால், அன்று தஹநாயக்கா நாடாளுமன்றத்துக்குள் சென்றாரா என்ற விவரம் தெரியவில்லை. நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் என்றெல்லாம் இருக்கிறன அல்லவா?

ஒரே சகோதரிகள் ஒரே மாதிரியான துணியில் சட்டை அணிந்திருந்தால் ' என்ன கூப்பன் துணியா?' என்று கேட்பதுண்டல்லவா? அதற்கு அடிப்படைய முக்கியமாக இங்கே குறிப்பிட்ட பங்கீட்டுத் துணிகள் விநியோகம் தான். மாணவர்களுக்குத் தான் சீருடை என்றில்லை. ஒருவித குறுக்குக் கோடிட்ட காற்சட்டைத் துணி.. காற்சட்டைக் காரர்கள் யாரைப் பார்த்தாலும் அப்போது அந்தத் துணியில்தான்.... சேர்த்தைத் துணிகளைப் பொறுத்தவரையும் கூட ஒரு சில மாதிரி வகைகள் தான். மைமல் பொழுதில் தவறுதலாக மனைவி என்று நினைத்து மச்சானைக் கூப்பிட்டுவிட்டு... 'ஐயாம் சோ சொறி...'' சொன்னவர்களு இருந்திருப்பார்கள்.

## தோற்றாலும் செல்வாக்குத்தான்!

மானிப்பாய்த் தொகுதியில் முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவர் அலோசியஸ். இவரை நான் ஆதரிக்காவிட்டாலும் இவருக்காக தேர்தலில் நான் வேலை செய்யாவிட்டாலும் இவர் என்னுடைய ஒரு நெருங்கிய நண்பர். இவருடன் நான் இந்தியா சென்று திரும்பியபோது நடைபெற்ற சம்பவம் இது.

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குள் இருந்து நள்ளிரவைத் தாண்டிய அந்த நேரத்தில் வெளியேவருகிறோம். இரண்டு பொலிஸார் இடையிலே எம்மை மறித்து சோதனை செய்கின்றார்கள். நாம் பயணப் பொதிகளைத்திறந்து காட்டுகிறோம். இந்தியப் பொருள்களையும, சற்று அதிகமாக இருந்த ''கிப்ஸ்'' சாரங்களையும் பார்த்து விட்டு– ''கொந்தாய் சாரம்'' என வியக்கிறார்கள். ''வாருங்கள் நிலையம் போவோம்.'' என அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தை நோக்கி எங்களை அழைத்துச் செல்கின்றார்கள். நிலையத்தை நெருங்கும் சமயத்தில் நண்பர் அலோசியஸ் எதையோ நினைத்தவராக தான் கடந்த தேர்தலில் யூ.என்.பி.மானிப்பாய் வேட்பாளர் என்று சொல்கிறார். அது சம்பந்தமான சில கடிதங்களையும் வெளியே எடுக்கிறார். பொலிஸார் அவைகளைப் பார்த்துவிட்டு ''அப்படியா?'' என அசந்துவிட்டனர்.

தாங்கள் தவறுவிட்டதைப் போல முழிக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்தச் சமயம் பார்த்து நானும் ''நான்தான் அவருடைய செயலாளர்'' என்றொரு பொய்யைச் சொன்னேன். அவர்கள் தங்கள் தவறுக்கு வருந்தியதுடன், மன்னிபபும் கேட்டு எங்களையும் எங்கள் பொதிகளையும் உருப்படியாக விட்டார்கள்.

தேர்தலில் வென்றால் எம்.பி.பதவி - பரிசு என்றால், தோற்றவர்களுக்கும் பரிசு இருக்கிறது. அதிலே ஒன்றுதான் இதுவும்.

அறிஞர் அண்ணாவின் காலத்தில் அவருக்கு எதிராக ஒரு செல்வாக்குள்ள டாக்டர் தேர்தலில் நின்றார். அண்ணாவுக்கு ஆதரவாக நடை பெற்ற ஒரு தேர்தல் கூட்டத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் ஒரு பேச்சாளர். அப்போது அவர் அண்ணாவை எதிர்த்துப் போட்டியிடுபவருக்கு புகழாரம் சூட்டத் தொடங்கினாராம். இதென்ன அண்ணாவுக்கு வாக்குகேட்க வந்தவர் இப்படி பேசிக்கொண்டிருக்கிறாரே என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக்கையில் கலைவாணர் இப்படித் தமது பேச்சை முடித்தாராம்.

''இப்படிப்பட்ட ஒருவரின் சேவை உங்களுக்குத் தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமானால் அவரை சட்டசபைக்கு அனுப்பிவிடாதீர்கள். அண்ணாவுக்கு வாக்களியுங்கள்' என்றாராம்.

இங்கே இப்பொழுதுள்ள விகிதாசாரத் தேர்தல்முறை வித்தியாசமானது. வேண்டுமானால் விருப்பு வாக்கு என்று வரும்போது.. உங்களுக்கு வேண்டியவர்களுக்கு.. உங்களோடு இருக்கவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு.. நான் சொல்லவில்லை .. கலைவாணர் சொன்ன முறையில்.




ஒல்ட் ரிசர்வ்
இன்பலோகத்தின் இனிய அனுபவம்

சிலருக்கு அது 100% கலாரசனை.
ஏனையோருக்கு அது 100% சிறப்பு ஆற்றலின் தெவிட்டாத விருந்து.
எனவேதான், மாலைப்பொழுதை மிகவுயர்ந்த மட்டத்தில் எல்லையற்ற இன்ப உணர்வுகளுடன் கழிக்க விரும்பும் அனைவரினதும் ஏகோபித்த தெரிவாக ஒல்ட் ரிசர்வ் விளங்குகின்றது.

உங்கள் ஆசனத்தை ரிசர்வ் செய்யுங்கள்...!

இன்டர்நஷனல் டிஸ்டிலர்ஸ் லங்கா லிமிட்டட்

# கருணாவுக்கு ஒரு பகிரங்க மடல்!

அன்புள்ள உயர் திரு. கருணா அவர்களுக்கு!

பத்தாண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள்.

''மாத்தையா தலைமையிலான சதி முயற்சியை எவ்வாறு உங்களால் கண்டு பிடிக்க முடிந்தது?'' என்று கேட்டபோது, பொட்டம்மான் இரத்தினச் சுருக்கமாகப் பதில் சொன்னார். ''திறமை அரைவாசி. அதிஷ்டம் அரைவாசி'' என்று.

இந்த அதிஷ்டம் பற்றி என்னிடம் தனிப்பட்ட ஒரு கருத்து உண்டு. அது — நெஞ்சில் வஞ்சகம் இல்லாதவர்களுக்கு, நேர்மையின் பக்கம் இருப்பவர்களுக்கு, ஒரு சீரிய நேரான பாதையில் துன்பங்களைத் தாங்கி முன்னேறுகிறவர்களுக்கு மட்டும் பொருத்தமான நேரத்தில், பொருத்தமான வடிவத்தில் அதிஷ்டம் துணைநிற்கும். சில சமயங்களில் அது அவர்களை விட்டு விலகி இருப்பது போல் தோன்றும்; ஆனால், அதன் அர்த்தம், அவர்களை அது கைவிட்டுவிட்டது என்பதல்ல; மாறாக அது வேறொரு — புதிரான — வடிவத்தில் அவர்களுக்கு உதவுகின்றது என்பதுவே ஆகும்.

இப்போது ஒரு விடயம் தெளிவாகப் புரிகிறது.

'இந்தத் தடவை அந்த அதிஷ்டம் ஒரு வித்தியாசமான வடிவத்தில் வேலை செய்திருக்கிறது' என்பதுதான் அது.

உங்களைக் கொண்டுவித்தே உங்கள் துரோகத்தனத்தை உலகிற்குச் சொல்லுவித்த தன் மூலம், பழி விழுந்து விடாமல் பிரபாகரனையும், பிளவுபட்டுவிடாமல் போராட்டத்தையும் அது பாதுகாத்திருக்கிறது.

அந்த அதிஷ்டம் இன்னொரு அளப்பரிய காரியத்தையும் செய்திருக்கிறது. பாராமுகமாக — அலட்சியமாக — அக்கறையற்று இருப்பது போல இருந்த — அல்லது, கருத்து ஒருமைப்பாடின்மை காரணமாக சற்றே விலகி இருந்த — சொற்ப தமிழர்களையும் வாய் திறந்து பேச வைத்திருக்கிறது; நெருங்கி வர வைத்திருக்கிறது. உங்கள் துரோகத்தனத்தைக் கண்டு அப்படியானவர்கள் கூட எவ்வளவு கொதித்துப் போயிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா...? அந்த வகையில் நன்றி — அதிஷ்டத்திற்கும் உங்களுக்கும்.

## குற்றச்சாட்டு

உங்களைப் பற்றி பல குற்றச்சாட்டுகள் வருகின்றன. நிதி மோசடி என்பதிலிருந்து கொலை மற்றும் தகாத உறவுவரை ஒரு நீண்ட குற்றப்பட்டியல் மக்கள் மன்றத்தின் முன்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் உண்மை இருக்கலாம். இல்லாமல் இருக்கலாம். உண்மை இருந்தாலும் நீங்கள் அதை ''இல்லை''யென மறுக்கலாம். அதனால், அது பற்றி நான் இங்கு சொல்ல எதுவுமேயில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்ல நீங்களே அடுக்கிய காரணப்பட்டியல்பற்றி உங்களுக்குச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகின்றேன்.

அம்மான்!

தலைவர் உங்களுக்கு எதைச் செய்யத் தவறினார்? என்ன குறை வைத்தார்?

என்னைப் பொறுத்த வரையில், உங்கள் விடயத்தில் அவர் பக்கசார்பாக நடந்துகொண்டார் என்று நீங்கள் வைக்கும் குற்றச்சாட்டு ஒரு வகையில் உண்மை என்று கூடச் சொல்ல முடியும். எவ்வாறெனில் — மரபு வழிப் போரில் உங்களை விட அனுபவம் மிக்க... யுத்த முனைகளிலே உங்களை விட அதிக வெற்றிகளைக் குவித்த...வெற்றிகரமான படைநகர்த்தல்களில் உங்களை விட நிச்சயமாகத் திறமை வாய்ந்த... எத்தனையோ தளபதிகள் தன்னிடம் இருந்தபோதும், மட்டக்களப்பிலிருந்து உங்களைக் கொண்டு வந்து — தமிழீழத் தரைப்படையின தலைமை —கள ஒருங்கிணைப்பு—தளபதியாக நியமித்தார். அந்த வகையில், — இதுவரை நீங்களே பார்த்திராத கருணாவை தலைவர் பார்த்திருக்கிறார் என்று தானே அர்த்தம்?

தமிழீழத்தின் முழுத் தரைப்படை நகர்த்தல்களையுமே கையாளும் வல்லமை மிக்க தளபதியாக அவர் உங்களைப் பார்த்தபோது, நீங்களோ — பிரதேச வாதம் பேசிக்கொண்டு — உங்களை நீங்களே மட்டக்களப்பு — அம்பாறை என்ற சிறிய வட்டத்துக்குள் சுருக்கிக் கொண்டு விட்டீர்கள்.

இத்தகைய ஒரு பொறுப்பை உங்களிடம் வழங்கும் போது, தலைவர் அவர்கள் இரண்டு விடயங்களைக் கருதியிருக்கலாம் என்று நான் நம்புகின்றேன்.

முதலாவது—பால்ராஜ்ஜும் தீபனும், சொர்ணமும் பானுவும், ஜெயமும் விதுசாவும் — இவர்கள்போன்ற ஏனைய அனுபவம் மிக்க தளபதிகளும் — அதையிட்டுப் பொறாமைப் படாமல் தனது நியமனத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர்கள் மீதிருந்த நம்பிக்கை.

இரண்டாவது — கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உங்களை வளர்த்து, உயர்த்தி, அத்தகைய ஒரு பெரும் பொறுப்பு நிலையில் அமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற ஆதங்கம்.

அத்தகைய ஆதங்கத்தோடு உங்களை வளர்த்து ஆளாக்கிய தலைவரை, ''தனக்கு நிகராக யாரும் வளர்ந்து விட, அவர் விட மாட்டார்'' என்று Hindu பத்திரிகையாளரிடம் நீங்கள் கூறியது, பார்த்துப் பார்த்து வளர்த்த பிள்ளை முதுகிலே அல்ல, நெஞ்சிலே குத்திவிட்ட பச்சைத் துரோகம் இல்லையா?

## அண்டப்புளுகு

இந்தியாக்காரரிடம் எதையோ எதிர்பார்த்து Hindu பத்திரிகையாளருக்கு நீங்கள் அளந்த கதை, அண்டப்புளுகு என்பது இந்தியருக்கே தெரியும்.

புலிகளின் படைகளை கெரில்லா யுத்தக் குழுக்கள் என்ற நிலையிலிருந்து மரபு வழிப் போராளிகளாக வளர்த்துவிட்ட பெருமை உங்களையே சாரும் என நீங்கள் கதை விடுகின்றீர்கள். அது ஒரு சர்வ முட்டாள்த்தனம் என்று உங்களுக்குப் புரியவேயில்லையா? மட்டக்களப்புக் காடுகளுக்குள் கெரில்லாத் தாக்குதல்கள் கூட நடத்த முடியாமல் — நீங்கள் பதுங்கிக் கிடந்த நாட்களிலேயே சொந்தத் தொழிற்சாலைகளில் பீரங்கிகளைத் தயாரித்து — வடக்குப்போர் முனைகளில், மரபுவழிச் சமர்களை நடத்தியவர் பிரபாகரன் என்பது உங்களுக்கு உண்மையிலேயே தெரியாதா?



கருணா

யுத்தக்களங்களில் நவீன தொழில் நுட்பங்களை நீங்களே அறிமுகப்படுத்தினீர்கள் என இன்னொரு கதை அளந்துள்ளீர்கள்.

சமர்க்களங்களில் பிரபாகரன் அறிமுகப்படுத்திய நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் எங்கிருந்து புலிகளிடம் வந்து சேர்ந்தன என்பதுவே உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நான் நினைக்கவில்லை.

றொமெல், அவன் இவனென்று இரண்டாம் உலகயுத்த காலத்துப் பழைய — உளுத்துப் போன — புத்தகங்களைப் படித்து நீங்களேதான் புலிகளுக்கு யுத்த உத்திகளைச் சொல்லிக் கொடுத்தீர்கள் எனவும் நீங்கள் ஒரு கதை அளக்கின்றீர்கள்.

உங்களுக்குத் தெரியுமா பிரபாகரன் எப்படி கட்டுநாயக்காவைத் துவம்சம் செய்தார் என்பதை அறிய நவீன உலகத்து உச்ச வல்லரசின் 'ஐங்கோண'க்காரர்களே அவதிப் படுகின்றார்கள் என்பது. "There Must be few Military Geniuses in the North; at least one must be there for sure" (வடக்கில் கட்டாயம் சில இராணுவ மேதாவிகள் இருக்க வேண்டும். ஆகக் குறைந்தது ஒருவராவது அங்கிருப்பது நிச்சயம்) என்று ஒரு 'ஐங்கோண' அதிகாரி எங்கள் ஆட்களிடமே வாய் விட்டுச் சொல்லியிருக்கிறார். அந்த Military Genius (இராணுவ மேதாவி) யார் என்பது உங்களுக்கும், எங்களுக்கும் எல்லோருக்கும் தெரியும்.

இங்கே ஆகப் பெரிய நகைப்பு என்ன தெரியுமா? 'ஜெயசிக்குறு'வை நீங்கள்தான் முறியடித்தீர்கள் எனவும் 'ஓயாத அலைக'ளை நீங்கள்தான் நடத்தினீர்கள் எனவும், ஆனையிறவை நீங்கள்தான் பிடித்தீர்கள் எனவும் — தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தாக்கம் மிகுந்த திருப்புமுனைகளை ஏற்படுத்திய இராணுவ வெற்றிகளின் சூத்திரதாரி நீங்கள் மட்டுமே என்றும் விடயமறியாத வெளிநாட்டு ஊடகக்காரர்களும், சில தமிழ் ஆய்வாளர்களும் விடயமறிந்தவர்கள் போல எழுதுகிற கற்பனைக் கதைகளை உண்மையென்று நீங்களே நம்பிவிடுவது தான்.

## உப்புச்சப்பற்ற வாதம்

வடக்குச் சண்டையை வெல்லுவதற்கு நீங்கள் ஆள்கொடுத்தீர்கள் என்ற ஒரு பழைய கணக்கை நீங்கள் இப்போது காட்டுகின்றீர்கள். அது நீங்கள் பிரதேசவாதம் பேசும் ஒரு வடிவம்.

நான் இங்கே இன்னொரு விதமான தர்க்கத்தை முன் வைக்கின்றேன்.

''வடக்குச் சண்டைக்காக மட்டக்களப்பிலே முகாம்களை மூடி எதிரி யாழ்ப்பாணத்திற்குப் படைகளை நகர்த்துகின்றான். இந்தச் சண்டையில் எவ்வளவு அதிகமான இழப்பை நாம் அவனுக்கு ஏற்படுத்துகின்றோமோ, அதைவிட அதிக படைகள் அவனுக்கு மேலும் தேவைப்படும். அப்போது மேலும் மேலும் முகாம்களை மூடி அவன் மட்டக்களப்பில் நிலங்களைக் கைவிடுவான். அதேசமயம், எதிரிக்கு இங்கே அதிக இழப்பை ஏற்படுத்த வேண்டுமானால், எம்மிடமும் வலுவான படை இருக்க வேண்டும். ஆகவே நாமும் படைகளை வடக்கிற்கு நகர்த்துவது நன்மை பயக்கும்'' என்று தலைவர் உங்களுக்குத் தகவல் அனுப்பியிருந்தார் என 'ஜெயசிக்குறு'வின் ஆரம்ப காலத்தில் நீங்களே ஒரு நாள் என்னிடம் கூறியிருக்கின்றீர்கள். நீங்கள் அதை சொல்லியிருக்காவிட்டாலும் அது ஒன்றும் விளங்கிக் கொள்வதற்குக் கடினமான போரியல் சூட்சுமம் அல்ல. ஆகவே — வடக்கைப் பாதுகாக்க மட்டும் மட்டக்களப்புப்போராளிகளை அனுப்பியதாக நீங்கள் முன்வைக்கும் வாதம் உப்புச்சப்பற்றது.

அதே யாழ்ப்பாணம் மற்றும் வன்னிச்சண்டைகளை நான் இன்னொரு விதமாகப் பார்க்கிறேன். அது உண்மையில் மட்டக்களப்புக்கான சண்டை. ஆனால், வடக்கில் நடைபெற்றிருக்கிறது. நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். நானும் பிரதேசவாதம் பேச முடியும்.' எங்கள் வீடுகளின் மேல் பீரங்கிக் குண்டுகளைத் தாங்கி... எங்கள் பாடசாலைகளின் மேல் விமானக் குண்டுகளைத் தாங்கி... எங்கள் உடல்களின் மேல் துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கி... எங்கள் வாழ்வுகளைச் சீரழித்து... நாங்கள் நூறறுக் கணக்கில் உயிரிழந்து.. நாங்கள் ஐநூறாயிரம் பேர் ஒரே இரவில் அகதிகளாகி...எங்கள் யாழ்ப்பாணத்தை எதிரியிடம் பறிகொடுத்து ... கடைசியில் மீட்டெடுத்தது உங்கள் மட்டக்களப்பைத் தானே''இப்படியாக நானும் பிரதேச வாதம் பேச முடியும் அல்லவா? ஆனால் நான் அப்படிப் பேசப்போவதில்லை. ஏனெனில்— இது தமிழீழத்துக்கான போர். தமிழீழத்தின் அனைத்துப்பிரதேச மக்களுமே—ஏதோ ஒரு அளவீட்டில், ஏதோ ஒரு பரிமாணத்தில், ஏதோ ஒரு காலகட்டத்தில், இந்தப் போரில் தங்கள் தங்கள் பங்களிப்பை ஏதோ ஒரு வகையில் வழங்கியுள்ளார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயமும் கிடையாது. எங்கள் நாட்டை மீட்பதற்காக — நாங்கள் எல்லோரும் சேர்ந்து, நாங்கள் எல்லோருமே இழப்புகளைத் தாங்கி, நாங்கள் எல்லோருமே போராடி, நாங்கள் எல்லோருமே வெற்றிகளைப் பெற்றோம்.

## யாழ்ப்பாணமும் நீங்களும்

இங்கே இன்னொரு வரலாற்றுப்போக்கையும் தாங்கள் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இயக்கத்தின் பொறுப்புகளில் எல்லாம் வல்வெட்டித்துறைக்காரர்களே இருந்தார்கள். அப்போது புலிப்படையில் யாரும் வல்வெட்டித்துறை வாதம் பேசியதில்லை. பின்பு — மெல்ல மெல்ல அதில் வடமராட்சிக்காரர்கள் நியமனம் பெற்றார்கள். அப்போது புலிப்படையில் யாரும் வடமராட்சிவாதம் பேசியதில்லை. பின்பு— மெல்ல மெல்ல யாழ்.மாவட்டத்தார் பொறுப்புகளுக்கு வந்தார்கள். ஒரு காலத்தில் தமிழீழத்தின் எல்லா மாவட்டத் தளபதிகளாகவும் யாழ்ப்பாணத்தாரே இருந்தார்கள். அப்போது புலிப்படையில் யாரும் யாழ்ப்பாண வாதம் பேசியதில்லை. இவ்வாறாக இருநது வந்த ஒரு காலகட்டத்தில் தலைவருக்கு அடுத்த நிலைக்கு மாத்தையா நியமனம் பெற்றார். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். பின்பு ஒரு கட்டத்தில் தலைவருக்கு அடுத்தபடியான தளபதியாக பால்ராஜ் நியமனம் பெற்றார். அவர் வன்னியிலிருந்து வந்தவர். பின்பு ஒரு காலகட்டத்தில் அந்தப் பொறுப்பு தளபதி சொர்ணத்திற்கு வழங்கப்பட்டது. அவர், திருக்கோணமலையிலிருந்து வந்தவர். கடைசியாக ஒரு காலகட்டத்தில் அத்தகைய ஒரு தளபதியாக நீங்கள் நியமனம் பெற்றீர்கள். நீங்கள் மட்டக்களப்பிலிருந்து வந்திருந்தவர். உங்களுக்கு உதவியாக தளபதி தீபன் நியமிக்கப்பட்டார். அவர் வன்னியைச் சேர்ந்தவர்.

இவ்வாறாக, போராட்டத்தின் படிநிலை வளர்ச்சிக்கேற்ப — அனுபவம், ஆற்றல், செயற்திறனின் அடிப்படையில் கடமைகள் வழங்கப்பட்டு —பொறுப்புகளில் பொருத்தமானவர்கள், பொருத்தமான நேரங்களில் அமர்த்தப்பட்டு வந்தார்கள். என்னைப் பொறுத்த வரையில் தலைவர் அதை மிகச் செவ்வனவே செய்து வந்திருக்கிறார்.

அன்று மாத்தையாவும், இன்று நீங்களும் — உங்களுக்குக் கிடைத்த பொறுப்பு, அதன் மூலம் உங்களுக்குக் கிடைத்த வசதிகள், அதை வைத்து நீங்கள் தேடிய செல்வாக்கு, இவற்றில் உச்சப் பெறுபேறான புகழ், இவை எல்லாமும் சேர்ந்து — உங்கள் தலைக்குப்பின்னால் ஓர் அகற்றப்பட முடியாத பேரொளிச்சக்கரத்தைச் சுழல விட்டிருப்பதாக நம்பி உங்களை நீங்களே குழப்பிக் கொண்டீர்கள்.

ஆனால்,பிரபாகரனோ அன்றும்,இன்றும்,என்றும் மிகத் தெளிவான வளர்ச்சியின் ஊடாகப் போராட்டத்தை நகர்த்திச் செல்கின்றார்.

## பெரிய நீதிமன்றம் மனச்சாட்சி

திருவாளர் கருணா அவர்களே,

உங்களைக் கொல்லுவதற்கு புலிகளின் 'கொலைப்படைகள்' அலைந்து திரிவதாக நீங்கள் ஒரு செய்தியை பரப்பியிருக்கின்றீர்கள். அதில் உண்மை இருக்கலாம். அல்லது பொய் இருக்கலாம். தலைவரும் தமிழினமும் உங்களைத் தண்டிக்கலாம்; அல்லது மன்னிக்கலாம். அதைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால், ஒரு மனிதனின் மிகப் பெரிய நீதிமன்றம் மனச்சாட்சி அல்லவா அம்மான்....? இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அது உங்களை வதைக்காதா? எங்கோ ஒரு மூலையில் நீங்கள் தப்பிப்பிழைத்து இருந்துவிட்டால் — உங்களுக்கு ஒரு 80...90 வயது இருக்கும் போது— நோய்வாய்ப்பட்டோ அல்லது வயது வந்தோ மரணம் தவிர்க்க முடியாதது என ஆகி சாவுப்படுக்கையில் இருக்கும்போது, 'ஒரு நேர்மையான—சரியான — மனிதனாக நான் வாழ்ந்தேனா என்ற ஒரு கேள்வியை உங்களை நோக்கியே நீங்கள் கேட்க மாட்டீர்களா? எனக்கு சோறு போட்ட மக்களுக்கு நான் விசுவாசமாக வாழ்ந்தேனா? என்று ஒரு சுய விசாரணை செய்யமாட்டீர்களா...? அப்போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்பதை இப்போது யோசித்துப்பாருங்கள். தமிழ்த்தேசிய இனம் உங்களை மன்னித்தாலும் உங்களுக்குள்ளேயே இருக்கும் முரளிதரன் என்ற தமிழனின் மனச்சாட்சி உங்கள் முகத்தில் காறித் துப்பாதா?

சரி... நாளைக்கு நடப்பது எல்லாவற்றையும் விடுங்கள்...!

நல்ல ஒரு நல்ல நிலா நாளில்—

உங்களைச்சுற்றி நீங்கள் வைத்திருக்கும் பரிவாரங்களையெல்லாம் விட்டுவிட்டு—

தரவையில் நீங்கள் விதைத்து வைத்திருக்கும் மாவீரர் துயிலுமில்லத்துக்குப்போங்கள்.

நீண்டு கிடக்கும் கல்லறை வரிசைகளினூடாக—

தன்னந்தனியாக— மெதுவாக நடவுங்கள்.

ஒவ்வொரு கல்லறைகளின் மீதிருக்கும் பெயர்களையும், அந்த நிலா வெளிச்சத்தில ஒவ்வொன்றாகப் படியுங்கள்.

பிரபாகரனின் பெயராலும், தமிழீழத் தேசியத்தின் பெயராலும்—

நீங்கள் சேர்த்தெடுத்து வளர்த்தெடுத்த அந்த ஒவ்வொரு போராளியின் முகத்தையும் உங்கள் மனக் கண்ணில் கொண்டு வந்து பாருங்கள்.

ஏக்கத்தைத் தேக்கிய விழிகளோடு உங்களைப் பார்த்து—

''ஏன் அம்மான் இப்படிச் செய்துவிட்டீர்கள்?'' என்று அவர்கள் கேட்பதை உங்கள் மனச்சாட்சி உங்களுக்கு உணர்த்தும்.

அவர்களுக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீங்கள் உருவாக்கியுள்ள இன்றைய இக்கட்டான சூழல சுமுகமாகவும்— வேகமாகவும் தீர்வுக்கு வர ஒரே வழிதான் உண்டு. அது உங்கள் மன அரங்கில் மாற்றம் நிகழ வேண்டும். 20 ஆண்டு காலமாக எந்த மக்களுக்காக போராடினீர்களோ அந்த மக்களுக்காக.... கடந்த 20 ஆண்டுகாலமாக நீங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு சரியான அர்த்தத்தை ஏற்படுத்துவதற்காக... ஒரு நல்ல மாற்றத்தை உங்கள் மனதிலும் மட்டக்களப்பு மண்ணிலும் ஏற்படுத்துங்கள். மனமிரங்கி உங்களுக்கு மன்னிப்பளிக்கத் தயாராய் இருக்கும் தலைவரின் கருணையை ஏற்று ஏதாவது ஒரு வெளிநாட்டில் போய் நீரா அக்காவுடனும் குழந்தைகளுடனும் குடும்பம் நடத்தினாலும் சரி தான்; அல்லது போராளி ரஞ்சனை அனுப்பியது போல சயனைட்டை சோடாவில் கலந்து குடித்து உங்களுக்கு நீங்களே தண்டனை தேடிக்கொண்டாலும் சரி தான்.

நன்றி.

குழைக்காடான்.

# கடவுளே

அன்று



## கல்வி கண்ணா இருந்த ஊர் பள்ளிகூடத்தயும் யுத்தம் தரை மட்டமாக்கிடுச்சு!

வாரத்துல ஐந்து நாளும் பள்ளிகூடம் சென்று நாம படிச்சது சமூகத்துல பெரிய ஆளா மாறத்தான். எங்களோட ஊர்ல பெரிய டொக்டர் மாதிரி ஊருக்கே வைத்தியம் பார்க்கிற வைத்தியரா ஆகிறது தான் என்னோட எதிர்பார்ப்பா இருந்தது. ஆனால், யாரோ செய்த பாவம் காரணமா வந்த யுத்தம் என்னோட அந்த கனவ கலைச்சிடுச்சு. ஊர்ல இருந்த ஒரே பாடசாலையும் தரைமட்டமாயிடுச்சு.

இன்று



ஆனா, கடைசி ரெண்டு வருஷமா யுத்தம் இல்லாம சமாதானம் இருக்கு. இடிந்து போன பாடசாலை திரும்பவும் கட்டப்பட்டு படிக்க கூடிய நிலை தோன்றியிருக்கு என்னோட டொக்டர் கனவ நனவாக்க முடியும்ன்ற நம்பிக்க இருக்கு. அதற்கு நிலையான சமாதானம் தோன்ற நாமலும் பாடுபடனும்.



நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.

# தலைச்சுற்று, வயிற்றுப் பிரட்டல், வாந்தி நீண்ட பயணத்தின் போது ஏற்படுவது ஏன்?

**கேள்வி:— ஆண் 17. சுய இன்பத்தால் எனது ஆண் உறுப்பு சாய்ந்திருக்கிறது. அது தவிர என்னை அறியாமல் விந்தும் வெளியேறுகிறது. ஆலோசனை தரவும்.**

பதில்:— ஆண்களின் வலது விதை சற்றுப் பணிவாக கீழே இறங்கியும்—இடது விதை சற்று மேலே உயர்ந்தும் இருப்பது இயற்கையானது. இதனால் அநேக ஆண்களின் ஆண் உறுப்பு சற்று சாய்வாக இடது புறம் நோக்கி நிற்பது இயற்கையானதே.

முன்னர் ஒரு பதிலில் கூறியபடி சுய இன்பத்தினால் நோய்கள் ஏற்படுவதில்லை. ஆனால் சுய இன்பத்துக்குக் காரணமான பாலுணர்வுகள் அதிகரிக்கும் போது — விந்து ஸ்கலிதம் ஆவதற்குரிய உணர்வலைகள் தூண்டப்படுகின்றன. இதனால் மூளையில் உள்ள பாலுணர்வுக்குரிய பகுதியானது தூண்டுதலுக்குள்ளாகி— விந்துப்பைகளைச் சுருங்கச் செய்து — விந்தினை வெளியேற்றம் செய்கிறது. சாதாரணமாக உடலுறவின் போது ஏற்படும் செயல்வினை இது தான். ஆனால் இங்கே மனதளவில் பாலுணர்வு தூண்டுதலால் உங்களை அறியாமலே இது ஏற்படுகிறது.

இது நோயல்ல. ஆனால் மனப்பெலவீனம். மனதை அதற்கு விருப்பமான வழியில் அலைய விடாமல் — நல்ல விஷயங்களில் கருத்துக்களை செலுத்த பயிற்சி கொடுப்பதால் — உங்களது இப் பிரச்சினையைத் தீர்க்கலாம். இது பெரிய வேலையல்ல. எந்த நேரமும் பாலுணர்வு விஷயங்களை சிந்திக்காமல் உங்களை மற்ற விஷயங்களில் ஈடுபடுத்தி மனதைக் கட்டுப்படுத்தவும்.

**கேள்வி:— பெண். வயது 40. எனது கன்னத்தின் இரு புறமும்— கறுப்பாக இருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டு வருகிறது. எனது குடும்ப வைத்தியரிடம் காட்டி பூச மருந்தெடுத்தும் குணமாகவில்லை. சிலர் இது ஏழரைச்சனிக் காலத்தில் சாதாரணமாக வரும் ஒன்று. சனி கழிந்ததும் மறைந்து விடும் என்கிறார்கள். மருந்து கூறவும்.**

பதில்:— உங்களுக்கு ஏற்பட்டுள்ளது HYPER PIGMENTATION. அதாவது எமது தோலுக்கு நிறம் தருகின்ற தோலின் அடியில் காணப்படும் MELANOCYTES என்ற கலங்கள் கன்னத்தில் செறிந்து இருப்பதால் இந்நிலை ஏற்படுகிறது.

இந்த நிலை பரம்பரையாக வருவதுமுண்டு. அல்லது வயது போன காலத்தில் வருவதுமுண்டு. இது மெதுவாக ஆரம்பித்து சூரிய ஒளி அதன் மேல் அடிக்கடி படும்போது மேலும் மேலும் கருமையடைவது முண்டு.

இதற்கு குணமாக்க மருந்தில்லை. ஆனால் தோலை வெளிறச் செய்யும் மருந்துகளை (SKIN BLEACHING AGENTS) பூசுவதன் மூலம், மெலனோ சயிட்ஸ் கலங்களின் தொழிற்பாட்டை குறைத்து — தோலை வெளிறச் செய்யலாம். இதற்கு HYDROQUINONE மருந்து உதவுகிறது.

இம் மருந்தை தினமும் இரு தடவை கறுப்பு நிறமாயுள்ள பகுதியில் பூசி வந்தால் ஒரு மாத காலத்தில் பலனைக் காணலாம். குறைந்தது இரு மாத காலத்திற்கு இதனைப் பாவிக்கலாம். அப்படியும் பலன் காணாவிடில் சிகிச்சையை நிறுத்தி தோல் மருத்துவரின் ஆலோசனை பெறவும். இதனை தோலில் அழுத்தமாக தேய்க்கக் கூடாது. இதன் மேல் விரும்பினால் MAKE UP பண்ணலாம். மருந்து பூசும் காலத்தில் வெயில் படாமல் இருப்பது நல்லது. சில HYDROQUINONE மருந்துகள் வெயிலில் இருந்து பாதுகாக்கும் மருந்துகளுடன் சேர்ந்து வருகின்றன. அடிக்கடி வெளியில் செல்பவர்கள் இவ்வகை பூச்சுக்களை உபயோகிக்கலாம்.



சிலருக்கு இந்த HYDROQUINONE மருந்துக்கு ஒவ்வாமை (ALLERGY) ஏற்படலாம். பூசிய இடம் சிவந்தால் அல்லது அரிப்பு ஏற்பட்டால் சிகிச்சையை உடன் நிறுத்த வேண்டும். இம் மருந்து கடைகளில் ELDO PAQUE 2% கிறீம் என்ற பெயரில் கிடைக்கும்.

**கேள்வி:— ஆண். வயது 40. கடந்த வாரம் இரவில் ஜன்னலருகிலிருந்து கொண்டு ரயிலில் பிரயாணம் செய்தேன். பிரயாணம் முழுவதும் முகத்தஇல் குளிர் காற்று அடித்துக்கொண்டு தான் இருந்தது. காலையில் கொழும்பு வந்து சேர்ந்ததும்— ஜன்னல் பக்கம் இருந்த இடது பக்க முகம் இழுத்துக் கொண்டு விட்டது.**

**அந்தப் பக்கக் கண்ணை இறுக்கி மூட முடியவில்லை. அந்தப் பக்கத்து வாய்த் தசைகள் பலமிழந்துவிட்டன. வாய் கொப்புளிக்க தண்ணீர் அருந்தினால் அந்தப் பக்கக் கடைவாயினால் வழிந்தோடுகிறது.**

**எனக்கு இதுவரை 'பிரசர்' (PRESSURE) — நீரிழிவு என்று எதுவித நோயும் இல்லை. இதுவரை சுகதேகியாகவே இருந்தேன். குளிர் அடித்ததால் இந்தமுக வாதம் வந்தது என்கிறார்கள். தானாகவே குணமாகி விடும். பயப்பட வேண்டாம். என்று அரச மருத்துவர் கூறுகிறார். என் நோய் என்ன? இனி என்ன செய்ய வேண்டும்?**

பதில்:— உங்கள் டாக்டர் கூறியது போல் இது பயப்பட வேண்டிய நோய் இல்லை. சில வைரஸ் தாக்கம், குளிர்காற்று படுதல். மனத் தாக்கம், கர்ப்பம், மாதவிலக்கு போன்ற காரணிகளால் முகத்தின் தசைகளை இயங்க வைக்கும் ஏழாவது தலை நரம்பு ($7^{TH}$ CRANIAL NERVE) தாக்கம் அடைந்து — அழற்சி உற்று —அதனது வழியில் நசுங்குவதால்— முகத் தசைகள் வலுவற்றுப்போய் உங்களுக்கு ஏற்பட்டது போல் குணங்குறிகள் ஏற்படுகின்றன.

இதனை BELL'S PALSY என்று கண்டறிந்து சொன்ன DR.CHARLES BELL. இன் பெயரால் குறிப்பிடுவார்கள். உங்கள் டாக்டர் கூறியது போல் இதற்கு விசேட சிகிச்சை எதுவுமில்லை. ஓரிரு மாதங்களில் உங்கள் முகம் பழைய நிலைக்கு வந்துவிடும். என்றாலும் நரம்பு அழற்சியை குறைக்க — PREDNISOLONE மாத்திரைகளையும் B - COMPLEX மாத்திரைகளைம் சில வைத்தியர்கள் தருவார்கள்.

கண்ணீர் இல்லாமல் கண் காயக்கூடும் என்பதால் ARTIFICIAL TEARS கண் மருந்துகள் உபயோகிக்க வேண்டி வரும். இரவில் தூங்கும் போது கண் இமைகளை மூடி விட வேண்டும். எண்ணெய் கொண்டு கன்னத்து தசைகளை மசாஜ் செய்ய வேண்டும்.

**கேள்வி:— வயது 20. ஆண். என்னால் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய முடியாது. பிரயாணம் ஆரம்பித்து அரை மணி நேரத்தில் தலை சுற்ற தொடங்கிவிடும். பின்னர் வாந்தி எடுக்க வரும். பிரயாணம் முடிந்து முழு நாளும் தலைசுற்றும் வயிற்று பிரட்டலும் இருக்கும். இதனால் நான் பிரயாணங்களை தவிர்த்து வருகின்றேன். எனது எதிர் காலம் பற்றி பயமாக இருக்கின்றது.**

பதில்:— உங்கள் நோயை MOTION SICKNESS என்று அழைப்பார்கள். நடுக்காதில் உள்ள சமநிலைப்படுத்தும் உறுப்பு (BALANCE ORGANS) கூடுதலாக பயணத்தின் போது தூண்டப்படுவதால் இப்படி நேருகிறது.

நாம் பயணம் செய்யும் போது பார்வை, செவிப்புலன், தொடுகை உணர்வுகள் எமது பயணத்தின் போது ஏற்படும் சமநிலை மாற்றங்கள் பற்றி மூளைக்கு செய்தி அனுப்புகின்றன. இந்த செய்திகள் அதிகளவில் ஒரே நேரத்தில் மூளைக்கு செல்வதால் — அல்லது செய்திகள் குழம்பி மூளையை அடைவதால் மூளை அவற்றைப்புரிந்து கொள்ளாமல் — பயண நோய் என்ற MOTION SICKNESS க்கு ஆளாகிறது.

ஆட்டமில்லாத குலுங்கலில்லாத பிரயாணம் மேற்கொள்ளுங்கள். பிரயாணத்தின் போது போகும் பாதையை நேரே பார்த்தவாறு உட்காருங்கள். தூரத்தே உள்ள பொருளில் பார்வையை பதித்து கொள்ளுங்கள். பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தாதீர்கள். பிரயாணத்திற்கு முன்னர் வயிறை நிறைத்துக் கொள்ளாதீர்கள். நூல்கள், பத்திரிகைகள் படிக்காதீர்கள். இதற்குப்பின்னரும் இந்தத் தலைசுற்றல், வாந்தி ஏற்பட்டால் AVOMINE DOPERIDONE மாத்திரைகளை பயணம் ஆரம்பிக்க 30 நிமிடத்துக்கு முன்னர் உபயோகியுங்கள்.

அநேகருக்கு ஒரு சில காலத்தின் பின்னர் இந்தப்பிரச்சினை தானாகவே மறைந்து விடுவதுமுண்டு.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | காலைச் செய்தி | காலைச் செய்தி |
| 7.05 | | | | | | பழைய பாடல்கள் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | ஒரு கதையின் கதை |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | அலிபாப | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி. | மெட்டி ஒலி. | மெட்டி ஒலி | மெட்டி ஒலி. | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சொய்ஸ் | விசேட நிகழ்ச்சி |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | இயக்குனர் பார்வையில் | ரிலாக்ஸ்டைம் | விசேட நிகழ்ச்சி |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (ரொமேன்ஸ்) | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | (மங்கையர் நிகழ்ச்சி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (விவரண சித்திரம்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபும்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹீ—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஓ போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | வேலன் |
| 5.15—5.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | மறக்க முடியுமா | 5.30 பாடல்கள்/ 6.00 இளந்தளிர் | இசைத்தென்றல் | இப்படிக்கு நீங்கள் | வேலன் |
| 6.00 | களம் | யூ டிஸைட் (2004). | ஒப்போடு | யூ டிஸைட் (2004) | யூ டிஸைட் (2004) | இப்படிக்கு நீங்கள் | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | இப்படிக்கு நீங்கள் | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அக்ஷன் சீரியல் | அக்ஷன் சீரியல் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | (அலைஸ்) | (24) |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |

# பொதுத் தேர்தலும் வாக்களிப்பும்

தேர்தல்களில் வாக்களிக்கும் விடயத்தில் சிங்கள நங்கையரும் முஸ்லிம் நங்கையரும் சமையல்சாப்பாடு என்று பாராமல் வேளை காலையோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களித்து விட்டு பின்பு வீடு திரும்பியே சமையல் பணிகளில் இறங்குவர்.

ஆனால் தமிழ்ப்பெண்கள் அவ்வாறு அல்லர். காலைச்சாப்பாடு, மதியச்சாப்பாடு என்பனவெல்லாம் சமைத்துவிட்டு நீராடி அலங்கரித்து வாக்களிக்கச் செல்லுகின்ற மரபே தமிழ்ப்பெண்களிடம் உள்ளது.

இதனை தமிழ்ப்பெண்கள் மாற்றிக் கொண்டு காலையே சென்று வாக்களிக்க வேண்டும். உத்தியோகம் பார்க்கும் பெண்கள் மட்டுமல்ல, இல்லற முகாமைத்துவத்தில் பிஸியாக இருக்கும் பெண்களும் தமக்கான வாய்ப்பை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

### பெரும்படிப்பாளிகளின் வாக்களிப்பு தவறுகள்

பல்கலைக்கழகத்தில் கடுமையாகப் படித்தவர்கள் பங்கு பற்றும் மூதவைத் தேர்தலில் கூட நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் தேர்தல்களை மாவட்ட ரீதியாகப் பார்த்தால் — யாழ்ப்பாண மாவட்டம் உட்பட தமிழர்கள் செறிவாக வாழும் மாவட்டங்களில் நிராகரிக்கப்படும் வாக்குகளின் வீதம் அதிகம். மக்கள்வாக்குச்சீட்டில் புள்ளடியை அல்லது புள்ளடிகளை பொருத்தமாக இடுவதன் மூலம் எவ்வாறு தமது வாக்குகளின் பெறுமதியை தேர்தலில் பயன்படுத்தி ஆட்சியாளர்களையும் தமது பிரதிநிதிகளையும் தெரிவு செய்யலாம் என்பதை ஊடகவியலாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

**எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் மக்கள் எப்படி தமது வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பது குறித்து, யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை மண்டபத்திலும், யாழ். மனித முன்னேற்ற நடு நிலையத்திலும் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு.**

### விகிதாசார தேர்தலும் வாக்காளர்களுக்கான தெரிவுகளும்

விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையில் ஒரேயடியாக ஒரு சாரார் மட்டும் வெல்ல, மறுசாரார் ஒரேயடியாகத் தோற்றுப் போவதில்லை. மாகாண அடிப்படையில் ஒதுக்கப்பட்ட ஆசனங்கள், 'போனஸ்' ஆசன ஒதுக்கீடுகள், தேசியப் பட்டியல் ஆசனங்கள் என்பனவே இதற்குக் காரணமாகும்.

மேலும் ஒரு வாக்காளனுக்கு நான்கு முக்கிய தெரிவுகள் உள்ளன. அவை வருமாறு:—

1) ஒரு வாக்காளர் தான் விரும்பும் கட்சியின் சகல வேட்பாளர்களையும் சம அளவில் விரும்புகிறவராயின் அவர் வாக்குச்சீட்டில் அக் கட்சியின் சின்னத்துக்கு மட்டுமே புள்ளடியிடலாம்.

2) ஒரு வாக்காளர் தான் விரும்பும் கட்சியின் குறுப்பிட்டதொரு வேட்பாளரையே விரும்புகிறாராயின் அக் கட்சியின் சின்னத்துக்குப்புள்ளடியிட்ட பின்பு, அக் கட்சியில் தான் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்துக்கு மட்டும் புள்ளடியிட வேண்டும்.

3) ஒரு வாக்காளர் தான் ஆதரிக்கும் கட்சியின் இரு வேட்பாளர்களை விரும்புகிறாராயின் அக் கட்சியின் சின்னத்துக்கு வாக்களித்து விட்டு அதே கட்சியில் தான் விரும்பும் இரு வேட்பாளர்களின் இலக்கங்களுக்கும் புள்ளடியிடலாம்.

4) ஒரு வாக்காளர் தான் ஆதரிக்கும் கட்சியின் தான் விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்குதனது விருப்பு வாக்குகள் மூன்றையும் பயன்படுத்த விரும்பினால் மூவரிலும் எவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாக வேண்டும்என்று விரும்புகிறாரோ அவரது இலக்கத்துக்கு நேரே புள்ளடியிட்டு விட்டு அவரது வெற்றியைப் பாதிக்காத அளவில் அடுத்த இரு வாக்குகளையும் அதே கட்சியின் வேறு இரு வேட்பாளர்களுக்குப் பயன்படுத்த வேண்டும். முதலில் விரும்பும் வேட்பாளரிலும் அதிக தூரத்தில் முன்னுக்கு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வேட்பாளருக்கும் அதிக தூரத்தில் பின்னடைந்து உள்ள ஒரு வேட்பாளருக்கும் புள்ளடியிட வேண்டும். இதன்மூலம் தான் விரும்பும் வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வது மட்டுமல்லாமல், முன்னணியிலுள்ள அதேகட்சியின் வேட்பாளரின் வெற்றிக்கு தானும் துணை சேர்த்துள்ளதான பெருமையும் ஆகப்பின்னடைந்துள்ள வேட்பாளருக்கு ஒரு விருப்பு வாக்கை பயன்படுத்துவதன் மூலம் அவருக்கு ஒரு 'ஆறுதல் பரிசை' கொடுப்பதாகவும் அது அமையும்.

கட்சிக்கு ஒரு வாக்கும் அதே கட்சியின் மூன்று வேட்பாளர்களுக்கு மட்டும் மூன்று விருப்பு வாக்குகளும் ஒரு வாக்காளருக்கு உண்டு.

முதலில்அவர் கட்சிக்கு வாக்களித்து விட்டு தனது விருப்பு வாக்குகளை அதே கட்சி வேட்பாளருக்கே இட வேண்டும். கட்சிக்கு வாக்களித்துவிட்டு தான் வாக்காளிக்காத வேறு ஒரு கட்சியின்வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை இடுவதோ, அல்லது கட்சிக்கு வாக்களிக்காமல் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை இடுவதோ வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கிவிடும். இவையெல்லாம் மிக அடிப்படையான விடயங்களாகும்.

மேலும், புள்ளடியிடும் விடயத்தில் வேறும் சில நுணுக்கங்களை கவனிக்க வேண்டும். ஆகையால் பத்திரிகைகள் விபரங்களை வாக்காளர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

### தமிழர்களில் பலருக்கு புது அனுபவம்

வடக்கு— கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழர்கள் பலருக்கு வாக்களிப்பு என்பது புது அனுபவமாகவே உள்ளது. குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான வாக்காளர்களுக்கு வாக்களிப்பு தொடர்பான பயிற்சிகளும் கல்வியூட்டலும் மிகவும் இன்றியமையாததாகவுள்ளன. அவர்களில் பெரும்பான்மையோர் கடந்த இருபது வருடங்களாக எந்த ஜனநாயக தேர்தல்களிலும் பங்குபற்றவில்லை. ஏற்கனவே பல தேர்தல்களில் பங்குபற்றிய மெத்தப் படித்தவர்கள் கூடியளவில் வசிக்கும் யாழ்.மாவட்டத்தில் கூட நிராகரிக்கப்படும் வாக்குகள் அதிக அளவில் உள்ளன. வன்னியிலும், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வாழும் பல வாக்காளர்கள் விடயத்தில் வாக்களிப்பு முறைமைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் அவசியம்.

### தமிழர்களுக்கான அதிக பிரதிநிதித்துவம்

இம் முறை தேர்தலை விடுதலைப் புலிகள் உட்பட அனைவரும் ஆதரிப்பதால் தமிழர்களுக்கான அதிக பிரதிநிதித்துவம் பெறப்பட வேண்டும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் அதிகமாக தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கிறார்களோ அவ்வளவுக்கு தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் சாதகமான தன்மை கூடும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி வாக்காளர்கள் முழுமையாக வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அது தமிழர்கள் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துவதில் மேலும் சாதகமாகும்.

அவ்வகையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகள் சூனியப்பிரதேசங்களில் அமையும் பட்சத்தில் போக்குவரத்து, நீர், உணவு, சுகாதார வசதிகள் உட்பட தங்குமிட வசதிகள் தொடர்பாகவும் நெருக்கடிகள் ஏற்பட்டு வாக்களிப்பில் சாதகமின்மை நிலவ ஏதுவாகிவிடும்.

இவ்விடயம் தொடர்பில் அனைவருக்கும் தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்கும் வகையிலான உரிமைகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுப்பதில் தேர்தல் ஆணையாளர் அக்கறை செலுத்த வேண்டும்.

### தமிழர் பிரதிநிதித்துவம் கொழும்பு அரசியலை தீர்மானிக்குமா?

இம்முறை தமிழர் பிரதிநிதிகள் கொழும்பில் அரசாங்கம் அமைவதற்கு தேவைப்படுவர் என்பதனால் தமிழ்அரசியலுக்கு பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்க ஏதுக்கள் உண்டு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி — ஜே.வி.பி. கூட்டு கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட கூடுதலான போனஸ் ஆசனங்களையும் தேசியப்பட்டியல் மூலமான கூடுதலான ஆசனங்களையும் பெறும் நிலையுள்ளது. அக் கூட்டுதனிச்சிங்கள மாவட்டங்களில் தனது வெற்றி நிலைமைகளை மேலும் உறுதிப்படுத்திக்கொள்ளும்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமை தாங்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தமிழர்கள், முஸ்லிம்களின் சனத்தொகைஅடர்த்தியாகவுள்ள தென்னிலங்கை, மத்திய மலையக மாவட்டங்களில் சாதகமான நிலைமையுள்ளது.

எனினும்பௌத்த பிக்குகளை தேர்தலில் நிறுத்தியுள்ள ஜாதிக ஹெல உறுமய 'வெறும் குறியீடாக' தேர்தலில் நிற்கிறது. வெற்றிவாய்ப்புகள் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய ஏதுக்கள் இல்லை.

-யாழ்.ஆத்மா-


TEGOSL

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2003

## சிறந்த பத்திரிகையாளர்களுக்கான சான்று விருதுகள் வழங்கல் 2003

2003ஆம் வருடத்துக்கான பத்திரிகை வாயிலாக ஊடக எழுத்துத் துறையில் சிறந்த சேவை ஆற்றிய பத்திரிகையாளர்களுக்கான சான்றுதல் விருது வழங்க இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் சிறந்த சேவையாற்றியவர்களிடமிருந்து விண்ணப் விபரங்கள் கோர விரும்புகின்றது. அடியிற்கண்டவாறு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இதனுடைய முக்கிய குறிக்கோள் வருடந்தோறும் செய்தி இதழ்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றிய சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு குறிப்பிட்ட வருடத்தில் சான்று விருதுகள் வழங்க இ ப ஆ ச உத்தேசித்துள்ளது. அதாவது விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்புவோர் ஊடகத் துறையில் செய்தி இதழ்களுக்கு மும்மொழிகளிலும் சிறந்த சேவையாற்றியவர்கள், இலங்கையில் வெளி வந்த செய்தி இதழ்கள் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் விண்ணப்பிக்க வாய்ப்புண்டு.
இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சுதந்திரமாக இயங்கும் நடுவர்களால் தேர்வு செய்யப் பட்டு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இவ்வருட இறுதியில் நடைபெறும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு சான்று விருதுகள் அடியில் கண்டவாறு வழங்கப்படும்.

1. மெர்வின் த சில்வா விருது வருடத்தின் சிறந்த பத்திரிகையாளர்.
2. டி ஆர் விஜேவர்தன விருது - பொதுமக்களின் ஆர்வமுடையோரின் பாராட்டுதல்கள் பெற்றவர்.
3. சேப்பால குணசேன விருது - இலங்கை செய்தி இதழ் சுதந்திரத்திற்காக வாதாடியவர்.
4. உப்பாலி விஜேவர்தன விருது - வருடத்தின் வருங்கால எழுத்தாளர்.
5. டி பி தனப்பால விருது - வருடத்தின் ஸ்கூப்.
6. பி ஏ சிரிவர்தன விருது - வருடத்தின் சிறந்த கொலம்னிஸ்ட.
7. கலாநிதி கே கைலாசபதி விருது - விசேட இக்கட்டான நிகழ்வுகளில் செய்தி தொகுத்தவர்.
8. டென்சில் பீரிஸ் விருது - வருடத்தின் இளம் செய்தியாளர் (30 வயதிற்கு கீழ்பட்டவர்கள்.
9. வருடத்தின் சிறந்த சுற்றாடல் அறிக்கை தயாரிப்பாளர்.
10. வருடத்தின்விளையாட்டு விடயங்களை தயாரித்தளித்தவர்.
11. வருடத்தின் சிறந்த கார்ட்டூன் அமைப்பாளர் விருது.
12. வருடத்தின் சிறந்த புகைப் படப் பிடிப்பாளருக்கான விருது.
13. வருடத்தின் சிறந்த வடிவமைப்பு பத்திரிகை.
14. சிறந்த பத்திரிகையாளர்கள் (3 தரப்பினர்) தமிழ் ஆங்கிலம் சிங்களம்.
15. வேறு விசேட விருதுகள் அல்லது நடுவர்கள் தேர்ந்தெடுக்கும் சிறப்பு விருது பெறுபவர்கள்.

விண்ணப்பங்களை அஞ்சல் வழியில் அல்லது நேரடியாக காலை 10 மணி முதல் மாலை 6 மணிக்கிடையில் கையளிக்க முடியும். அடியில்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:-
அமைப்பாளர்
நடுவர் குழு 2003ஆம் வருடத்துக்கான சிறந்த விருது வழங்கல்.
இல 100 பார்ன்ஸ் பிளேஸ்
கொழும்பு 7.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2003ஆம் வருடம் தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31ஆம் வரை அமைந்துள்ளதாக இருத்தல் வேண்டும்.
விதி முறைகள்: இலங்கையின் ஊடகத் துறையில் சம்பந்தப்பட்ட செய்தி இதழ் பத்திரிகையாளர்கள், நிருபர்கள் அனைவரும் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். மேலும் அவர் அல்லது அவரது பத்திரிகைய ஆசிரியர் அல்லது இச்சங்கத்தின் அங்கத்தினர் மூலமாகவும் அசல் பிரதிகள் அவரின் போட்டோ கொப்பி பிரதிகள் உள்ளடங்கியவாறு அவரின் ஆக்கங்கள் பற்றிய விபரங்களை அடியிற்கண்ட மாதிரி உட்பிரவேச படிவத்திலுள்ளவாறு சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்பங்கள் முடிவுறும் திகதி 2004 பங்குனி 31ஆம் திகதி**

மாதிரி விண்ணப்பப் படிவம்
சிறந்த பத்திரிகை ஊடகவியலாளருக்கான சான்று விருதுகள் 2003

விண்ணப்பத்தின் வகை :
பெயர் :
வெளியீடு :

(பட்டியல் வகையில் உள்ள ஒன்றை தெரிவு செய்யுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களை அனுப்ப விரும்புவோர் தனித்தனியாக படிவங்களை நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும்.) சமர்ப்பிக்கப் பட்ட பேப்பர் கிலிப்பிங்ஸ் விபரப் பட்டியல்.
ஒவ்வொரு கிலிப்பிங்கும் தெளிவான விபரக் கொத்துடன் அதாவது தலையங்கம் பத்திரிகையில் வெளியான திகதி அனைத்தும் தெளிவாக எழுதி அனுப்பப் படல் வேண்டும்.)

1.
2.
3.

சிபார்சு கடிதங்களை ஆசிரியரிடமிருந்து அல்லது செய்தி ஆசிரியர், நிகழ்வுகள் ஆசிரியர், நிழற்பட ஆசிரியர், விளையாட்டு சம்பந்தமான ஆசிரியர், வர்த்தக சம்பந்தமான ஆசிரியர் அல்லது பிரதான ஆசிரியர் ஆகியோரிடமிருந்து சமர்ப்பித்தால் சிறப்பாகும். (ஆனால் இவை அவசியமாகாது).

.................................................
சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கையொப்பம்

.................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

# திருமலையைப் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு தமிழ் வாக்காளர் கையில்

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் சிறப்புத் தளபதி கருணாவின் பிரதேசவாதப் பேச்சு ஏற்படுத்திய தாக்கம்தணிந்து வருகின்றது. வாக்காளர்களும், வேட்பாளர்களும் பதற்றத்தில் இருந்து மீண்டு வருகின்றனர்.

அது ஒருபுறம்இருக்க தேர்தல் குறித்த போராட்டம் களை கட்டத் தொடங்கி விட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் பத்து அரசியல் கட்சிகளும் ஆறு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சி (வீடு) சார்பாக ஒரு முஸ்லிம் வேட்பாளர் உட்பட எழுவர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (வீணை) சார்பாக எழுவரும் தமிழர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு (வெற்றிலை) சார்பாக இரண்டு முஸ்லிம்கள், ஒருதமிழர், நான்கு சிங்களவர்கள். ஐக்கிய தேசிய முன்னணி (யானை) சார்பாக ஒருதமிழர் ஆறு சிங்களவர், (தமிழர் போட்டியில் இருந்து விலகிவிட்டதாக அறிவித்துவிட்டார்.) ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு (இரட்டைக் கொடிகள்) சார்பாக முஸ்லிம்கள் எழுவர், ஜாதிக ஹெல உறுமய (சங்கு) சார்பாக முழுவதும் சிங்களவர்கள். புதிய இடதுசாரி முன்னணி (மேசை) சார்பாக முஸ்லிம்கள் மூவர், தமிழர்கள் மூவர், ஒரு சிங்களவர். ருஹுணு ஜனதா பக்ஷய (மோட்டார் கார்) சார்பாக ஒரு தமிழ்ப் பெண் உட்பட ஆறு சிங்களவர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக முழுவதும் முஸ்லிம்கள். சிங்ஹளே சம்மத பூமி புத்திர பக்ஷய (விமானம்) சார்பாக முழுவதும் சிங்களவர் என்றரீதியில் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். சுயேச்சைக் குழுக்களில் மூவின மக்களும் உள்ளனர்.

சுவர் ஒட்டிகளும், துண்டுப்பிரசுரங்களும் வெளியிடக் கூடாது என்று பொலிஸார் தரப்பில் கூறப்பட்டாலும் அதற்குப் பஞ்சமிருக்கவில்லை. காலம் சென்ற அரசியல் தலைவர்கள், கட்சியை வளர்த்தவர்கள், முக்கியஸ்தர்கள் என்று புகைப்படங்கள் பொறித்த போஸ்டர்கள் தூள் பறக்கின்றன.

இம் மாவட்டத்தில் மூன்று ஆசனங்கள், ஒரு போனஸ் ஆசனம் என்று நான்கு ஆசனங்களுக்குத்தான் இத்தனை அமர்க்களங்களும்.

கடந்த தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களை விட இம்முறை 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் அதிகம்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களும் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களும் தேர்தலில் பங்கு பற்றவுள்ளனர். மற்றும் மீள் குடியமர்த்தப்பட்டவர்களின் பங்களிப்பும் இருக்கின்றது. இவற்றுடன் 80 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் வாக்களித்து, கடந்த முறை நிராகரிக்கப்பட்ட வாக்குகளும் சீர் செய்யப்பட்டால் தமிழர் தரப்பில் இரண்டு ஆசனங்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு.

தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்றும் கடப்பாடு விடுதலைப்புலிகளுக்கு இருப்பது போன்று அதற்கு அரசியல் அழுத்தம் கொடுக்கும் கடமை தமிழ்க் கூட்டமைப்புக்கும் உண்டு. இவை இரண்டையும் நிலை நிறுத்தும் பொறுப்பு இப்போது வாக்காளர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே கூட்டமைப்பு வெற்றி வாகை சூடப்போகிறது.

சிறுபான்மைக் கட்சிகள் நாம்தான் ஆட்சியாளரைத் தீர்மானிப்போம் என மார்தட்டிக் கொள்கின்றன. இந்த நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியில் நிற்கும் கட்சிகளது பிரதம வேட்பாளர்களின் கருத்துக்கள் திட்டங்கள் அவ்வப்போது வெளிவந்த வண்ணமுள்ளன.

2 இலட்சத்து 24 ஆயிரத்து 307 வாக்காளர்களைஎதிர்பார்த்து காத்திருக்கும் இவர்கள் வெற்றிக்காக மிகுந்த பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த்தேசியத்தில்முக்கிய இடம் பெறும் திருகோணமலையை காப்பாற்றவேண்டிய நிர்ப்பந்தம்இரா.சம்பந்தனுக்குகட்டாயம் இருக்கின்றது.

இரா.சம்பந்தன்தமிழ்தேசியகூட்டமைப்பின்முதன்மைவேட்பாளர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம். முன்னாள் எம்.பி. சிரேஷ்டசட்டத்தரணி.

''இன்று நாம் மூன்றாவது கட்டத்தில் உள்ளோம். அஹிம்சைப் போர் முதல் கட்டம். போரும் அதனை அடுத்த உடன்படிக்கையும் இரண்டாம் கட்டம். ஏப்ரல் 2 ஆம் திகதிய தேர்தல் மூன்றாவது கட்டம். இந்த தேர்தலை மக்கள் நிதானமாகப் பயன்படுத்த வேண்டும்.

வடக்குக்கிழக்கிலே 31 ஆசனங்கள் உள்ளன. ஆகக் கூடியது 22 ஆசனங்களையாவது எடுக்கவேண்டும். ஆகவே எமது பலத்தைக் காட்டி இலட்சியத்தை வென்றெக்க இம் மாவட்டத்தில் இரண்டு ஆசனங்கள் பெற உழைக்கவேண்டும். மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, வீடு, காணி, விவசாயம், கைத்தொழில், அபிவிருத்தி, சகவாழ்வு, வறுமை ஒழிப்பு என்று எவ்வளவோ செய்யக்கிடக்கின்றன. தேவைகள் நிறைவேற வீட்டில் ஆசனங்கள் சேரவேண்டும்.

இப்படி சம்பந்தன் கூறுகிறார்.

எஸ்.எஸ்.ஆர்

# கவிதைப் புனல்

## எனது வேரும் இருப்பும் நிழலும்

எனது வேரும்
அது ஓடி விட்ட
கிழங்கும்
கிண்டியெடுத்து
வீசப்பட்டுவிட்டன.
என்னைக் கடந்து
போகின்றவர்களிடம்
விசாரிக்கிறேன்-
நானிழந்த
இருப்பு பற்றி!
சிலர் சிரித்தனர்...
சிலர் முறைத்தனர்...
இன்னும் சிலர்
பரிதாபப்பட்டனர்...
வேறு சிலர்
நான் புரியாத பாஷையில்
ஏதோ பேசினர்...
ஏன் இப்படி?
எனக்கு நேர்ந்தது?
இந்த மண்ணில் அப்படி
என்ன பாவம் புரிந்தேன்?
தவழ்ந்த மண்ணில்
சிலர் சுற்றித் திரிந்தனர்.
அது தான்
என் தாயும் தந்தையும்
யாரையுமழைக்குமிடம்
சுற்றித் திரிந்தவர்களிடம்
ஓடி ஆர்வத்தோடு
வினவுகிறேன்-
தோளில் கிடந்ததை
கையில் எடுத்துக்கொண்டு
பேசினார்கள்.
அது, எனக்குப்புரியவில்லை.
எனது வேர்
ஓடிய நிலமது.
எனது வேர் பரவி,
முளைத்த
கிழங்கினையும் தோண்டி,
அடியோடு வீசிய பின்னும்
எனது முகவரியாகுமா அது?
எனது வேர் ஓடி
எனது நிழலும் விழ
ஓரிடமேனும்
இன்னும் கிடைக்கவில்லை.
என்னை
மிகவும் சொற்ப காலமோ
அறிமுகம் செய்ய
ஒரு முகவரியும் இல்லை.
சொற்ப காலம்
ஓரிடத்தில் அமர்ந்து,
எனது வேரினைப்பரப்பி,
வித்துக்கள் சில விழ,
நான் வாழ்ந்தால்
அது போதும்!
என் வாழ்நாளை எண்ணிக்
கணக்கிட்டுத் தந்தாலும்
பரவாயில்லை.
நான் விரும்புமோரிடத்தில் குந்தி
ஒரேயொரு வித்தாவது
விட்டுப் போக!
என் வாழ்நாளில்
சொர்க்கம் வந்ததாகப் பாடுவேன்.
சந்தோஷிப்பேன்.
என் கடந்த துயரெல்லாம்
மறந்தாடுவேன்!
இந்த மண்ணில்
நாய்களுக்கும் பன்றிகளுக்கும்
முகவரி கிடைத்தன.
ஏன் எனக்கும்
என் நிழலில்
வாழ்வோருக்கும்
கிடைக்கக் கூடாது?
நாம் அப்படி
என்ன செய்தோம்?
எது எனது நிலம்?
நான் குந்தி
என் வேர் விட்டு
சில வித்துக்களும் போட,
அந்த இடத்தில்!
என் நிழலில்
யாரும் வந்தமரலாம்.
உங்கள் பன்றிகளும்
என் மண்ணை தோண்டி
விளையாடலாம்.
என் நிழலில்...
நீங்கள்
விரும்பும் இடத்தில்
ஒரு போதி மரத்தினை நடலாம்.
பள்ளியும் கோயிலும் கட்டலாம்.

கே. முனாஸ்.

## அவளுக்காக...

அவள்
அழுகின்றாள் என்று
மனம் கலங்கி
அவளுக்காக
அவனும் அழுதான்.
அவளோ...
சிரிக்க ஆள் கிடைக்க
மறந்துபோனாள் அவனை!
இப்பொழுது அழுகிறான்
அவன் மட்டும் தனியே!

கே. வசந்த ரூபன்,
பூநகரி.

## சிறை

வேதனைப் பூக்கள்
பூத்துச்சிரிக்குமோர்
பூஞ்சோலை.
துயரத்தின் உச்சியில் நின்று
கூவிடும் குயில் வாழும்
கூடு.
கண்ணீர்த் துளிகளால்
பாய்ந்தோடும்
நதியின் ஊற்று.

சி. விதுரன்,
வேரவில்.

## காதல் தோல்வி

பெண்ணே-நீ
செடியாய் இருந்திருந்தால்
கோடி முறை
உனக்காகப் பூத்திருப்பேன்.
மழையாய் இருந்திருந்தால்
ஓராயிரம் முறை
உன்னை நினைத்திருப்பேன்.
மன்னித்து விடு
மனிதனாய் இருப்பதனால்
உனக்காக
ஒரு முறை மட்டுமே
மரிக்க முடிந்தது.

கு. ராகுலன்,
பருத்தித்துறை.

## பிறப்பு

வெறிச்சோடிக்கிடந்த
விதைக்கப்பட்ட
வில்லங்க விதை.

## வாழ்க்கை

சுமைகளோடு
சுவைத்துக் கொள்ள
இறைவன் தந்த
அறுசுவை விருந்து.

## காதல்

எம் கரங்களுக்கு
கவி புனைய
கற்றுத் தரும்
கல்லூரி ஆசான்.

## திருமணம்

இருப்புக்கும்
இறப்புக்கும்
இடைப்பட்ட
இன்ப துன்பமான
இல்லற நாட்கள்.

## இறப்பு

பரலோகம் செல்ல
பணமின்றி
கிடைக்கும்
பயணச்சீட்டு.

றோம் ஜெனிபர்,
மன்னார்.

## அணையாத தேசம்

நீ தீபமென்பதால்
நான் திரியானேன்- உன்
வஞ்சக அக்கினியில்
எரிந்து போனது
என்
வாலிபத்தின்
சந்தோஷங்கள்.
உனக்கென்ன- ஒன்று
எரிந்து போனாலும்
இன்னுமொரு திரி.
நானோ
சாம்பலானாலும்
உன்னையே
நினைத்திருக்கும்
கலை மானினம்.

த. பிரையன்,
பசறை.

## கைதி

பொழுது போகாத போது
பொலிஸார்
விளையாடும்
உதை பந்து.

## துப்பட்டா

பாதையில் செல்லும்
சில பூவையர்க்கு
ஆடை நெய்பவன்
தந்த தூக்குக் கயிறு.

## செம்மணி

காணாமல் போன
கண் மணிகளின்
உறைவிடம்.

## பாதணி

முள்ளையும்
கல்லையும்
எதிர்த்துப்போராடும்
மூச்சுவிடாப் பயிற்சியாளன்.

தெ. சதீஸ்பாபு,
கைதடி.

## புரியாத புதிர்

ஒரு நிமிஷம் சிரிப்பு...
மறு நிமிஷம்
முறைப்பு...
சிலவேளை பாசம்...
சிலவேளை சினம்...
உன்னில்
எதற்காக இந்த மாற்றம்?
இது புரியாமல்
தடுமாறும்
என் மனம்
இதற்கு உன்னிடம்
கிடைக்குமா
விடை?

நிலா,
கொழும்பு.

## அவளது கண்

கயல் மீன் தோற்றது.
கார் வண்டு சுழன்றது.
காரிகை விழிகளோ
கவிதைகள் தந்தன.
வாள்கள் சுழன்றன.
வேல்கள் பாய்ந்தன.
அருஞ்சமர் நடந்தன.
பெண்களை மயக்கும்
பெருத்த விழிகள்-
காளையரை விரட்டும்
கறுத்த விழிகள்
அழகாய் சுழன்றது.
அம்புகள் பாய்ந்திட
கற்பனை வளர்ந்திட
கவிதைகள் தான்
வளர்ந்தன
என் இதயக் கோயிலில்.

எஸ். விஜயன்,
யாழ். பல்கலைக் கழகம்.

## இடம் தருவாயா?

நிலாவை சுற்றி வரும்
நட்சத்திரம் போல்-
கண்களைச் சுற்றியுள்ள
இமைகள் போல்-
உன்னைச் சுற்றும் எனக்கு
உன் இதயத்தில்
இடமில்லையா?

ஈ. திருஞானசுந்தரம்,
மட்டக்களப்பு.

## உயிர்

ஆறறிவு படைத்தவனின்
மண்ணுலக மகிமை.

## காதல்

நான்கு கண்களின்
ஈர்ப்பினால்
முளைவிட்டு
இரு உள்ளங்களின்
உணர்வாய் தளிர்விட்டு
இரு இதயத்தில்
உயிராய்
மலர் விட்டு
உருவான
பாச மலர்ப்பந்தல்.

## பார்வை

பால் நிலவின்
கதிர்வீச்சில்
மயங்காத
தங்கத்தின்
சுடர் ஒளியில்
மங்கிடாத
மின்னல் கீற்றில்
பறிபோகாத
கருமையான புருவத்தில்
உண்டான கதிர்வீச்சு.

## இடை

மேகம்
கறுக்கையில்
உண்டான மின்னல்.

நவலோகன்,
கிளிநொச்சி.

## கோபம்

நண்பா,
கோபம் கொள்ளாதே!
கோபம் வந்தால்
பகை உண்டாகும்.
பகை வந்தால்
சண்டை உண்டாகும்.
சண்டை வந்தால்
உயிர் பலியாகும்.
கோபத்தால் அன்பு
அற்றுப்போம்.
கோபத்தை
முற்றாக ஒழித்து
ஒற்றுமையாய் வாழ்வோம்.

பா. நிரோஷன்,
தர்மபுரம்.

## புண்ணியம்

இறந்த பின்
அனுபவிப்பதற்காய்
இருக்கும்போது
செய்யும் வைப்பு.

## அரசியல் வாதி

கடவுளின்
கவலையீனத்தால்
மனிதனாய்
பிறந்திட்ட மந்தி.

## பி(இ)றப்பு

வந்ததற்காய்
நான் அழுவேன்.
சென்றதற்காய்
உறவுகள் அழும்.

சி. குமரன்,
பரந்தன்.

# நீடித்த நட்புக்கு!

நாம் வாழும் உலகமாகிய இந்தப் பூமிப் பந்தில் எத்தனையோ நபர்களைச் சந்திக்கிறோம். இதில் சிலரைப் பார்த்தவுடனேயே எமக்குப்பிடித்துவிடும். ஆனால் சிலரைப் பார்த்தாலோ அதற்கு எதிர்மாறாக இருக்கும். இது ஏன் என்று ஆராய்ந்து பார்த்தால் மனம் திறந்து — தெளிவாக, விஷயத்தை நேரடியாகப் பேசுவது பல பிரச்சினைகளுக்கும் வீண் மனஸ்தாபங்களுக்கும் அருமருந்தாகும் என்பதை நாம் உணரலாம்.

பொதுவாக எம்மவர்களிடையே இது சரி, இது தவறு என்று வெளிப்படையாகப் பேசும் பழக்கமுள்ளவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். நாம் பழகும் உறவுக்குள்ளும், நட்புக்குள்ளும் ஏன் குறுகிய காலப் பகுதியுள் விரிசல் ஏற்பட்டு விடுகிறது என்று நோக்கினால், அதற்குப் பேச்சுத் தான் முக்கிய காரணமாக அமைகிறது. சரியான வார்த்தைகளை, சரியான தொனியில், சரியான அணுகுமுறையோடு பேச முடிகிறவர்கள் உலகை விலை பேசித் திரும்புவார்கள்.



கணவனுடனோ, காதலனுடனோ, தோழியுடனோ மற்ற உறவுகளிடமோ அடிக்கடி கோவித்துக் கொள்கிறவர்கள் அந்தக் குணத்தை மாற்றும் பேச்சுக்கலையை கற்றுக்கொள்ள வேண்டும். கோவிப்பதற்குப் பதிலாக உங்கள் எதிராளிக்கு உடன்பாடில்லாத ஒரு விஷயத்தை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது மாதிரி வலிக்காமல் ஏற்றுக்கொள்ள வைக்க முடியுமென்றால் நட்சத்திரங்கள் நிறைந்த வானில் நிலாவாக உங்களால் நிச்சயம் மிளிர முடியும்.

எம் ஒவ்வொருவருக்கும் உள்ள சவால் எம் கூடவே இருப்பவர்களிடம் நல்ல பெயர் வாங்குவது தான். வீட்டிலிருப்பவர்களைக் காயப்படுத்திவிட்டு ஊரெல்லாம் புகழ் மாலை சூடிக்கொள்வதில் அர்த்தமென்ன? தூரத்திலிருப்பவர்களுக்கு எம் புன்னகை மட்டும் தான் தெரியும். ஆனால் அருகிலிருப்பவர்களுக்கு எல்லா அசைவுகளுமே புரியும். எல்லா வெற்றிகளுமே தனி மனித உறவிலிருந்து தான் வளர்கின்றன. அது வேர் மாதிரி. அதன் உறுதி கூடக் கூடத் தான் வெற்றி என்ற மரம் பூக்களோடு செழித்து வளர முடியும். மரம் செழித்து வளர்வதற்கு தண்ணீர் வேண்டுமல்லவா? அது தான் பேச்சு.

பொதுவாக எமக்குப் பொறுமை இருப்பதில்லை. யார் என்ன நினைத்தால் என்ன? என்ற அசட்டையில் மனதில் பட்டதை எல்லாம் புட்டுப்புட்டு வைத்துவிடுகிறோம். இது தவறு. சம்பந்தமில்லாத விடயங்களை இழுத்துப்போட்டு தேவையில்லாது பேசுவது ஒரு வகை என்றால், என்ன சொன்னாலும், செய்தாலும் வாயைத் திறக்காமல் இருப்பது இன்னொரு வகை. ஆனால் இவ் இரண்டுமே ஆபத்தானவை. சூழ்நிலையை மோசமாக்கக் கூடியவை. கோபத்தைத் தூண்டிவிடக் கூடியவை. நாம் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்தாலும் இந்த இரண்டுமே ஆபத்தானவை. நாம் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்தாலும் இந்த இரண்டில் எந்தக் குணத்தைக் கொண்டிருந்தாலும் அது எம் பெயரைக்கெடுத்துவிடும்.

சரியாகப் பேசத் தெரியாதவர்கள் கடும் உழைப்பாளிகளாக இருந்தாலும் அவர்கள் நிச்சயம் முறையற்ற பேச்சுக்களால் தொழில் ரீதியாகவும் பாதிக்கப்படுவார்கள். சொல்ல நினைப்பதைஎதிரில் இருப்பவர்கள் யாராலும் புறக்கணிக்க முடியாது. உணர்வுகளைச் சரியாக வெளிப்படுத்த முடியாத இந்தப்பிரச்சினை ஆண்களை விடப் பெண்களுக்கே அதிகம்.

நாம் எல்லோருமே நல்லவர்கள் தான். காலம், சூழ்நிலை, வளர்ப்பு, சுற்றியிருக்கும் மனிதர்கள் இதெல்லாம் தான் நம்மை மாற்றிவிடுகின்றன. வாழ்க்கையின் மிகப் பெரிய சுவாரஸ்யம் என்ன தெரியுமா? எத்தனை பேர் எத்தனை வகையில் தூண்டினாலும் அதற்குப் பலியாகாமல் இருப்பது தான். நீ என்ன செய்தாலும் நான் உற்சாகமாக, சந்தோஷமாக இருப்பேன் என உறுதி கொண்டவர்களை யாராலுமே வெல்ல முடியாது.

எனவே முகம் திருப்பிப் போகிறவர்களுக்கு குட்மோனிங் சொல்லுங்கள். மனசுக்குள் புகைகிறவர்களிடம் நலம் விசாரியுங்கள். இந்த அணுகுமுறை ஆரம்பத்தில் அவர்களுக்கு வெறுப்பைத் தந்தாலும் காலப் போக்கில் யோசிக்க வைக்கும். ஏங்க வைக்கும். முயன்று பாருங்கள். சிறந்த நட்புக்குப் பாலம் அமையுங்கள்.

## பப்பாளிப் பாசந்தி

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| பப்பாளித் துருவல் | 1 கப் |
| பால் | 1 லீட்டர் |
| முந்திரிப்பருப்பு | 200கிராம் |
| தேங்காய் | 1 |
| சீனி | 500கிராம் |
| நெய் | 100கிராம் |
| வெண்ணெய் | 100கிராம் |
| புழுங்கலரிசி | கைப்பிடியளவு |
| ரோஸ் எஸென்ஸ் | சில துளிகள் |



**செயன்முறை**

முற்றிய பப்பாளிக் காயைத் தோல் நீக்கி பூப் போல ஒரு கப் துருவி சிறிது நெய் ஊற்றி வதக்கி ஆறவைக்கவும். முந்திரிப் பருப்பை சுத்தமான வெந்நீரிலும், அரிசியைத் தண்ணீரிலும் ஊற வைக்கவும். ஒரு மணிநேரம் கழித்து முந்திரியையும், அரிசியையும் தனித் தனியே நைஸாக அரைத்து எடுத்து வைக்கவும். பாலை 100 மில்லி அளவுக்கு சுண்டக் காய்ச்சவும். தேங்காயைத் துருவி கெட்டிப்பாலாக ஒரு பேணி எடுக்கவும்.

சுண்டிய பாலில் தேங்காய்ப்பால், முந்திரி விழுது, நெய், வெண்ணெய் எல்லாம ஒன்றாகக் கலந்து சீனி கரையும் வரை நன்றாகக் கரைக்கவும். கடைசியில் வதக்கிய பப்பாளித் துருவலில் சில துளி ரோஸ் எஸென்ஸ் சேர்த்து நன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்ற வேண்டும். குக்கரில் வைத்து முப்பது நிமிடம் அளவில் வேக வைத்து எடுக்கவும். பப்பாளிப் பாசந்தி செய்வது மிகவும் எளிது. மிகவும் சுவையாக இருக்கும்.




# சீரகத்தால் ஒரு சீரிய வாழ்வு!

பொதுவாக இல்லத்தரசிகள் தமது கணவர், பிள்ளைகளிடம் பாராட்டைப் பெற்று மகிழ்ச்சியடைவது என்றால் அது சுவையான சிறந்த சமையல் மூலமே! அந்த வகையில் இன்று நாம் சமையலில் பயன்படுத்தப்படும் சுவையூட்டிகளில் ஒன்றான நற் சீரகத்தின் பயன்கள் பற்றிப் பார்ப்போம்.

சீரகத்தில் எமக்குத் தேவையான புரதச் சத்து, மாச்சத்து, விட்டமின் சி, சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்துகள் உள்ளன.

சீரகம் உணவுடன் சேர்வதால் நல்ல பசி உண்டாகும். வயிற்று உபாதைகள் இருக்காது. வயிற்றுவலி, ஓங்காளம் வராமல் தடுக்கப்படுகிறது பீனிச நோய், வாதம், காச நோய் வராமல் தடுக்கப்படுகிறது.

சீரகக் குடிநீரை தினமும் அருந்தி வந்தால் வயிற்றில்சேரும் வாயுவை நீக்கி குடலைத் தூய்மையாக்கும். வாய்வினால் பாதிக்கப்படுபவர்கள் இந்த குடிநீரைப் பயன்படுத்துவது நல்லது. இந்தக் குடிநீர் உடல் சூட்டைத் தணிக்கும். பசியை உண்டாக்கும். கண் பார்வைக்கு நல்லது வீட்டுக்குத் தேவையான அளவு குடிநீரில் சிறிது சீரகத்தைப்போட்டுக் கொதிக்க வைத்து இரவு படுக்கும் போது 300 மில்லியளவு குடித்துவிட்டு, மிதமுள்ள நீரைப்பத்திரப்படுத்தவேண்டும். காலை, மதியம், இரவு உணவின் போது ஒரு பேணி சிறுநீரகத் தண்ணீரைக் குடிக்க வேண்டும். இவ்வாறு சீரக நீரை உபயோகத்தில்வைத்துக் கொண்டால் உண்ட உணவு முறையாக் செரிமானமாகும். இரவில் நல்ல தூக்கம் வரும். காலைக்கடன் எளிதாக இருக்கும். மலச்சிக்கல் இருக்காது. நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க முடியும்.



சீரகத்தை கொதிநீரில் போட்டு நீர் வற்றும் அளவுக்கு கொதிக்க வைத்து வாய் கொப்பளித்தால், வாயில் ஏற்படும் தீய வாய் நாற்றம் நீங்கும். பல் நோய் குணமடையும்.

மகப்பேறு காலத்தில் பிரசவ வலி வந்ததும் கஷாயம் கொடுப்பது வழக்கம் இதனைக் குடிப்பதனால் வலி சீராகும். பிரசவம் இலகுவாகும்.

விக்கல் நோய் வந்தவர்களுக்கு சீரகப் பொடியுடன் வெல்லம் சேர்த்துக்கொடுத்தால் விக்கல் இருக்காது. சீரகப் பொடியை வெண்ணெய் அல்லது நெய்யில் குழைத்துச் சாப்பிட்டால் அல்சரால் ஏற்படும் எரிச்சல் உடனே நீங்கும்.

இரத்தம் வரக்கூடிய நிலையில் உள்ள மூல நோயாளிகள், ஒரு மேசைக்கரண்டி சீரகப் பொடியைவாழைப்பழத்தில் பிசைந்து சாப்பிட்டால் இரத்தப்போக்கு நின்றுவிடும்.

எனவே எம் ஒவ்வொருவருடைய உடலையும் சீராக வைத்துக்கொள்ளவும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் துணை புரிவதால், சீரகத்தைப் பயன்படுத்தி சீரான வாழ்க்கை வாழ்வோம்.



# கண்களால் கைது செய்..

கண்களை அதுவும் பெண்களின் கண்களை வைத்துப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். காதலுக்குக் கண் இல்லை என்று சொல்வார்கள். ஆனால் அந்தக் கண்களால் எத்தனை பேர் எத்தனை பேரை தம் வசப்படுத்தி விடுகிறார்கள்? எனவே வசீகரிக்கும் பெண்களின் அந்தக் கண்களை எவ்வாறு பாதுகாத்து மேலும் மெருகேற்றுவது என்பது பற்றி இன்று பார்ப்போம்.

* காலை நேரத்தில் சில நிமிடங்கள் சூரியனைப்பார்த்தபடி நின்றுதலையை ஒரு புறமிருந்து மறுபுறம் திருப்ப வேண்டும். இதனால் கண் அழகு பெறும்.

* முகத்தை நேராக வைத்துக்கொண்டு உட்காரவும். தலையை அசைக்காமல் கருவிழிகளை மட்டும் வலப்புறமாகவும், இடது புறமாகவும் மாற்றிமாற்றி 6 முறை அசைக்கவும். கண்ணின் தசைப் பகுதிக்கு இது வலுவூட்டும்.

* நெல்லிக்காயை நனைய வைத்த தண்ணீரில் கண்களை கழுவலாம். இதனால் கண்களுக்கு ஒரு தனி வசீகரம் கிடைக்கும்.

* காலையில் எழுவது சிறந்தது. இரவில மிகவும் தாமதமாக நித்திரைக்குப் போகிறவர்கள் மற்றும் பின்னிரவில் அசைவ உணவுகளை சாப்பிட்டுவிட்டு தூக்கமின்றி அவஸ்தைபடுகிறவர்களுக்கு அதிகாலை விழிக்க வாய்ப்பு இல்லை. ஆனால் தினமும் இரவில் 6 முதல் 8 மணி வரை நன்றாகத் தூங்குவது தான் கண்களுககுக் கிடைக்கும் முதல் பாதுகாப்பு.

* கடுமையான வெயில், பிரகாசமான வெளிச்சம், தூசி, புகை போன்றவற்றிலிருந்து கண்களைப் பாதுகாப்பது மிக அவசியம்.

* இரவில் படுக்கைக்கு போவதற்கு முன்பும், காலையிலும் குளிர்ந்த நீரால் கண்களை கழுவுவது நல்லது.

* மேலும் கண் அழகை தூக்கி நிறுத்தக் கூடிய புருவம் அழகில்லாது இருந்தாலும் கண் அழகு கெட்டுவிடும். எனவே தினமும் படுக்கைக்கு போவதற்கு முன்பு புருவங்களுக்கு சிறிது வஸ்லினோ, விளக்கு எண்ணெயோ தடவி வந்தால் புருவங்களில்



அடர்த்தியாக முடி வளர்ந்து அழகு சேர்க்கும்.

* கண்களில் தூசியோ, மண்ணோ விழுந்து அழுத்தினால் நீங்களாக மருத்துவம் செய்து உங்கள் கண்ணுக்கு நீங்களே எதிரியாகிவிடாதீர்கள். கண் மருத்துவர் தான் இதற்கு சரியான சிகிச்சை தர முடியும்.

எனவே பெணகளே, கண்களைப் பாதுகாத்து — உங்கள் கண் அழகை மேலும் மெருகேற்ற இப்போதே நீங்கள் தயாரா?

# பிரபல நடிகைகளின் திரைமறைவு சத்திரசிகிச்சைகள்



கவுண்டமணி



சரத்குமார்

நடிகைகள் சினிமாவுக்கு வரும் போது 25—32—25 என்கிற கணக்கில் தேவலோகக் கன்னிகளாகத்தான் வருவார்கள்! ஆனால் சில படங்களில் நடித்த பிறகு என்னதான் செய்வார்களோ தெரியாது? தேவைக்கும் அதிகமாக சதை போட்டு பூலோகத்து யானைகள் போல் ஆகிவிடுகிறார்கள். சமீபகாலமாக இப்படி எடை போடும் நடிகைகள் திரைமறைவில் இரகசியமாக சத்திரசிகிச்சை செய்துவருகிறார்கள்.

ஜெமினி படம் மூலம் அறிமுகமான கிரண் தென்னவன் படத்தில் நடிக்கும்போது ரசிகர்கள் வெறுக்கும் அளவுக்கு தொள தொளவென சதை போட்டுவிட்டார். தான் சதை போட்ட விஷயத்தை தாமதித்தே புரிந்து கொண்ட கிரண் அண்மையில் 'லைபோ சக்சன்' என்ற ஒரு வகை சத்திரசிகிச்சை செய்து உடல் மெலிந்து இருக்கிறார். இதன் நிமித்தமாக ஒரு தெலுங்குப் பட வாய்ப்பும் கிடைத்திருக்கிறது.

இது போன்ற சத்திரசிகிசசையின்போது உடலில் ஊசியைச் செலுத்தி தேவையற்ற கொழுப்புச் சத்தை உறிஞ்சி விடுவார்கள். பிறகு மருந்து, மாத்திரை மூலம் உடல் வனப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

குண்டு ஷர்மிலியை ஞாபகம் இருக்கிறதா? இப்போது பார்த்தால் 16 வயது பருவப் பெண் போல் காட்சியளிக்கிறார். ஏராளமான மலையாளப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் அவர் விரைவிலேயே தமிழ்ப் படங்களில் நடிக்க இருக்கிறார். இவர் கூட சமீபத்தில் சத்திரசிகிச்சை மூலம் தனது உடல் எடையை குறைத்துக் கொண்டிருக்கிறார்.

இப்போது மீனாவுக்கு பெரிய சினிமா வாய்ப்பு இல்லாவிட்டாலும் அவ்வப்போது சதை போட்டு விடுவார். சில மாதங்களுக்கு முன் கலை நிகழ்ச்சிக்காக லண்டன் சென்றவர் அங்கு உடலைக் குறைக்கும் சத்திரசிகிச்சை செய்து கொண்டு திரும்பியிருக்கிறார்.

இதே போல் விந்தியா, சங்கவி, மும்தாஜ் ஆகியோரும் சென்னையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரிடம் சத்திரசிகிச்சை செய்து கொண்டுள்ளனர். ரம்பா கூட அப்படித்தான். திடும் என சதை போட ஆரம்பித்துவிட்டார். அண்மையில்தான் வெளிநாடு சென்று ரம்மியமாக திரும்பி இருக்கிறார். ஒரு சில நடிகைகள் மட்டுமே 'டயட்' மூலம் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறார்கள். மற்றவர்கள் இஷ்டம் போல் சதை போட்டு பிறகு சத்திரசிகிச்சை மூலமே மெருகூட்டப்படுகிறார்கள்.

# சேரனுக்கு வந்து குவியும் நோட்டுக்கள்



விக்ரம்

இயக்குநனர் சேரனுக்கு அவரது 'ஆட்டோகிராப்' படத்துக்காக அவரது ஆபீஸில் 100ரூபாய் நோட்டுக்கள் வந்து குவிந்து கொண்டு இருக்கின்றன.

பல வருடங்களாக பலரும் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டும் திருட்டு வி.சி.டி. என்ற ஒன்றை மட்டும் ஒழிக்கவே முடியவில்லை. ஆனால் இயக்குனர் சேரன் இந்தப் பிரச்சினையை புது விதமாக கையாண்டுள்ளார்.

இவர் பேட்டி ஒன்றில் தெரிவிக்கையில் ''இன்றைக்கு இந்த சினிமாத் தொழிலை பொண்டாட்டி தாலியை கூட அடகு வைச்சு கடன் வாங்கி படம் பண்றவுங்க பலர் இருக்காங்க. அதனால் தயவு செய்து திருட்டு வி.சி.டி.யில் படம் பார்த்து அவுங்க வயித்தில அடிக்காதீங்க'' என்றார்.

''சரி இதுக்கு முன்னாடியே என் படத்தை திருட்டு வி.சி.டி.யில் பார்த்தவங்கள் படம் பிடித்திருந்தால் அந்த படத்தை எவ்வளவு செலவு செய்து பார்ப்பீர்களோ அந்தப் பணத்தை தயவு செய்து எனக்கு அனுப்பிவிடுங்கள். ஏன்னா நானும் கடன் வாங்கி கஷ்டப்பட்டுத்தான் பண்ணியிருக்கேன்'' என்று அவர் கூறினார்.

அதிரடியாக சேரன் ஆபிஸில் 100 ரூபாய் மணி ஓடர்கள் வந்து குவிய ஆரம்பித்துள்ளன.

''மக்கள் எந்த் அளவுக்கு மனச்சாட்சியுடன் நடந்து கொள்கிறார்கள் இதன் மூலமே என் பாதி கடன் அடைந்தது போல உணர்கிறேன். என்னை எவ்வளவு மதிக்கிறார்கள்? இவர்களுக்கெல்லாம் நன்றி சொல்லி ஏதாவது செய்தே ஆக வேண்டும். என் ரசிக மக்களை ஏமாற்றாமல் நல்ல படங்கள் கொடுப்பது மூலமே இதைச் செய்வேன்'' என்று தன் நண்பர்கள் வட்டாரத்தில் சேரன் பேசி வருகிறார் என்கின்றனர். அவரின் அன்பு சிகாமணிகள்.

# இரட்டை வேடப் போட்டி



அரவிந்த்சாமி

இளம் முன்னணி ஹீரோக்களுக்கிடையே எப்போதும் ஏதாவது ஒரு வகையில் ஒரு போட்டி நிலவி வருகிறது. கோடம்பாக்கத்தில் தற்போது ஹீரோக்கள் இரட்டை வேடம் ஏற்கும் கதைகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது இது உண்மையிலேயே கதைக்கான வேடங்களா அல்லது ஹீரோக்களின் விருப்பத்துக்காகவா என்பது தெளிவாக தெரியாவிட்டாலும் ஒரு வகையில் ஒவ்வொருவரும் தங்கள் நடிப்புத் திறமையை மெருகேற்றிக் கொள்ளவே இந்தத் திட்டம் என்கின்றனர்.

இந்த வகையில் முன்னணி இளம் ஹீரோக்களாக இருக்கும் விக்ரமுக்கு 'அந்நியன்' படத்திலும் சூரியாவுக்கு 'பேரழகன்' படத்திலும் விஜய்க்கு 'மதுரா' படத்திலும் அஜித்துக்கு 'அட்டகாசம்' படத்திலும் இரட்டை வேட கதாபாத்திரங்களே அமைந்துள்ளன.

இதுபோன்று ஒருவருக்கொருவர் தெரிந்தோ, தெரியாமலோ போட்டி போட்டுக் கொண்டு இருப்பது தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுமானால் நிச்சயமாக இது பாராட்டப்பட வேண்டிய ஓர் ஆரோக்கிய மான போட்டியே என்கின்றனர் திரையுலகத்தின் சீனியர் நடிகர்கள்.



ரஜினி

'ஆயுத எழுத்து'







# பாக்யராஜின் சரண்ய

முன்னாள் நடிகர் மற்றும் முன்னாள் இயக்குன
சரண்யா கதாநாயகியாக களமிறங்குகிறார். நடிகர் வ
பெயர் சினிமா வரலாற்றில் இருக்குமோ என்னமோ
அவரது இடத்தை யாரும் மறுக்க முடியாது. ஒன
இயக்குவதில் தனக்கென ஒரு தனிப் பாணியை உ
படங்களைக் கொடுத்தவர் பாக்யராஜ். ஆனால் பின் மீ
தமிழ் சினிமாவில் உரம் போட்டு வளர்த்தவர்களில் மு

சினிமாவில் முன்னணியில் இருந்த இவரு
முன்பு சரிவு ஏற்பட்டது. எடுத்த படங்கள் எல்லாமே
அடைந்தன. கடைசியாக அவர் கொடுத்த சாதா
ஊரில ஒரு ராஜகுமாரி''. கதாநாயகனாக தன்னை
மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு வி
''சொர்கத்தங்கம்'' என்ற படத்தை இயக்கினார்.
அடைந்தது. மாபெரும் ரசிகர் பட்டாளம் கொ
மார்க்கெட்டையே சரியச் செய்து சாதனை படைத்
படத்தால் ஏற்பட்ட பெரும் நஷ்டத்தால் அ
ஜி.வெங்கடேஸ்வரன் தற்கொலையே செய்து கொ

இவ்வாறு மகாராசிக்காரராக விளங்கும் பாக்
சீரியல்களை இயக்கி வருகிறார். ஆனாலும் இப்பே
பணக் கஷ்டமாம். இதனால் 40 ஏக்கர் நிலத்தை
றுள்ளார். இந்த நிலையில் தனது மகள் சர
கதாநாயகியாக்கி ''பாரிஜாதம்'' என்ற படத்தை
சரண்யா வைஷ்ணவா கல்லூரியில் விஷுவல்
படித்துள்ளார். பாலே நடனம் கற்றுக்கொள்ளும்
கிளாஸ்மேட்.

சரண்யாவின் நச்சரிப்பால் தான் இந்தப்
தொடங்கியுள்ளார் என்று தெரிகிறது. கதாநாய
கொடுத்து ''பாரிஜாதம்'' கதையை தயார் செய்துள்

சரண்யாவின் அம்மாவான பூர்ணிமாவும் ந
என்பது இளம் தலைமுறையினருக்கு தெரிந்தி
அதே போல எம்.ஜி.ஆரால் தனது கலையுலக வா
அளவுக்கு தீவிரமான அ.தி.மு.க. அனுதாபியாக
எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின்பு தனிக் கட்சி ந
கிடைக்காததால் அதை மூடி விட்டார்.



ஞாபகமிருக்கிறதா
காவை? கரகாட்டக்காரன் என்
நடித்தாரே. கதாநாயகி வாய்ப்புக்கள் ட
ஜோடியாக நடிக்கவும் செய்தார். சமீபத்தி
போய்விட தனது பெரிய பங்களாவை
பிறந்தவர்களோ எவரும் இல்லாததால் தனி
இனியும் சான்ஸ் கிடைக்காது என்பதா
கொண்டிருந்தார். இந்நிலையில் தெலுங்குப்பட
ரகசியத் திருமணம் செய்து கொண்டுவிட்டார்
நிலவுகிறது. சென்னைக்கு முழுக்குப் போட்
நிரந்தரமாக செட்டில் ஆகிவிட்டார் என்

# என்ன செய்கி

...ன் மகள்
...பா


...இயக்குனரான பாக்யராஜ் மகள் ...நடிகர் வரிசையில் பாக்யராஜின் ...னமோ, ஆனால் இயக்குனராக ...து. ஜனரஞ்சனமான படத்தை ...யை உருவாக்கி பல வெற்றிப் ...பிள் மீனிங் என்ற அசிங்கத்தை ...களில் முக்கியமானவர் இவரே.

... இவருக்கு சில காலத்துக்கு ...ல்லாமே வரிசையாகத் தோல்வி ...த சாதாரண ஹிட் படம் ''ஒரு ...ன்னை இனி ஒத்துக்கொள்ள ...டு, விஜயகாந்தை வைத்து ...ினார். படம் பெரும் தோல்வி ...ம் கொண்ட விஜயகாந்தின் ...படைத்தார் பாக்யராஜ். இந்தப் ...ால் அதன் தயாரிப்பாளர் ...து கொண்டார்.

...ம் பாக்யராஜ் இப்போது டிவி ...ம் இப்போது அவருக்கு பெரும் ...லத்தைக் கூட சமீபத்தில் விற் ...ன் சரண்யாவை திடீரென ...படத்தை தொடங்கியுள்ளார். ...ஷ்வேல் கொம்யூனிகேஷன்ஸ் ...ள்ளும் போது த்ரிஷா இவரது ...

...இந்தப் படத்தை பாக்யராஜ் ...தாநாயகிக்கு முக்கியத்துவம் ...செய்துள்ளாராம்.

...ாவும் நடிகையாக இருந்தவர் ...தரிந்திருக்க வாய்ப்பில்லை. ...க வா... அறிவிக்கப்படும் ...பியாக இருந்தார் பாக்யராஜ். ...கட்சி நடத்தி தொண்டர்கள் ...



பெரும் வெற்றி பெற்ற தீனா படத்துக்குப் பின்னர் விஜயம் சினி கம்பைன்ஸ் கார்த்திகேயன் பெரும் பணச் செலவில் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'அட்டகாசம்'. இதில் முற்றிலும் மாறுபட்ட இரு வேடங்களில் அஜித் நடிக்க ஜோடியாக நடிக்கிறார் 'ஜே ஜே' பூஜா.

'ஜே ஜே' வெற்றிப் படத்திற்குப் பின்னர் கதை – திரைக்கதை – வசனம் எழுதி சரண் இயக்கும் படம் இது. 'காதல் மன்னன்' 'அமர்க்களம்' படத்திற்குப் பின்னர் சரண் – அஜித் இணையும் 3 ஆவது படம் 'அட்டகாசம்'.

'அமர்க்களம்' படம் மூலம் ஆக்ஷன் ஹீரோவாக அஜித்தை அமர்க்களப் படுத்திக் காண்பித்த சரண், இதில் அஜித்தை முற்றிலும் மாறுபட்ட நகைச்சுவைப் பாத்திரத்தில் நடிக்க வைத்திருக்கிறார். ரைவிங் ஸ்கூல் உரிமையாளர் மற்றும் தாதா என இரண்டு மாறுபட்ட வேடங்களில் நடிக்கிறார் அஜித். ஒருவர் முதன் முறையாக நகைச்சுவைப் பாத்திரத்திலும் மற்றவர் பயங்கர தாதா பாத்திரத்திலும் நடிக்கிறார். இப்படத்திற்கு 10 லட்சம் ரூபாய்

# அஜித்தின் 'அட்டகாசம்'

செலவில் ரைவிங் ஸ்கூல் மற்றும் நகர வீதிகள் செட் போடப்பட்டு படமாக்கப்பட்டு வருகிறது.

இரண்டு வேடங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அஜித் தினமும் மாலை 6 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை நடித்து வருகிறார். 'காதல் மன்னன்' முதல் 'ஜே ஜே' வெற்றிக் கூட்டணியாக தொடரும் சரண் – பரத்வாஜ் – வைரமுத்து கூட்டணி இப்படத்தில் மீண்டும் இணைகிறார்கள். பாடல்கள் அனைத்தும் பாங்கொக்கில் 15 நாட்கள் கொம்போசிங் செய்யப்பட்டு வைரமுத்துவின் வைரவரிகளில் லண்டனில் உள்ள பிரபல முன்னணி இசைக் கலைஞர்களை வைத்து வித்தியாசமான மிரட்டலான 8 பாடல்கள் பதிவு செய்யப்பட்டன.

ரைவிங் ஸ்கூலில் நாயகி பூஜாவிற்கு அஜித் கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கும் காட்சிகளும் அஜித்– பூஜா காதல் காட்சிகளும் பார்ப்பவர் அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்.

இப்படத்தின் முக்கிய காட்சிகள் இங்கிலாந்தில் அஜித் கலந்து கொள்ளும் கார் பந்தயத்திற்கு பின்னர் 15 நாட்கள் படமாக்கப்படும். பாடல் காட்சிகள் இந்திய அரசின் விசேஷ அனுமதி பெற்று இதுவரை படமாக்கப்படாத இடங்களில் படமாக்ககப்பட உள்ளன.

இப்படத்தின் பாடல்கள் விரைவில் வெளிவர உள்ளன.



# அமிர்தாப் கேட்கும் தமிழ்ப் பட வாய்ப்பு

62 வயதான அமிர்தாப் பச்சன் இன்றும் சினிமாவில் மட்டுமல்லாது ஏராளமான விளம்பரப் படங்களிலும் நடித்து வருகிறார். ஸ்டார் பிளஸ் சனலில் 'கோடிபதி' பரபரப்பான நிகழ்ச்சியில் பேர் வாங்கினார். இது மட்டுமல்லாமல் மே 20 ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் சிங்கப்பூரில் நடைபெற உள்ள இந்திய திரைப்பட விழாவுக்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.

'தென்இந்தியப் படங்களில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிட்ட வில்லை. தமிழ் படத்தில் நடிக்க வேண்டும் என்று எனக்கு மூக்கு முட்ட ஆசை. அதை எனது நண்பர்கள் கமலஹாசன், ரஜினிக்காந்த ஆகியோரிடமும் தெரிவித்தேன். சிறிய பாத்திரமாவது கொடுங்கள் என்று கேட்டு இருக்கிறேன். ஹிந்திப் பட உலகைவிட தமிழ் சினிமாத்துறை மிகவும் நிறைமையுடன் விழங்குகிறது' என்கிறார் அமிர்தாப்பச்சன்.

மேலும் வயதான வேடங்களில் கூட நடிப்பது பற்றி நகைச்சுவையாக அவர் தெரிவிக்கையில் "62 வயதில் 26 வயது வாலிபனைப்போலவா நடிக்க முடியும்? தந்தை வேடத்தில் நடிப்பதில் என்ன தவறு? எனக்குஎன்னவோ தந்தை வேடம் என்றால் ஒரு பிரச்சினையும் இல்லாமல் ஒப்புக்கொண்டுவிடுகின்றேன்." முன்பெல்லாம் நான் ஆங்கிலப் பட வாய்ப்புக்களைப் புறக்கணித்தது உண்மை. ஒன்று மகாராஜாவாக நடிக்க சொன்னார்கள் அல்லது தலைப்பாகை அணிந்து போர்வீரனாக நடிக்கக் கேட்டுக்கொண்டார்கள். நல்ல பாத்திரமாக தரவில்லையே! பிறகு எப்படி என்னால் ஆங்கிலப் படம் என்பதற்காக நடிக்க முடியுமா?......

பின்னே? அமிதாப்பா? கொக்கா?



சூர்யா



பாக்யராஜ்

# சங்கடத்தில் சரிதா

நடிகை சரிதா தனது கணவரும் நடிகருமான முகேஷை விட்டுப் பிரிந்துள்ளார்.

கேரளத்தைச் சேர்ந்த சரிதா, கே. பாலச்சந்தரால் கன்னடப் படமான 'மரோ சமுத்ரா' வில் கமல்ஹாசனுக்கு ஜோடியாக அறிமுகப்படுத்தப்பட்டார். பின்னர் தமிழில் ரஜினியுடன் 'தப்புத்தாளங்கள்' படத்தின் மூலம் கொஞ்சம் அந்தமாதிரிப் பாத்திரத்தில் அறிமுகமானார்.

அடுத்து "தண்ணீர் தண்ணீர்" மூலம் முன்னணிக்கு வந்தார். தமிழ், கன்னடம், மலையாளம் என சுமார் 75 படங்களில் நடித்தார்.

இவர் தனது சொந்த மாநிலத்தைச் சேர்ந்த நடிகர் முகேஷை திருமணம் செய்தார். முகேஷ் சரிதாவைவிட கொஞ்சம் இளையவர் என்ற பேச்சு உண்டு.

திருமணத்துக்குப் பின்பு நடிப்பதை நிறுத்திய சரிதா, டப்பிங் குரல் மட்டும் கொடுத்து வந்தார். பின்னர் விஜயை வைத்து "பிரண்ட்ஸ்" படத்தை தயாரித்தார்.

பல மடங்கு ஊதிப் போய்விட்ட இவர் சமீபகாலமாக நடிக்க வந்தார். பாலுமகேந்திராவின் "ஜூலி கணபதி" யில் இவரது நடிப்பு பாராட்டப்பட்டது.

இந்த நிலையில் கணவருக்கும் சரிதாவுக்கும் இடையே பிரிவு ஏற்பட்டுள்ளது. தற்போது கணவரை விட்டுப் பிரிந்து நிரந்தரமாக சென்னையில் குடியேறிவிட்ட சரிதா, விரைவில் விவாகரத்து கேட்டு நீதிமன்றப்படியேறுவார் என்கிறார்கள்.



...றதா நடிகை கன...

...ா என்ற மெகா ஹிட் படத்தில் ...க்கள் பறிபோன பின்பு விவேக்கிற்கு ...மீபத்தில் அவரது தாயார் தேவிகா இறந்து ...ாவை விற்றுவிட்டார். தந்தையோ உடன் ...ல் தனிமையில் வாடி வந்தார். சினிமாவில் ...ன்பதால் டிவியில் நடிக்க முயற்சித்துக் ...குப்பட ஒலிப்பதிவாளர் ஒருவரைக் காதலித்து ...ிட்டார் கனகா என்று கோடம்பாக்கத்தில் பேச்சு ... போட்டு விட்டு ஹைதராபாத்திலேயே கனகா ...ார் என்கிறார்கள்.

# ...கிறார் கனகா?






தனுஷ்
சிந்து



சூர்யா
ஜோதிகா



கமல்

# இணையும் உறவுகள்

திறந்த யன்னலூடாக வந்த குளிர்காற்று அவளின் முகத்தை வருடிச்சென்றது. தூரே இருந்த கதிரவனின் ஒளியும் அவளது மேனியைத் தொடுவதை உணர்ந்தவளாய் போர்வையை விலக்கிக் கண்விழித்தாள்.

நாட்காட்டி பெப்ரவரி 14 ஐக் காட்டியது. இன்று ஓர் புனிதமான நாள் இதையார் தான் மறப்பார்கள் என்று நினைக்கிறாள். நான்கு வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவத்தை நினைக்கின்றாள். நல்ல நட்பாக இருந்து காலப்போக்கில் காதலாகமாறி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் அவனைச் சந்தித்த கடைசிச்சந்திப்பும் அவன் எதிர் கொண்ட அந்தத்துன்பத்தின் பகிர்வின் நாளும் அவளின் நினைவிற்கு வந்தன.

அன்று மாலை இருவரும் கோயிலில் கும்பிட்டுவிட்டு ஒருமரத்தடியில் கதைப்பதற்காக அமர்ந்தவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்தனர். அவன் தான் பேச ஆரம்பித்தான்.

''என்ன கௌசி நாங்கள் இப்படியே இருக்கிறதா நீ முடிவு பண்ணீற்றியா?''

''இல்லை உங்கள் பதிலைத்தான் நான் எதிர்பார்க்கிறன் நீங்கள் றெடியென்றால் நானும் றெடி''.

''நாம் இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தோம். உனது துன்பங்களைப் பகிர்ந்து கொண்டவன்தான் நான். உன் எதிர் காலத்திலும் இப்போதுபோல் துன்பமின்றி இன்பமாகச் சிரித்த முகத்துடன் வாழவேண்டும். இதற்காகத்தான் நான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன். நீ உன்னைப் பார்க்க யாரும்இல்லைஎன்பதற்காக வேலை செய்து இருக்கலாம். நாளை நீ என் மனைவியாக வந்தால் உன்னை எப்படி வைத்திருக்க ஆசைப்பட்டேனோ அந்த ஆசைகள் நிறைவேற வேண்டும். என் விருப்பத்திற்கிணங்க நீயும் உனது பணியில் இருந்து விலக வேண்டும்.''

''சுதாசன் நான் ஒரு தையல் ஆசிரியை. என்னை நம்பி எத்தனையோ மாணவிகள் தையல் பழகுகிறார்கள். இதை முடிக்காமல் எப்படி விலகுவது? இது எனக்கே அழகாய் இருக்கா?''.

''அப்படியென்றால் எனக்குப் பிரச்சினை இல்லை. உன் மனதை நோகடிக்க விரும்பவில்லை. நீஎன்று வேலையை விடுகிறாயோ அன்றில் இருந்து நான் உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளுவேன். இல்லையென்றால் நீ வேலையைச் செய். பிள்ளைகளும் நன்றாகத் தைக்கப் பழகட்டும். நிறுவனமும் நல்ல பெயர் எடுக்கட்டும். நான் மட்டும் இப்படியே இருக்கின்றேன்.''

''அப்படி இல்லை சுதர்சன். இன்னும் ஆறுமாதங்கள்தான் இருக்கு. நான் அதை முடித்தபின் வேலையைவிட்டு விலகுகிறேன்.''

''என்னை எனது மாமா வெளிநாட்டில் இருந்து கூப்பிடுகிறார். எனது அம்மா அப்பா எல்லோரும் போகச் சொல்லுகினம். இந்தத் தடவை என்றாலும் அவர்களின் சொல்லைத் தட்டாமல் போகப்போகின்றேன். ஏனென்றால் எமது திருமணத்திற்கு அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். இப்போதாவது அவர்களின் விருப்பப்படிபோக எண்ணியுள்ளேன்.'' அவன் அவளின் கைகளைப் பற்றிப் பிடிக்க அவளின் கண்களும் கண்ணீர் குளமாயின.




''ஏன் இப்ப அழுகிறாய்? என்ன நடந்தது?''

''இல்லை என்னைக் காத்திருக்கச் சொல்லி நீண்ட தூரம் போகப்போறீங்கள். அப்படியே என்னை மறந்தால் நான் தனித்துத்தானே!''

''பைத்தியம் அவளவிற்கு ஏன் என்னை மிருகத்தனமாகப் பார்க்கிறாய். கௌசி இதே கோயிலில் வைத்துத்துத்தான் எம்காதல் உருவானது. இப்போ இக்கோயிலில் வைத்துத்தான் எமது சந்தோஷமான வாழ்க்கைக்காக பிரியப்போறம். அதையும் எம்வாழ்க்கையில் பொறுத்திருந்து ஜெயித்துக்காட்டுவோம்.'

''நான் வீட்ட போன உடன் எனது அம்மா அப்பாவிற்கு வெளிநாட்டுக்குப் போகசம்மதம் சொல்வேன். அவர்கள் உடனையே என்னைப் பயணம் அனுப்பி விடுவார்கள். நான் இனி உன்னைச் சந்திக்க வாய்ப்பு இருக்காது. என்னையும் நீ மறக்காமல் இருக்க நான ஒரு பரிசு தரப்போறன். அதற்கு நீ சம்மதிப்பாயோ தெறியாது.''

''என்ன பரிசு சுதர்சன்''

''ஒன்றும் இல்லை கௌசி. பாசமானவர்கள் அது உறவுகளாக இருக்கலாம். அல்லது கணவன் மனைவியோ யாராக இருந்தாலும் பிரியும்போது முத்தம்தான் கொடுப்பார்கள். ஏனெனில் காரணம் எத்தனை வருடம் சென்றாலும் மறக்காது. அது கடைசிநேரம் கொடுக்கும் முத்தம் அல்லவா?''

அவள் மறுக்க அப்ப நான் வரட்டுமா என்று எழுந்தவனை இரு கரங்களாலும் கட்டி அணைத்தவளாய் அவன் மார்பினில் சாய்ந்து அவனிடம் ஆறுதல் கேட்பவளாய் அடைக்கலமானாள். அவன் அவளின் தலையைக் கோதிச்சரி செய்தவாறே அவளைத் தன் மார்பில் அணைத்தவனாய் இரு கன்னத்திலும் தன் உமிழ்நீர்பட முத்தமிட்டான். ''நான் போனால்தான் உனக்கு மடல் போடலாம். அதுவரையும் நீயும் போடஇயலாது தானே. நீ இப்பவே என்னை வழிஅனுப்பிவை'' என்றான். இருவருமாகச் சேர்ந்து மௌனமாக அழுது ஆறுதல் தேடினார்கள்.

அவள் சற்று நேரத்தின் பின் கண்களைத் துடைத்துவிட்டு அவனது கண்களைத் துடைத்தவாறே ''நீங்கள் இருக்கும் மட்டும் நான் அழமாட்டேன். நீங்கள் என்னைப் பற்றியோசிக்க வேண்டாம். நல்லபடியாகப் போய்வாருங்கள். எப்போதும் உங்கள் நினைவோடு நான் உங்கள் வரவை எதிர் பார்த்திருப்பேன்.'' என்றாள் அவனின் காலில் விழுந்து வணங்க அவன் இவளின் கரங்களைப் பற்றிப் பிடித்தான். ''நாம் நேற்று வரை காதலர்களாக இருந்தோம் இன்றில் இருந்து நாம் கணவன் மனைவியாக இருப்போம். ஊருக்குத் தெரியாவிட்டாலும் நாம் வணங்கும் விநாயகருக்குத் தெரியுமே. நீ நித்தம் கடவுளை வணங்கு அவர் எம்மைச் சேர்த்துவைப்பார்.''என்றான். பிரியமனமின்றி காலத்தின் தேவையால் பிரிந்தார்கள். நான்கு வருடங்கள் ஆகியும் அவனிடமிருந்து பதில் ஒன்றும் இல்லாமல் நாளுக்கு நாள் துன்பத்தோடும் கண்ணீர் விடுவதை மறக்கவில்லை

மேசை மீது இருந்த கடிகாரம் தன் கடமையை மறக்காமல் அலாம் அடித்தது. திரும்பியவள் கடிகாரத்தைப் பார்ததாள். மணி 7.00 ஐக் காட்டியது. படுக்கையில் இருந்து எழுந்தவள் தன் கண்களில் வடிந்த நீரைத் துடைத்துவிட்டு தனது கடமைகளை முடித்துவிட்டு, கோயிலுக்குப்புறப்பட்டாள்.

வழமைபோல் கோயில் கிணற்றில் கால் கழுவிக்கொண்டு ஆலயத்திற்குச் சென்று வணங்கினாள். திரும்பி வருகையில் பார்வைக்குக் கவர்ச்சியாக இருந்த ஒரு வாலிபன் அதேமரத்தடியில் சாய்ந்தவாறே கதைக்கலானான்.

''மெடம் இன்னைக்கு நல்ல நாள். உங்களோடு பேசவேண்டும் என்று நீண்ட நாளாக எனக்கு ஆசை. என்னென்று கதைப்பதென்று தெரியாமல் தவிச்சேன். ஆனால் இன்று எனக்கு அரிய சந்தர்ப்பம்'' என்ற அவனைக் கோபத்தோடு பார்த்தாள் கௌஸி.

''கோபப்படாதேங்க மெடம். உங்களை நான் அறியாமல் வரவில்லை. எல்லாம் அறிஞ்சவனாகத்தான் வந்திருக்கிறேன். நான் பாஸ்கர். உங்கட சுதர்சன் எனது நண்பன். ஒன்றாகத்தான் இருந்தோம். ஒரே உங்களைப் பற்றிச் சொல்வான். உங்கள் படமும் காட்டினான். ஆனால், அவனை உங்களோடு வாழ விதிவிடவில்லை. வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டு இப்போ தான் செய்த தவறை எண்ணி மனம் வருந்துகிறான். முதலே உங்களைப் புரிஞ்சபடியா உங்களைத் திருமணம் செய்வதாகத் தீர்மானித்து உள்ளேன்.''

அவள் கோபத்தோடு ''நீங்கள் சுதர்சனுக்குச் சொல்லிப்போட்டுத் தான் வந்தீர்களா? அல்லது தெரியாமல் வந்தனீங்களா? என் சுதர்சன் அப்படிச் செய்திருக்க மாட்டார். எப்போதும் அவர்மனதில் நான்தான் இருப்பேன். அதற்கு மாற்றம் இல்லை''

''இல்லை கௌசி நான் சொல்வதை நம்புங்க.''

''சரி நான் நம்பினாலும் என்மனசில என்றும் சுதர்சன் தான் வாழ்கிறார். உள்ளத்தால அவர நேசிச்சு உடலால வேறு ஒருவரைக் கணவனாகத் தேர்தெடுக்கவா? சீ...... எமது கலாசாரத்திற்கே இது நான் செய்யும் துரோகம். அதையும் விட நான் சாகும் வரையும் அவரின் நினைவாகவே வாழ்ந்து விட்டுப் போகின்றேன். நீங்கள் வேறு யாரையும் பார்த்து அவர்களுக்கு ஒரு வாழ்வு கொடுங்கள் நான் வருகிறேன்''

''ஒருநிமிசம்'' என்றான் அவன் சில படங்களை நீட்டினான் பாஸ்கர். அவள் அதை வாங்கி நன்றாகப்பார்த்தாள். வேறுயாருமல்ல. சுதர்சன்தான். முதல் படத்தில் கௌசியின் படத்தோடு அவனும் சேர்ந்து ஒரு படம். இரண்டாவது படத்தில் தாடியுடன் பெட்டில் இருந்தவாறு. மூன்றாவது ஊன்றுகோலுடன் கௌசியின் படத்தை தொட்டவாறு.

அவள் அதிர்ந்தவளாகப் பாஸ்கரைப் பார்க்க, அவன் ஆரம்பித்தான். ''அவன் போய் மூன்றாவது நாளே அக்சிடன்டில் இரு கால்களையும் இழந்திட்டான். அவனால் உன்னைப் பார்க்க முடியாது. அதுதான் என்னை இங்கு அனுப்பிவைத்தான். என்னைப்பொய்சொல்லி உனக்கு வாழ்வு கொடுக்கும்படி. உன்னைப் பார்த்தவுடனே எனக்கே கஸ்டமாக இருக்கு. உங்கள் இருவரையும் பிரிக்க'' என்றான்.


''அவருக்குத்தான் என்னைப்பார்க்க இயலாது. ஆனால், எனக்கு ஒன்றும் இல்லை. நான் உழைத்துப் பார்ப்பேன். என்னால் முடியும்.'' என்றாள்.– ''அப்படியென்றால் வாருங்கள். நானே உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பேன்.'' என்று அவன் கூற, கௌசியும் சுதர்சனைப்பார்க்க பாஸ்கரனின் உதவியோடு தன் வசந்தகாலத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

(முற்றும்)

''சீரியல் நடிகைக்கு சம்பளம் மிச்சம் வைக்காதைங்கோ ஸார்!''

''ஏன்?''

''உணர்ச்சிகரமான காட்சியில் கண்ணீரை மிச்சம் வச்சிடுவாங்க!''



''கோபத்தில அந்தாளைக் கொலை செஞ்சியே, சரி... எதுக்கு 1, 2, 3 – என்று நம்பர் சொல்லிக் கொண்டே கொலை செய்தாய்?''

''கோபம் வரும் போது 1 இல் இருந்து 50 வரை நம்பர் சொன்னா கோபம் குறையும் என்று கேள்விப்பட்டதாலதான்.''





நடுத்தர வயதிலான திருமதி எலிசபெத் பிள்ளைகளை வளர்ப்பதில் தன்னை அர்ப்பணிப்பவள். கலிபோர்னியாவில் உள்ள கன்ரா பாபரா பகுதியில் உள்ள கடைத்தெரு ஒன்றுக்கு சாமான் வாங்க அடிக்கடி போவாள். 59 ஆயிரம் சனத்தைக்கொண்ட நகரின் அந்த பிரதான கடைத்தொகுதியில் அவள் பேரம் பேசுவதில் பலே கில்லாடி.

அந்த கடைத்தொகுதிக்கு அடிக்கடி அவள் செல்லும் போது பிறருடன் உறவும், தொடர்பும் ஏற்படுவதுண்டு. எலிசபெத் இதற்கு விதிவிலக்கானவள் அல்லள். அப்படி ஏற்பட்ட உறவு தான் திருமதி எம்மா சோட் சும்மா சந்தித்து பிறகு உறவு வளர்ந்தது. எலிசபெத்துக்கு வயது அறுபது. அவளது கூட்டாளி எம்மா தனது எழுபதுகளில் இருந்தாள்.

## திரிபுபடுத்தும் பெண்

அந்தக் கடைத்தொகுதிதான் அவர்களது மோசமானவிசயம்நடப்பதற்கானமூலஇடம். அங்குஉள்ள ஸ்டேட் வீதியில் டொபிகல் பேப் எனும் மதுசாரக் கடை களவாக இயங்கி வந்தது. மெக்சிக்கோவில் இருந்து புலம்பெயர்ந்து வந்திருந்த திருமதி எஸ்பன்ஸா ஸ்கியூவல் தான் அதன் சொந்தக்காரி. எலிஸபெத் அந்த இடத்தை மிகவும் அவதானமாகத்தான் தெரிவு செய்திருந்தாள். அந்த மதுசாரக் கடையை திறந்து இயக்குவதற்கு ஸ்கியூவலுக்கு சட்டபூர்வமான அனுமதி இருக்கவில்லை. அதனால் எப்போதும் பயந்து பயந்தே இருப்பாள். பொலிஸ் வருமோ, வந்து கைது செய்யுமோ என்பது தான் அவளுக்கிருந்த பெரிய பயம். கடை நடத்துவதற்கு மட்டுமல்ல; அவளுக்கு அமெரிக்காவில் வசிப்பதற்கும் அனுமதி இல்லை.

களவாடப்பட்ட சொத்துக்களை கொள்வனவு செய்து வருகிறாள் என்று வேறு குற்றச்சாட்டும் அவள் மீது உண்டு. அதற்காக எலிசபெத்தின் சட்டத்தரணியின் மகன் பிராங் தான் அவளுக்காக வாதாடி வருபவன்.

எலிஸபெத்துக்கும் இது தெரியும். திருமதி ஸ்கியூவல் தனது இஷ்டத்துக்கு எதனையும் செய்பவள். அது மட்டுமல்ல, தனது வாடிக்கையாளர்களுக்கு காசு கொடுத்து எவரையும் கொலை செய்யக்கூடியவள்.

எலிசபெத் தனது வாழ்வில் நிறைய கணவன்மாரைக் கண்டவள். இருபது அல்லது அதற்கும் கூடுதலானவர்களை வைத்துக்கொண்டிருந்தவள். இவற்றை விடவும் அதிகமாக இருக்க வேண்டும் என்றுதான் கதை உண்டு.

சிலரை அவள் சட்டபூர்வமான மாப்பிள்ளையாக வைத்திருந்தாள்தான். மற்றவர்கள் அவள் நிறைய மணம் முடித்தது — கொள்ளையாக காசு சம்பாதிப்பதற்கு. படித்தவள் இல்லையென்றாலும் ஆட்களை மடக்குவதில் கெட்டிக்காரி. ஆண்களை தன் வசம் ஈர்ப்பதில் அவள் வல்லவள்.

நீண்ட காலமாக அவளை இன்பப்படுத்தியவன் பிராங் லோவ். அவனுக்குப்பிறந்தவன் தான் இவளின் மகன் பிராங்.




பிராங் 1928இல் பிறந்தான். சட்டபூர்வமாக பிராங் லோவைத் திருமணம் முடிக்க இவள் தான் அவசரப்பட்டாள். அதே நேரம் வேறொருவனுடனும் உறவு வைத்திருந்தாள். என்றாலும், பிறந்த மகனை பிராங் என்று பெயர் வைத்து அவனை பிராங் லோவுடன் தொடர்புபடுத்தி அவனுக்குப் பிறந்தவன் என்று அழைத்து பகிரங்கப்படுத்தியும் விட்டாள். நாசூக்காக அதனைச் செய்திருந்தாள். அதிக இரக்கம், ஆதரவு காட்டுவது போல அவனை வதைத்து வந்தாள். எப்போதாவதுஒரு நாள் தன்னை உதறிவிட்டு அவன் போய்விடுவான் என்பது அவளின் உள் மனதுக்குத் தெரிந்திருந்தது.

## பெரும் நச்சரிப்பு

பிராங்கை வதைப்பது அவளுக்கு உள்ள நரம்பியல் கோளாறினால்தான். இது சம்பந்தமாக வைத்தியம் செய்த டாக்டரிடம் ''என்னோடு பிராங் இருப்பானா? கல்யாணம் செய்யவே அவன் துணியமாட்டானா?'' என்று ஆதங்கப்பட்டிருந்தாள்.

நசுக்கி வதைக்கும் தாய்ப்பாசத்தில் இருந்து பிராங் தன்னை விடுவித்து சுதந்திரமாக இயங்கினான். அவன் உண்மையில் கெட்டிக்காரன். படித்தான். வாழ வேண்டும் என்று நினைத்தான். பின்பு சட்டக்கல்லூரி மாணவனாகி சட்டத்தரணியாக வெளியேறியவன்.

சட்டத்துறை வருவாயினால் பிராங் பிழைத்துக் கொண்டான். அவன் தாயை நம்பி இருக்கவில்லை. அவளின் தயவு இவனுக்குத் தேவைப்படவுமில்லை. உதறிவிட்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

பிராங் தனிமையில் இருந்து யோசிப்பதுமுண்டு. வேண்டுமென்றால் அதனை தியானம் என்றும் சொல்லலாம். அப்போது அம்மாவுக்கு உதவ வேண்டும் என்றும் மனம் விரும்புவதும் அவனுக்குத் தெரியும். என்றாலும், தாயின் அடிமைத்தளையில் இருந்து விடுபடவேண்டும் என்றே யோசிக்கலானான்.

1957 இல் அவனும், தாயாரும் முதல் தடவையாக பிரச்சினைப்பட்டுக்கொண்டனர். பிரச்சினை முற்றி விசர்என்று சொல்வோமே அந்தநிலை வந்ததும் ''நீ இங்கு இருக்க வேண்டாம். போ'' என்று அவனை விரட்டிவிட்டாள் தாயார். பின்பு நிறைய தூக்க மாத்திரைகளைப் போட்டுவிட்டுத் தூங்கிவிட்டாள்.

ஆஸ்பத்திரியில் கோமா நிலையில் இருந்தது கண் விழித்ததும் எலிசபெத் கண்ட முதல் ஆள் ஓல்கா என்ற தாதிதான். பிராங்கும் இவள் கட்டிலில் கிடந்த நேரம் வந்து பார்த்தான். மகனுக்கும், தாதிக்கும் இடையில் காதல் கவர்ச்சி ஏற்பட்டிருந்தது.

சில மாதங்களின் பின் ஓல்கா கர்ப்பிணியாக இருந்தாள். ஓல்காவைத் திருமணம் செய்ய இருப்பதை பிராங், தாயாரிடம் தெரிவித்தான். தாயார் வழமைக்குத் திரும்பினாள். ''நீ எனது மகனை கல்யாணம் முடித்தால் உன்னைக் கொல்லுவேன். நீ மகனை முடிக்கப் பொருத்தமில்லை'' என்று தாதிக்குச் சொல்லி வைத்தாள்.

ஒல்காவை பிராங் இரகசியமாக மணம் முடித்தான். இரகசியமாகவே அவளுடன் வாழ்ந்தும் வந்தான். மணம் முடித்த நாள் முதல் இரகசியமாகவே அவளிடம் போய் வந்தான். அம்மாவுடன் தூங்குவான். அவளுக்குத் தெரியாமல் ஒல்காவிடம் போய் வருவான். இதுதான் அவனின் கதி!

ஆனாலும் மூன்று, நான்கு நாட்களுக்குள் விசயம் வெளியே தெரிய வந்தது. இந்த உறவை முறிக்க பல வழிகளில் தாயார் முயன்றாள். எந்த முயற்சியும் சரிப்பட்டு வரவில்லை. இறுதியில், மதுக்கடையில் திருமதி ஸ்கியூவலுடன் ஏற்பட்ட உறவு நினைவுக்கு வந்தது.

காசுக்கு கொலை செய்ய மதுக்கடைக்காரி உதவினாள். பிராங்கின் மனைவி வயிற்றில் பிள்ளையோடு கொலையுண்டாள். அன்பு மகன் தனக்கு மட்டும் வேண்டும் என்பதற்காக மருமகளை கொலை செய்தாள் தாயார் எலிசபெத்.

*****

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்'**
**மார்ச் 29 — ஏப்ரல் 04. 2004 வரை**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் இரண்டில் ஆட்சிப் பெற்ற சுக்கிரனோடு இருப்பது விசேஷம். மேலும் சந்திரசாரம் பெற்று இருப்பது சிறப்பு. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராகு, கேதுவின் தொடர்பு ராசிக்கு இருப்பது நல்லதல்ல. மன அமைதியைப் பாதிக்கலாம். (2, 7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் கேது இருப்பது குடும்ப அமைதியைப் பாதிக்கலாம். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். சனி அதாவது தொழிலுக்குரியவர் மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு நல்ல நிலையில் இருந்து ராசியைப் பார்ப்பது புதுப்பலன் சேர்க்கும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். மேலும் சந்திர சாரம் பெற்று நகர்வது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 5) உரிய புதன் 11 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 11 இல் இருப்பதால் தாய் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். (7, 12) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். தர்மகர்மாதிபன் சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 10 ஆம் வீட்டை குரு பார்ப்பதால் தொழில் பாதுகாப்பு உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1, 4) உரிய புதன் தசம கேந்திரத்தில் இருப்பது விசேஷம். மேலும் புதன் தன் நட்சத்திர சாரத்தில் நகர்வது சிறப்புடையது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். சென்ற இடம் எல்லாம் சிறப்புண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (7, 10) உரிய குரு மூன்றில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி குறையலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. மேலும் ராசியில் சனி இருந்து குருவையும் 7 ஆம் வீட்டையும் 10 ஆம் வீட்டையும் பார்ப்பது நல்லதல்ல. குறிப்பாக சூரியனை சனி பார்ப்பது பிதாவுக்குக் கூடாது. 12 இல் சுக்கிரன் ஆட்சியாக இருப்பது சயன சுகம் உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் கன்னி முதல் விருட்சிகம் வரை அதாவது மூன்றாம் வீடு முதல் 6 ஆம் வீடுவரை சஞ்சாரம் செய்வது அவ்வாறு நல்லதல்ல. எந்தக் கிரகமும் ராசியைப் பார்க்கவில்லை. ஆகவே, மன அமைதி உண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டுக்குரிய சூரியன் 9இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7 க்குரிய சனி 12 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு தாமதமானாலும் குரு இரண்டாம் இடமான குடும்பஸ்தானத்தில் இருப்பதால் திருமண முயற்சி பலன் அளிக்கவும் கூடும். 10க்கு உரியவர் 11 இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். சுக்கிரன், குரு நல்ல நிலையில் இருப்பது நல்ல பலனைத்தரும்.

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | ராகு | சுக்கிரன் செவ்வாய் | சனி |
| | செவ்வாய் ரோகிணி சந்திரன்<br>சுக்கிரன் கார்த்திகை சந்திரன்<br>புதன் ரேவதி புதன்<br>சூரியன் ரேவதி புதன்<br>குரு பூரம் சுக்கிரன்<br>சனி திருவாதிரை ராகு | | |
| | | | குரு |
| | | கேது | |

பங்குனி 22 முதல் பங்குனி 28 வரை

சந்திரன் கன்னிமுதல் விருச்சிகம் வரை

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**

ராசிநாதன் சூரியன் 8 இல் இருப்பது சிறப்பில்லை. ஆயினும் புதனோடு இருப்பது சிறப்பு. மேலும் புதனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 11) உரிய புதன் 8 இல் இருப்பது கல்வியில் ஆர்வம் இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். (4, 9) உரிய செவ்வாய் 10இல் இருப்பது வீடு, வாகனம் லாபம் தரும். பெற்றோர் நலம். 7க்குரிய சனி 11 இல் இருப்பது திருமண பலன் உண்டு. ஆனால், ராசியில் குரு இருப்பது அவ்வளவு நல்லது அல்ல. 10க்குரிய சுக்கிரன் 10 இல் ஆட்சியாக இருப்பது தொழில் துறை முன்னேறும். ராசியையும், சூரியனையும் சனி பார்ப்பது ஒரு குறை சில தடைகள் வரக் கூடும்.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1, 10) உரிய புதன் 7 இல் இருப்பது நல்லது மேலும் தன் சொந்த நட்சத்திரத்தில் செயல்படுவது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும். (4, 7) உரிய குரு 12இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பை பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (2, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. அதிஷ்டம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். 10இல் உள்ள சனி 10 ஆம் பார்வையால் 7 ஆம் வீட்டைப் பார்ப்பது கூடாது. குறிப்பாக குடும்பத்தில் சண்டை சச்சரவுக்கு இடமுண்டு.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

ராசி நாதன் சுக்கிரன் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் சந்திரனின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது சிறப்புடையது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 7) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பை பாதிக்கலாம். (4, 5) உரிய சனி 9 இல் இருப்பது ஒரு வகையில் நல்லது. வீடு வாகனம் லாபம் தரும். குழந்தைகள் சிறப்படைவர். தொழில் ஸ்தானம் தீய கிரகங்களால் தாக்கப்படாமல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குரு 11 இல் இருப்பது குரு சுகம் உண்டு. பல நல்ல பலனைத் தரலாம்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிநாதன் செவ்வாய் 7 இல் ஆட்சிப் பெற்ற சுக்கிரனோடு இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவதுசிறப்புடையது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 5) உரிய குரு 10 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். (3, 4) உரிய சனி 8 இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். சகோதரங்களும் பகை கொள்ளக் கூடும். 7 க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். 10 க்குரிய சூரியன், குருவோடு பரிவர்த்தனம் அடைவதால் தொழில்துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1, 4) உரிய குரு 9 இல் இருப்பது நல்லது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரசாரத்தில் செயல்படுவது நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். தாய் நலம். (2, 3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். சகோதரங்கள் உதவுவர். (7, 10) உரிய புதன் 4 இல் இருப்பதால் திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழில்துறை முன்னேறும். ஆனால், 7 இல் உள்ள சனி, குருவையும், ராசியையும், சூரியன், புதனையும் பார்ப்பது நல்ல பலனைக் குறைக்கக் கூடும். சுக்கிரன் குரு ஆகிய சுபக்கிரகங்கள் ராசியைப் பார்ப்பதால் தோசம் விலகும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4,. திருவோணம், அவிட்டம் 1,**

ராசிநாதனும் இரண்டாம் வீட்டுக்குரிய வருமான சனி 6 இல் இருப்பது ஒரு வகையில் நல்லது எனலாம். ஆனால், ராகுவின் நட்சத்திரசாரத்தில் செயல்படுவது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். கையில் பணம் இருக்காது. 4க்குரிய செவ்வாய் ஐந்தில் ஆட்சி பெற்ற சுக்கிரனோடு இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தாய் நலம். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு 8 இல் மறைவதால் சாதகம் அற்ற நிலை நிலவக்கூடும். 10 க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். குரு மறைவது நல்ல பலனைத் தாமதப்படுத்தக் கூடும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1, 12) உரிய சனி 5 இல் இருப்பது நல்லதல்ல. மேலும், ராகுவின் நட்சத்திர சாதகத்தில் செயல்படுவது நல்லதல்ல. எடுத்த முயற்சி பாதிக்கலாம். நித்திரை பாதிக்கலாம். (2, 11) உரிய குரு 7 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். மூத்த சகோதர உதவி இருக்கும். நண்பர்கள் உதவுவர். (4, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். பெற்றோர் நலம். 7 ஆம் வீடும், 2 ஆம் வீடும் அதாவது குருவும் சூரியனும் பரிவர்த்தனம் அடைவதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும் 10 இக் குரிய செவ்வாய் 4 இல் ஆட்சி பெற்ற சுக்கிரனோடு இருப்பதால் தொழில்துறை முன்றேறும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 6 இல் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. ஆனால், சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பண்டு. (2, 9) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் கையில் பணம் இக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4, 7) உரிய புதன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். சனி ராசியைப் பார்ப்பது கூடாது. குரு மறைவதும் நல்லதல்ல. ராசியில் சூரியன், புதன் இணைவு ஒரு அளவுக்கு ஆறுதல் உண்டு.

# சுமுகமாகத் தீர்ந்த வாக்களிப்பு சர்ச்சை

வடக்கில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்துவிட்டன. வாக்களிப்புக்கு இன்னமும் சொற்ப நாட்களே இருக்கின்றன.

இதுவரை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களின் வாக்களிப்பு நிலைவரம் தான்.

யாழ்ப்பாண மாவட்டதேர்தல் தொகுதிகளுக்குள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பகுதிகளும் உள்ளடக்கம். அப்பகுதிகளில் சுமார் 65 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். அவர்களின் வாக்களிப்புத் தொடர்பான சர்ச்சை பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இருந்து வந்தது.

இந்த மக்களின் வாக்களிப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தொடக்கம் ஏனைய பேரினவாதிகள் வரை நழுவல் போக்கான கருத்துக்களையே ஆரம்பம் முதல் வெளியிட்டு வந்திருக்கின்றார்கள்.

எனினும் சில சர்வதேச நாடுகள் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் என்பன இந்த விடயத்தில் விடாப்பிடியாக நின்று ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் அழுத்தங்களைக் கொடுத்ததன் விளைவாக வன்னி மக்களும் வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்களுக்குகென முகமாலை இராணுவ சோதனை நிலையங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு படைத்தரப்பினர் உட்பட சகல தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு வசதியாக தமது முன்னணிக் காவலரண்களை 500 மீற்றர் தூரம் பின்நகர்த்துவதற்கு படைத்தரப்பினர் சம்மதித்திருக்கின்றனர். இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் முகமாக தங்களின் முன்னணிக் காவலரண்களை ஆயிரம் மீற்றர் தூரம்வரை பின்நகர்த்த இணக்கம் தெரிவித்துவிட்டனர்.

அவ்வாறு பின்நகர்த்தப்பட்ட பகுதிகளில் பொலிஸார் ஆயுதங்களுடன் வந்து தமது தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளமுடியும் எனவும் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள வாக்காளர்களை முகமாலைக்கு அழைத்து வருவதற்கு வாகன வசதிகளும் மற்றும் ஏனைய வசதிகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்களைப்போல விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்களும் வாக்களிப்பதற்கான சூழல் ஓரளவுக்கு ஏற்படுத்தப்பட்டு விட்டது. வன்னிப் பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவான சூழல் ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழலில் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சில சக்திகள் திரைமறைவில் சதி செய்து கொண்டிருக்கின்றன என்றும் தெரிகிறது.

வன்னி மக்களும் வாக்களித்தால் தமது தோல்வி உறுதியாகிவிடும் என்பதைத் தெரிந்து கொண்டுள்ள சிலசக்திகள் அந்த வாக்களிப்புக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய திரைமறைவு நடவடிக்கைகளில் முழுவீச்சுடன் ஈடுபட்டிருக்கின்றன என்ற தகவல் கசியத்தொடங்கியிருக்கிறது.

அரசாங்கத்தின் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு வன்னிப் பகுதியில் செயலிழந்துள்ள காரணத்தினால் அங்கு தேர்தல் நடத்த அனுமதிக்கக்கூடாது என்று ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் தேர்தல் ஆணையாளருக்கும், ஜனாதிபதிக்கும் அழுத்தத்தைக் கொடுத்தன. அனால், அந்த அழுத்தங்கள் எவையும் எடுபடாமல் போக, வன்னி மக்களின் வாக்களிப்பு உறுதியாகிவிட்டது.

இந்த நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வாக்களிக்க வரும் மக்களுக்கு ஆபத்துக்கள் இருப்பதாகக் கூறி அவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று தகவல். முகமாலையில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையத்தில் படையினரின் சோதனைகள் அதிகமாக இருக்கும் என்றும் வாக்களிப்பின் போது அங்கு பெரும் அசம்பாவிதங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் மறைமுகமாகப் பிரசாரம் செய்யும் நடவடிக்கையில் சில கட்சிகளின் பிரமுகர்கள் ஈடுபட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதியிலிருந்து வரக்கூடிய வாக்காளர்களுக்கு பயப்பீதியை ஊட்டி அவர்களை வாக்களிக்க வராமல் தடுக்கின்ற முயற்சியே இது என்று அவதானிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணி

## மரண அறிவித்தலும் சபிண்டிக்கிரியை அழைப்பும்

அன்னை மடியில்
13 – 01 – 1915

இறைவன் அடியில்
29 – 02 – 2004



### ந.இரத்தினம்

ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துனர்
*(கோண்டாவில், முல்லைத்தீவு சாலைகள்)*

யாழ்ப்பாணம் பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி இரத்தினம் 2004.02.29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருகோணமலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற நல்லதம்பி நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்ற வள்ளியம்மை அவர்களின் அன்புக் கணவரும், சரஸ்வதி, காலம் சென்றவர்களான தங்கம்மா, சிவபாக்கியம், நவரத்தினம், நல்லம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும், பரமேஸ்வரி (சாவகச்சேரி) காலம் சென்ற பரமேஸ்வரன் (யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி) யோகேஸ்வரி, யோகேஸ்வரன் (கட்டடங்கள் திணைக்களம் – திருகோணமலை), சர்வேஸ்வரன் (யாழ்.தென்மராட்சி வலயக்கல்வித் திணைக்களம்), கணேஸ்வரன் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கோணேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராஜன் (ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்), அன்னலட்சுமி, மகேந்திரன், தனலட்சுமி, சந்திரமதி, சந்திராவதி (பிரான்ஸ்) வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வனஜா, அனுலா (டென்மார்க்), கியான் (வெலிமடை முஸ்லிம் ம.வி), குமுதினி, நிரஞ்சினி, (யாழ்.மருத்துவ பீடம்), தர்சினி (பொறியல் பீடம் – பேராதனை), பரணீதரன், யாழினி, ரவிச்சந்திரன் (நெதர்லாந்து), சுபாசினி, ஜெயச்சந்திரன், பாமினி (சுவிஸ்), ராஜினி (யூ.கே), வாணி (யாழ்.போதனா வைத்தியசாலை), பார்த்தீபன் (திருமலை – தொழில்நுட்பக்கல்லூரி) மற்றும் பிரான்சில் வசிக்கும் நவநீதன், தனுஜா, தினேஸ், சுகான்யா, நிரஞ்சனா, அர்ச்சனா ஆகியோரின் பாட்டனாரும், தர்சன், தர்சினி, செந்தூரன், பிரியன் பாபு, சங்கீதா, கீர்த்திகன், விதுசா, சஞ்சுதி ஆகியோரின் கொள்ளுப்பாட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2004 – 03 – 01 திகதி திங்கட்கிழமை திருகோணமலை பொது இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

**நன்றி நவிலலும் சபிண்டிக்கிரியை அழைப்பும்** எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்து கேட்டு சகலவழிகளிலும் உதவிகளை புரிந்தும் தொலைபேசி, தபால் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு 2004 – 03 – 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று, இல 04, சிவபுரி, திருகோணமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:** இ.யோகேஸ்வரன் (மகன்)
திருகோணமலை.

## சொற்சிலம்பம் போட்டி இல.101

**சொற்சிலம்பம்101போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 05ஆம் திகதி ஆகும். விடைகள் ஏப்ரல் 12ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 19 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.99க்கான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

**தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

### சொற்சிலம்பம் போட்டி இல.101

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | | ■ |
| ■ | 10 | | 11 | | ■ | 12 | 13 |
| 14 | | | | ■ | 15 | | |
| 16 | | ■ | 17 | 18 | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

### சொற்சிலம்பம் போட்டி இல.101

**இடமிருந்து வலம்**

1. இதன் தலைவர் கொல்லப்பட்டதால் மத்திய கிழக்கில் பதற்றம்.
4. உழைத்துப்பெறு.
7. மழையை எதிர்பார்த்துச் செய்யப்படும் வேளாண்மை நிலத்தை இப்படிக் கூறுவர்.
8. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
9. வகுப்பு.
10. வசனம்.
12. எது.
14. பூச்சிகளின் முழுவுடலி, நிலைக்கு முந்திய நிலை.
15. பலவற்றைக் கோர்த்தால் வருவது.
16. முற்கால ஆயுதங்களுள் ஒன்று.
17. இராமன் மகன்.
19. இது மறப்பது நல்லதல்ல.
20. நூற்று வீதத்தை இதில் கூறுவர்.
21. காற்றோடு அள்ளுப்பட்டு வரும் தூசி.
22. நாசியில் தூசி புகுந்தால் வரும்.

**மேலிருந்து கீழ்**

1. அமெரிக்காவை அண்டிய தீவு.
2. ஒரு விலங்கு. இதன் தோலுக்கும் கொம்புக்கும் மதிப்பு.
3. தொடுகை உணர்வு.
4. சகலதும்.
5. மகாகவி.
6. நினைவு நாள்/இறந்த தினம்.
10. மெலிந்து, நலிந்து போதல்.
11. திருவள்ளுவர் சகோதரன்.
13. தோய்த்தல்.
14. ஒன்று சேர்ப்பு.
15. அரச.
18. குறைவு/சிறுமை/அழியாமை/ பயனின்மை.
19. ஆறு.
20. ஒரே அளவான.

### சொற்சிலம்பம் போட்டி இல.99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | ப் | 3 ப | 4 ரு | ■ | 5 பா | தி |
| 6 து | ரு | ■ | 7 க | சி | 8 த | ல் | ■ |
| 9 கு | ம் | 10 ப | ல் | ■ | க | ■ | 11 ஓ |
| ■ | 12 பு | கை | ■ | 13 பு | ரா | ண | ம் |
| 14 அ | ■ | 15 வ | 16 ர | லா | று | ■ | க |
| 17 ரு | 18 க | ர் | த | ல் | ■ | 19 சு | டு |
| 20 ப | தி | ■ | ம் | ■ | 21 க | த் | த |
| 22 வி | ரை | வு | ■ | 23 ம | லி | த | ல் |


## சொற்சிலம்பம்-98 பரிசு பெறுவோர்.

1. செல்வி.ம.உதயா,
156/24, டொக்கியாட் றோட்,
திருகோணமலை.
2. எஸ். ஜெயச் சந்திர ராசா,
இராசேந்திரம் குளம்,
வவுனியா.
3. மா.செல்லத்துரை,
112, கிறீன் வீதி,
திருகோணமலை.

## பாராட்டுப்பெறுவோர்

1. செ.சாருகா,
57, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
2. பி. துவாரகன்,
இல.15, கதிரேசன் வீதி,
வவுனியா.
3. ல.வனிதா,
221, லூர்து ஆலய வீதி,
திருகோணமலை.
4. க.நடராசா,
"ஸ்ரீ அகம்",
ஆரையம்பதி—02.
5. திருமதி. ஆர்.எம்.தயானந்தன்,
15ஆம் கட்டையடி,
உடுப்பிட்டி.
6. திருமதி. ஜெ.ஜேசுதாசன்,
91/1, மேபீல்ட் லேன்,
கொழும்பு—13.
7. சி.அரச குல இரத்தினம்,
டச்சு வீதி, சங்குவேலி,
மானிப்பாய்.
8. இ.கோபால்,
இல.534, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
9. வை.ரஜனிகாந்தன்,
மணிக்கூட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
10. ஆ.சுகேதன்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

# நெட் குறும்பு




### ஜோக்

சாமியார் ஒருவர் தனது ஒரு காலிலே சலங்கை கட்டியிருந்தார். அதுபற்றி அவருடைய சீடர் ஒருவர் சாமியாரிடம் வினாவினார். ''குருவே தாங்கள் ஒரு காலில்மட்டும் சலங்கை கட்டியிருக்கிறீர்களே ஏன்?''

குரு சொன்னார். ''சிஷ்யா... தவறான எண்ணங்கள் வரும்போதெல்லாம் இந்த சலங்கை, சத்தம் எழுப்பி என்னை உஷாரடைய வைத்துவிடும். அப்பொழுது தவறான எண்ணங்கள் எல்லாம் ஒழிந்துவிடும். அதற்காகத்தான் இதைக் கட்டியிருக்கின்றேன்.''

சீடர் ஆச்சரியத்துடன் கேட்டார். ''அப்படி என்றால் நீங்கள் இதுவரை தப்பு தண்டா பண்ணியே இல்லையா சுவாமி?''

குரு சொன்னார். ''அதிக தடவைகள் அல்ல. கடந்த வருட ஆரம்பத்தில் பக்கத்து வீட்டுப்பெண் ஒருவருடன், ஒன்பது மாதங்களுக்கு முன் என்னைச்சந்திக்க வந்த உறவுக்காரப் பெண்ணுடன், ஆறு மாதங்களுக்கு முன் என்னிடம் வரம் வாங்க வந்த இளம் பெண் ஒருவருடன், நான்கு மாதங்களுக்கு முன் என்னிடம் வந்த விதவைப் பெண் ஒருவருடன், மூன்று மாதங்களுக்கு முன் எனது மச்சாள் ஒருவருடன், கடந்த மாதம் என்னிடம் சிஷ்யையாக சேர வந்த பெண் ஒருவருடன், மூன்று நாட்களுக்கு முன் ஆச்சிரமம் துப்புரவு செய்ய வந்த பெண் ஒருவருடன் மட்டும்தான் தப்புப் பண்ணி இருக்கிறேன். மற்ற நேரமெல்லாம் சலங்கை என்னை உஷார்ப்படுத்தி தப்புப் பண்ணாமல் தடுத்துவிட்டிருக்கிறது.''

இதனை கேட்ட சிஷ்யர் சொன்னார். ''குருவே அப்படியென்றால் நீங்கள் சலங்கைலய காலில் கட்டுவதைவிட கொஞ்சம் மேலே ...ட்டுவதுதான் நல்லது.''

***

### ஜானிக்கு – அவனது அம்மா எழுதிய அன்பு மடல்

அன்புள்ள ஜானிக்கு!

நான் இந்த கடிதத்தை மெதுவாகத்தான் எழுதுகிறேன். நான் இதை அவசரப்பட்டு வேகமாக எழுதினால் உன்னால் இதை வேகமாகப் படிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், நீ படிப்பிலே மக்கு.

ஜானி! நீ வீட்டை விட்டுப்போகும் போது இருந்த வீட்டிலே இப்போ நாய்கள் இல்லை. நாங்கள் இருந்த வீட்டிலிருந்து 20 மைல் தொலைவில் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றனவாம். பேப்பரில் வந்திருந்தது. அன்றைக்கே அந்த வீட்டை உனது அப்பா காலி பண்ணச் சொல்லிவிட்டார். ஆனால், தற்போது நாம் இருக்கும் புது வீட்டின் விலாசத்தையும் உனக்கு தரமுடியாமல் இருப்பதையிட்டு நான் கவலைப்படுகிறேன்.

ஏனென்றால், இதற்கு முன்பு இந்த வீட்டில் இருந்தவர் இந்த வீட்டினுடைய நம்பரை–அவரது புதிய வீட்டில் வைப்பதற்காக எடுத்துக் கொண்டு போய்விட்டார். தனது வீட்டு விலாசம் மாறுவதை அவர் விரும்பவில்லையாம்.

நாங்கள் புதிதாக குடிவந்துள்ள இந்த இடம் பரவாயில்லை. இங்கு வாஷிங் மெஷின் கூட இருக்கிறது. ஆனால், ஒரு பிரச்சினை அது அவசரத்துக்கு உடுப்பை தோய்த்துத் தருவதாக இல்லை. மூன்று நாட்களின் முன்னால் மூன்று சட்டைகளை அதற்குள் போட்டு வாஷிங் மெஷினின் பட்டனை அமத்திவிட்டேன். பிறகு கொஞ்சம் சத்தம் கேட்டது. அதன் பின்னர் சட்டைகளைக் காணவில்லை. எங்கே போனது என்றும் தெரியவில்லை. எப்போ தோய்த்து முடித்து திரும்பி வருமென்று தெரியவில்லை.

இங்கே கால நிலையும் பரவாயில்லை. போனவாரத்தில் மட்டும் இரண்டு முறை மழை பெய்தது. முதலாவது முறை மூன்று நாட்களும், இரண்டாவது முறை நான்கு நாட்களும் மழை பெய்தது.

நீ கோட் ஒன்று அனுப்பும்படி கேட்டிருந்தாய் அல்லவா? இத்துடன் அனுப்பிவைக்கிறேன். தபாலில் அனுப்புவதற்கு கோட்டின் நிறை அதிகமாக இருந்தது. எனவே அதிலிருந்த பட்டன்களை அறுத்து எடுத்து அவைகளை கோட்டின் பொக்கற்றுக்குள் போட்டி




ருக்கின்றேன். ஏன் வீணாக காசை தபால் திணைக்களத்திற்குக் கொடுப்பான்?

சுடுகாட்டில் பாட்டியை எரித்ததற்கான பில் இன்னும் கட்டவில்லை. இந்த முறையும் அதனை கட்டாவிட்டால் பாட்டியை திருப்பி வீட்டுக்கு அனுப்பி விடுவோம் என்று கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். மறுபடியும் கஷ்டமாக இருக்கும்.

உனது அப்பா மயானத்தில் புல்வெட்டும் வேலை ஒன்றில் சேர்ந்திருக்கிறார். மிகவும் நல்ல–கௌரவமான வேலையாம். தனக்கு கீழே சுமார் ஐநூறு பேர் வரை (படுத்து) இருக்கின்றார்கள் என்ற பெருமை அவருக்கு. தான் ஐநூறு பேருக்கு மேலாக வேலை செய்வதாக எல்லோருக்கும் சொல்லி பெருமைப் பட்டுக் கொள்கிறார்.

உனது அக்காவுக்கு இன்று காலை குழந்தை பிறந்துவிட்டது. ஆனால், இன்னும் பெயர் வைக்கவில்லை. அதனால், அது ஆண் குழந்தையா அல்லது பெண் குழந்தையா என்று இன்னமும் சரியாகத் தெரியவில்லை. நீ அந்த குழந்தைக்கு மாமாவா அல்லது மாமியா என்பதையும் என்னால் சரியாக சொல்ல முடியவில்லை.

உனது மாமா கடந்த வாரம் சாராயப் பீப்பாய் ஒன்றுக்குள் விழுந்து விட்டார். அவரை காப்பாற்றப்போன இரு நண்பர்களையும் போட்டு அடி அடியென்று அடித்துவிட்டு, கடைசியில் சாராயத்தில் மூழ்கி செத்துபோய் விட்டார். அவரை சுடலையில் போட்டு எரித்த போது மூன்று நாட்கள் முழுசாக நின்று எரிந்தாராம். வேறு ஒன்றும் இல்லை. மற்றவை அடுத்த மடலில்.


அன்புடன் உன் அம்மா.

# ஒளிந்திருக்கும் ஓவியம்




மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 7 ஓநாய்களின் தலைகள் அதில் ஒளிந்திருக்கின்றனவாம். நாங்களும் முயற்சி செய்து பார்த்தோம். 5 தலைகளையே கண்டுபிடிக்க முடிகிறது. மிகுதி இரண்டும் எங்கே? கொஞ்சம் முயற்சி செய்து கண்டுபிடித்து சொல்லுங்களேன்! பிளீஸ்–

# நெட் குழப்பம்




அருகே உள்ள வட்டத்தைப் பாருங்கள். ஒரே கோடு வளர்ந்து வளர்ந்து குழியாக குறுகிச் சென்று மத்தியிலே வட்டத்தில் முடிவது போல் தெரிகிறது என்றுதானே நினைக்கிறீர்கள். SORRY அப்படி எதுவுமே இல்லை. உள்ள அத்தனை வட்டங்களும் தனித்தனி வட்டங்கள். முதல்வட்டத்துடன் அடுத்த வட்டங்களுக்கு எந்தவிமான தொடர்புமே இல்லை என்கிறோம் நாம். கொஞ்சம் பரிசீலனை செய்து பாருங்கள்.

# கண்ணாமூச்சி



அருகேயுள்ள மீன்களைப் பாருங்கள். இந்த மீன்களின் உடல்பாகங்கள் சரிந்து இருப்பதுபோ ன்று தெரிகின்றன. ஆனால், நன்றாக உற்றுப்பாருங்கள் அல்லது அந்த மீன்களின் உடல் பகுதியில் அடிமட்டம் ஒன்றை வைத்துப் பாருங்கள். ஐந்து மீன்களின் உடல் பகுதியும் சமாந்தரமானவையாகவே இருக்கும்.




# விடுகதைகள்

1. இருபுறமும் பாதை இடையில் ஒரு சுவர் அது என்ன? மூக்கு
2. கனை ஒன்று சுவர் ஒன்று அது என்ன? தேங்காய்
3. காலும் இல்லை கையும் இல்லை காடுமணல் நெடுகச் செல்வான் அவன் யார்? பாதை
4. சுற்றி விட்டால் சுழன்று சுழன்று ஆடுவான் ஆவன் யார்? பம்பரம்
5. ஓட்டு வீட்டில் ஒன்பது ஓட்டைகள் அது என்ன? மனித உடல்
6. நடமாடும் வீட்டுச் சொந்தக் காரன் நடந்து போனால் ஆமைக்கும் குறைந்த வேகம் அவன் யார்? நத்தை
7. பிறந்த உடனே வயிற்றாலே போகும் அவன் யார்? பாம்பு
8. இரண்டு ஓட்டைகளுக்குள் ஒரு தடி அது என்ன? அகப்பை
9. சுடச் சுட வாங்குவான் தின்ன மாட்டான் அது என்ன? திருகணி
10. ஏறுவான் ஆனால் இறங்க மாட்டான் அது என்ன? வயது

பெ. யூலியற் ஷாளினி
அந்தோனியார் கோவில்,
பள்ளிக்குடா.

# சிரிப்பின் வகைகள்

| | | |
|---|---|---|
| துன்பத்தில் சிரிப்பவன் | — | மனிதன் |
| அறியாமல் சிரிப்பவன் | — | மடையன் |
| இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் | — | கோமாளி |
| இன்பத்தில் சிரிப்பவன் | — | ஏமாளி |
| கண்பார்த்து சிரிப்பவன் | — | காரியவாதி |
| காணாமல் சிரிப்பவன் | — | கஞ்சன் |
| கற்பனையில் சிரிப்பவன் | — | கவிஞன் |
| கோபத்தில் சிரிப்பவன் | — | சிந்தனையாளன் |
| மோகத்தில் சிரிப்பவன் | — | வெறியன் |
| நீதியோடு சிரிப்பவன் | — | அறிஞன் |
| நிலை மறந்து சிரிப்பவன் | — | காதலன் |
| மகிமையில் சிரிப்பவன் | — | மன்னன் |
| மாண்பில் சிரிப்பவன் | — | பண்பாளன் |
| அருளுக்குச் சிரிப்பவன் | — | ஆண்டி |
| சிரிக்கவைத்துச் சிரிப்பவன் | — | காமடியன் |
| கொடுக்கும்போது சிரிப்பவன் | — | சூழ்ச்சிக்காரன் |

த.பத்மநாதன்,
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

# உலக தினங்கள்

| | | |
|---|---|---|
| உலக கசநோய் தடுப்பு தினம் | — | பெப்ரவரி 25 |
| உலக மகளிர் தினம் | — | மார்ச் 08 |
| உலக ஊனமுற்றோர் தினம் | — | மார்ச் 15 |
| உலக வனதினம் | — | மார்ச் 21 |
| உலக நீர் தினம் | — | மார்ச் 22 |
| உலக வானிலை நாள் | — | மார்ச் 23 |
| உலக நல வாழ்வு தினம் | — | ஏப்ரல் 7 |
| உலக தொழிலாளர் நாள் | — | மே 01 |
| பத்திரிகை சுதந்திர நாள் | — | மே 02 |
| உலக செஞ்சிலுவை தினம் | — | மே 08 |
| உலகத் தொலைத் தொடர்பு நாள் | — | மே 17 |
| புகையிலை எதிர்ப்பு நாள் | — | மே 31 |
| தாக்குதலுக்கு பலியான உலக சிறார் தினம் | — | ஜூன் 04 |
| உலக சுற்றுச் சூழல் தினம் | — | ஜூன் 26 |
| உலக நீரிழிவு தினம் | — | ஜூன் 27 |
| உலக எயிட்ஸ் தினம் | — | டிசம்பர் 01 |

ப. துளசி,
தரம் 10,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# உபதேசம் செய்யக் கூடியவர்

முன்னொருகாலத்தில் தரங்கினி என்ற ராஜா ஒருவர் இருந்தார். அவருக்கு ஞானம் பெற வேண்டும் என்ற ஆசை வந்தது. தனக்கு உபதேசம் செய்யக் கூடியவர் யார் என ஆராய்ந்தார். இறுதியில் தனது ராஜ குருவே தனக்கு உபதேசம் செய்யத் தகுதியானவர் என்று முடிவு செய்தார்.

ராஜகுருவிடம் தனது எண்ணத்தைக் கூறி ஞானோபதேசம் செய்திட வேண்டினார். ராஜகுருவுக்கு அரசனின் கோபம் பற்றித் தெரியும். அவரது கோரிக்கைக்கு இணங்காவிட்டால் தன் கதி என்னவாகுமோ எனப் பயந்து ஒப்புக் கொண்டார்.

மறுநாளில் இருந்து ராஜாவுக்குத் தான் கற்றவற்றை உபதேசிக்கத் துவங்கினார். நாட்கள் பல கடந்தனவே ஒழிய ராஜாவுக்கு ஞானம் உண்டானதாகத் தெரியவில்லை. இதனால் ராஜாவுக்கு ராஜகுரு மீது கோபம் அதிகமானது.

''ரொம்ப நாளாக உங்களிடம் உபதேசம் கேட்டும் எனக்கு இன்னும் ஞானம் உண்டாகவில்லையே''.. என்று கோபித்தார்.

''நாளைக் காலைக்குள் எனக்கு ஞானம் வந்தாக வேண்டும். இல்லையேல் உம் தலை துண்டிக்கப்படும்'' என்று கூறினார்.



ராஜாவின் கூற்றைக் கேட்டு மிகவும் வேதனை அடைந்த ராஜகுரு தன் வீட்டிற்குச் சென்று தன் மனைவி மக்களிடம் கூறி அழுதார். ராஜ குருவின் புலம்பலைக் கேட்ட அவரது பத்து வயது மகள், ''தந்தையே, கவலைப்பட வேண்டாம்! நாளைக் காலைக்குள் நானே அவருக்கு ஞானம் புகட்டுகிறேன். என்னை அரசரிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள்.

ராஜகுரு தன்னால் இயலாததை தன் மகள் எவ்வாறு முடிப்பாள் எனப் பயந்தாலும், அவளது அறிவுத்திறன் மீது நம்பிக்கை கொண்டவராய் அவளை ராஜாவிடம் அழைத்துச் சென்றார்.

அரசனைப் பார்த்த ராஜகுருவின் மகள், ''அரசே நான் தங்களுக்கு உபதேசம் செய்யும் குருவாக இப்போது வந்துள்ளேன். நான் கூறுகிறபடி தாங்கள் நடந்தால் உடனே உங்களுக்கு ஞானம் கிட்டும்'', என்றாள். ராஜாவும் அப்படியே செய்வதாகக் கூறினார்.

அங்கிருந்தோரைப் பார்த்து, ''என்னையும், ராஜாவையும் ஆளுக்கொரு தூணில் கட்டி விட்டுச் செல்லுங்கள்'', என்று ராஜகுருவின் மகள் கூறினாள். அதுமாதிரியே செய்து விட்டு அனைவரும் அங்கிருந்து அகன்றனர்.

''அரசே! தயவு செய்து எனது கட்டுக்களை அவிழ்த்து விடுகிறீர்களா?'' என்றாள் சிறுமி.

''அது எப்படி முடியும். என்னையும் கட்டி வைத்து இருக்கிறார்களே''... என்று கூறினார் ராஜா.

''அரசே! தாங்கள் கூறுவது சரியே! இதே போன்று தான் எனது தந்தையும் கட்டப்பட்டு இருப்பதால் தான் அவரால் உங்களுக்கு ஞானத்தைப் புகட்ட முடியவில்லை. உங்கள் கோபத்துக்கு ஆளாகக் கூடாது என்ற பயம், தனது குடும்பத்தைக் காப்பாற்ற இயலாமல் போகுமோ என்ற அச்சம் என்ற பலவிதக் கட்டுகளுக்கு அவர் ஆளானதால் தான் அவரால் தங்களுக்குச் சரிவர உபதேசம் செய்ய இயலவில்லை.

நாளைக் காலைக்குள் ஞானம் பெற வேண்டும் என்ற கட்டுக்குள் நீங்கள் இருப்பதால், உங்களால் ஞானம் பெற முடியவில்லை. குருவும், சிஷ்யனும் சுதந்திரமாக இருந்தால் தான் ஞானத்தை உபதேசிக்கவும், ஞானம் பெறவும் இயலும்'' என்று கூறினாள் ராஜ குருவின் மகள். தான் செய்த தவறு ராஜாவுக்குப் புரிந்தது.

ராஜ குருவிடம் தனது தவறுக்காக வருந்தியதோடு, தன்னை மன்னித்து நல்லுபதேசம் பலவற்றை செய்தருளுமாறு ராஜா வேண்டினார்.

# சிறார்களின் கைவண்ணம்



அன்ரன் கஜென், அ சாள்ஸ்
யா/புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.




பா. அனட்பிறிட்டா
தரம் 10
வ/இந்.ம.ம.வித்தியாலயம்.





யே.மரியகொறைற்றி
தரம் 04,
யா/எழுவதீவு றோ.க.வித்தியாலயம்.



# ராகுல் காந்தி அமேதியில் போட்டி; தமிழக வேட்பாளர் தெரிவில் காங்கிரஸில் குழப்பம்

**வா**ரிசு அரசியலுக்கு புகழ் பெற்ற ஆசியாக் கண்டத்தில் பெருந்தலைவர் ஒருவரின் குடும்பத்தவராக இருப்பதே அடுத்த தலைவராவதற்கு ஒரே தகுதி ஆகும். இந்தியாவில் நேரு, இந்திரா, சஞ்சய், ராஜீவ், சோனியா, மேனகா வரிசையில் புதிய தலைமுறையில் ராகுல் காந்தி எதிர்வரும் லோக்சபா தேர்தலில் உத்தரப்பிரதேச அமேதி தொகுதியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பண்டாரநாயக்க குடும்பம், பாகிஸ்தானில் பூட்டோ குடும்பம், பங்களாதேஷில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் குடும்பம், பிலிப்பீன்ஸில் அக்கினோ குடும்பம், இந்தோனேஷியாவில் சுகார்னோ குடும்பம் என வாரிசு அரசியலின் பட்டியில் ஆசியாவில் நீண்டு கொண்டே செல்கிறது.

வாஜ்பாயின் மருமகள் இம்முறை லோக்சபா தேர்தலில் போட்டியிடுகிறார். வாஜ்பாய் பிரமச்சாரி என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தலைவர்களின் குடும்பங்கள் மட்டுமே அரசியல் செய்ய தகுதி உடையவர்கள் என்பது ஆசியாவிலும் குறிப்பாக இந்தியாவிலும் எழுதப்படாத விதியாக இருக்கிறது.

இந்தியாவில் இந்த நிலைமை இன்னும் மோசம். இந்த வரிசையில் கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்க்கப்பட்ட வாரிசு அரசியல் பிரவேசம் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராகுலின் அரசியல் பிரவேசம்

ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தியும், மகள் பிரியங்காவும் அரசியலில் பிரவேசிப்பர் என்பது பரவலாக எதிர்பார்க்கப்பட்டாலும் உத்தியோகபூர்வமாக ராகுல் காந்தி அமேதி தொகுதியில் லோக்சபாவுக்குப் போட்டியிடுவார் என இம்முறை தான் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

1980இல் சஞ்சாய் காந்தி போட்டியிட்டு வென்ற உத்தரப்பிரதேசத்தின் அமேதி



சோனியா

தொகுதி அவரது மரணத்தின் பின்பு ராஜிவ் காந்தியால் 4 தடவைகள். (1981, 1985, 1989, 1991) பிரதிநிதித்து வப்படுத்தப்பட்டது. பின்பு இந்திரா குடும்ப நண்பர் சதிஷ் ஷர்மா இரு தடவைகள் (1991, 1996 இல்) எம்.பியாக இருந்தார். 1998இல் பி.ஜே.பி. அமேதி தொகுதியை வென்றது. மீண்டும் 1999இல் முதன் முறையாக லோக்சபா தேர்தல் அமேதியில் போட்டியிட்ட சோனியா அகில இந்தியாவிலும் மிகக் கூடிய வாக்குகள் வித்தியாசத்தில் வென்றவர் என்ற பெருமையைப் பெற்றார்.

**தமிழகத்தில் இன்னும் வேட்பாளர் பட்டியலை அறிவிக்க முடியாத நிலையில் காங்கிரஸுக்குள் உள்வீட்டுச் சண்டை.**

## பிரியங்கா போட்டியிடுவாரா?

இம்முறை அமேதி தொகுதியூடாக தந்தை, தாய் போல அரசியலில் ராகுல் காந்தியும் பிரவேசிக்கிறார்.

சோனியா இம்முறை இந்திரா முன்னர் போட்டியிட்ட ராய்பரேலி தொகுதியில் போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. ராகுலின் சகோதரி பிரியங்கா போட்டியிடுவாரா என்பது இன்னும் தெரியவில்லை.

மத்தியில் ஆளும் பி.ஜே.பி. வெற்றி பெறும் என கருத்துக்கணிப்புகள் கூறும் இந்த லோக்சபா தேர்தல் காங்கிரஸுக்கு வாழ்வா சாவா போராட்டம் ஆகும். வரலாற்றில் ஒரு போதும் இல்லாதவகையில் 8 ஆண்டுகள் கட்சி மத்தியில் ஆட்சியை இழந்துள்ளது. சோனியா கட்சிக்காக பிரசாரம் செய்யும் மூன்றாவது லோக்சபா தேர்தல் இதுவாகும். முதலிரு தேர்தல்களிலும் கட்சி தோற்றது மட்டுமன்றி 1998 இல் 138 ஆக இருந்த லோக்சபா ஆசனங்கள் 1999 இல் 118 ஆக வீழ்ச்சியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இம்முறையும் காங்கிரஸ் தோற்றால் சோனியா தலைமையில் வாஜ்பாயிடம் தோற்கும் தொடர்ச்சியான மூன்றாவது முறை இதுவாக இருக்கும்.

அத்தோல்விக்குப் பின்னர் சோனியாவின் தலைமை நீடிக்கும் என்பது நிச்சயமில்லை. அவ்வாறான சந்தர்ப்பத்தில் ராகுலைக் கொண்டு தொண்டர்களை சமாதானப் படுத்தலாம். இதுவே ராகுல் பிரவேசத்தின் முக்கிய காரணமாகும். அத்துடன், மந்த கதியில் செல்லும் காங்கிரஸின் பிரசாரத்தை வலுப்படுத்தவும் இது உதவும். பி.ஜே.பி. போலன்றி காங்கிரஸில் நட்சத்திரப் பிரசாரங்கள் அதிகம் கிடையாது. சோனியா ஒருவர்மட்டுமே உண்டு. அவரும் ஹிந்தியில் நன்றாகப் பேசக்கூடியவர் அல்லர். இதனால் ராகுல் காந்தியின் ஹிந்தி மொழி கட்சிக்கு உதவலாம்.

உத்தரப்பிரதேசம் மொத்தம் 543 தொகுதிகளில் 80 தொகுதிகளைக் கொண்டது. 1990, 1998 தேர்தல் தொகுதிகளில் இங்கு பி.ஜே.பி. 80இல் 50க்கு மேற்பட்ட தொகுதிகளில் வென்றது குறிப்பிடத்தக்கது. 1999 இல் இது 28 ஆகக் குறைந்தது. இம்முறை பழையபடி பி.ஜே.பி. 50 க்கு மேற்பட்ட தொகுதிகளில்வெல்லும் எதிர்பார்ப்புடன் உள்ளது. மறுபுறம் காங்கிரஸ் உத்தரப்பிரதேசத்தில் 1996 இல் 4 தொகுதிகளில் வென்றது. 1998 இல் ஒரு தொகுதியிலும் அது வெல்லவில்லை. 1999 இல் 10 தொகுதிகளில் வென்றது. இம்முறை ராகுல், சோனியா இருவரும் இம் மாநிலத்தில் போட்டியிடுவதால் காங்கிரஸ் சற்றுக் கூடுதலான தொகுதிகளில் வெல்லலாம்.

## உள்வீட்டுச் சண்டை

இதற்கிடையில், தமிழக காங்கிரஸின் புகழ் பெற்ற உள்வீட்டுச் சண்டை காரணமாக அக் கட்சி தமிழகத்திற்கான தனது வேட்பாளர் பட்டியலை இக் கட்டுரை எழுதும் வரை அறிவிக்கவில்லை.

வரலாற்றிலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையான 10 தொகுதிகளில் கட்சி போட்டியிடுவதால் போட்டியிட பலரும் முண்டியடிக்கின்றனர்.

காங்கிரஸிலும், தமிழ் மாநில காங்கிரஸிலும் இருந்து பிரிந்த முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், முன்னாள் மாநில



பிரியங்கா

காங்கிரஸ் தலைவர்கள் தங்கபாலு, குமரி அனந்தன், திண்டி வனம் ராமமூர்த்தி, இளங்கோவன், கே. பாலகிருஷ்ணன், முன்னாள் திருச்செந்தூர் எம்.பியும் அமைச்சருமான தனுஷ்கோடி, ஆதித்தன், முன்

-எஸ்.சுரேந்திரஜித்-

னாள் நாகர் கோயில் எம்.பி. டெனிஸ், மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் என ஒரு பட்டாளம் தலைவர்கள் தத்தமது குழுக்களைக் கொண்டு தலைமைப்பீடத்தை அழுத்தி வருகின்றனர். உள்ளதோ பத்தே தொகுதிகள்.

அதிலும், மயிலாடுதுறைக்கு மணிசங்கர் ஐயரும், நீலகிரிக்கு பிரபுவும் அறிவிக்கப்பட்டு விட்டனர். ஜெயலலிதா வேட்பாளரை அறிவித்து ஒரு மாதமாகவும் போகிறது. பி.ஜே.பி, மற்றும் தி.மு.க. கூட்டணியிலுள்ள சகல கட்சிகளும் வேட்பாளரை அறிவித்து பிரசாரமும் தொடங்கி விட்டது. இது காங்கிரஸுக்கு பெரும் பின்னடைவாகலாம்.





மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexnal Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) வீடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஏப்ரல் 23 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஏப்ரல் 06, 07, ஆம்
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஏப்ரல் 10, 11, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஏப்ரல் 15 - 20வரை
A.S.N. சுற்றுலா விடுதி
398/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# சிவப்பு விளக்கு பகுதியில் வாழ்வதில்தான் இன்பம்



இந்தியாவில் கொல்கத்தா நகரம் ஒரு புகழ்பெற்ற சிவப்பு விளக்குப் பகுதி. அங்கு விலை மாதர்கள் அதிகம். அந்த விலை மாதர்களின் நலன்களைப் பேணும் நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகம். சிவப்பு விளக்கு அழகிகள் அங்கு 'எயிட்ஸ்' நோய் அபாயங்களிலிருந்து விடுபட்டு வாழ்கிறார்கள். இரு அழகிகள் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் காட்சி இது.

# ஜனாதிபதி புஷ்ஷிற்கு மூக்கின் மேல் கோபம்



மசாலா மிக்ஸ்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு இப்போது எதற்கெடுத்தாலும் மூக்கின் மேல் கோபம் வருகிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் எதிர்க்கட்சி வேட்பாளரின் கடும் போட்டியை எதிர்நோக்குவது தான் அதற்குக் காரணமாகும். ஜேர்மனியில் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில் நீண்ட மூக்குடைய ஜனாதிபதி புஷ்ஷின் உருவத்தைத் தாங்கியபடி இவ்வாறு ஊர்வலக்காரர்கள் பவனி வந்தார்கள்.

# வீட்டுக் காவலுக்கு "ரோபோ" பக்கபலம்



வீட்டுக்கு ஒரு காவல்காரனை வைத்து விட்டுச் செல்வது இன்று பாதுகாப்பான நடைமுறை அல்ல. எனவே, இயந்திர மனிதன் எனப்படும் 'ரோபோ'வை வீட்டுக் காவலுக்கு வைக்க விஞ்ஞான வசதியுள்ள நாடுகளில் ஏற்பாடு நடைபெறுகிறது. தென் கொரியாவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த 'ரோபோ' ஆங்கிலம் பேசுகிறது. ஆங்கிலம் போதிக்கிறது. அதற்கு உத்தரவு வழங்கும் பெண்ணைப் படத்தில் காணலாம்.

# மரமேறும் பயிற்சியில் பண்டா கரடிக் குட்டி!



பண்டா கரடி இனம் உலகில் அருகி வருகிறது. இயற்கையான சூழ்நிலையில் பண்டா இனம் வாழ்வதற்கான பாதுகாப்பு அற்றுப்போனது தான் இதற்குக் காரணம். மிருகக் காட்சிச் சாலைகளில் மிகவும் அபூர்வமான விதத்தில் பண்டா கரடிகள் தப்பிப் பிழைத்து வருகின்றன. சண்டியாகோ நகர மிருகக் காட்சிச்சாலையில் பிறந்து ஆறு மாதங்களேயான இந்தப் பண்டா கரடிக் குட்டி மரமேறும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. அம்மாவின் அருகில் இருப்பதைத் தவிர்த்து வருகிறது இந்தக் குட்டி.






# டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் அன்றைய தினசரிப் பத்திரிகைகளை எல்லாம் வாசித்துவிட்டு வீட்டில் சற்று ஆறுதலாக இருந்தார். ஆனால், அடிக்கடி வாசல் பக்கம் பார்த்துக் கொண்டே இருந்தார். யாருடைய வரவையோ எதிர்பார்ப்பது போன்று இருந்தது.

இந்த நேரத்தில் சிவலிங்கமும் நடராசனும் நண்பர்களுடன் அங்கு வந்து சேர்ந்தனர்.

;''வணக்கம் அண்ணன்''

''வணக்கம், வணக்கம் வாங்க உங்களைத்தான் இவ்வளவு நேரமும் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்படி உட்காருங்கள்'' என்றார் தணி அண்ணன்.

''தம்பி ஏதோ முக்கியமான விடயம் பேச வேண்டும் என்றீர்களே! என்னமோ புத்தகம் இருக்குன்னு சொன்னீங்க அது என்ன?'' என்று கேட்டார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! இதோ பாருங்க!'' என்று கூறிக் கொண்டே சிவலிங்கம் தணி அண்ணனிடம் இரண்டு புத்தகங்களைக் கொடுத்தான்.



அந்தப் புத்தகங்களை வாங்கிப் பார்த்த தணி அண்ணன், ''என்ன சிவா, எல்லாமே சிங்களமா இருக்கு. எனக்கு ஒன்றும் புரியலியே! நீங்கதான் நல்லா சிங்களம் வாசிப்பீங்களே, கொஞ்சம் படிச்சி வெவரமா சொன்னாத்தானே எனக்கும் புரியும்'' என்றார்.

உடனே நடராசனும் கோகிலாவும் ஆளுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொண்டார்கள்.

''அது சரி, புத்தகத்தை வாசிக்க முந்தி அது என்னான்னு சொல்லுங்க'' என்றார் தணி அண்ணன்.

''மன்னிக்கனும் அண்ணன். விசயத்தை சொல்ல மறந்திட்டம். நம்ப ஜனாதிபதியோட கூட்டணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள்தான் இவை. இவை பத்திப் பேசத்தான் வந்தோம்'' என்றான் சிவலிங்கம்.

''இது என்ன சிவா புதுமையா இருக்கு. ஒரு கட்சிக்கு ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை தானே வெளியிடுவாங்கள். நீ என்னமோ இரண்டு விஞ்ஞாபனங்கள் என்கிறாய்'' என வியப்புடன் கேட்டார் தணி அண்ணன்.

''ஒருவேளை இவங்களோட சுதந்திரக் கூட்டணியில ஜே.வி.பியும் பீ.ஏயும் என இரண்டு கட்சிகள் கூட்டாளிகளாக இருப்பதால் இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருப்பாங்களோ?'' என கேட்டாள்; கோகிலா.

''கோகிலாவுக்கு எப்போதுமே இந்தக் கிண்டல்தான்'' என தணி அண்ணன் செல்லமாக கடிந்து கொண்டார்.

''அண்ணே! கோகிலா கேட்கிறதிலையும் அர்த்தம் இருக்கு. இரண்டு கட்சிக்காரங்களும் அப்படித்தான் அடிச்சிருக்காங்க'' என்றான் நடராசனும்.

''சரி, சரி சிவா கொஞ்சம் விவரமா சொல்லு பார்ப்போம்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே, இதைப் பாருங்க. சிவப்பும் நீலமும் கலந்து தேசிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் னு அச்சடிச்சி இருக்காங்க. இதனைத்தான் அன்றைக்கு சம்பிரதாய பூர்வமா வெளியிட்டாங்க''.

''அடடே ஆமாம். அன்னைக்கி கூட அந்த விழாவில ஒரு வார்த்தை கூட தமிழில இல்ல. எல்லாமே சிங்கள மயம். ஏன் தேர்தல் விஞ்ஞாபனம் கூட தமிழில் இல்லைனு பெரிய கதையா இருந்திச்சே'' என்றான் இது வரை அமைதியாக இருந்த கோபால்.

''கோபால் கூட இப்ப அரசியல் விவரங்களை தெரிஞ்சி வச்சிக்கிட்டாப்புல'' என சிரித்தார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! நீங்க தினம் தினம் படிச்சிட்டு போடுற பேப்பர்களை வாசித்தே தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றான் கோபாலும்.

''அப்படீன்னா கோபாலும் அரைவாசி அரசியல்வாதியாகிட்டாப் போல'' என கிண்டல் அடித்தாள் கோகிலா.

''ஆமாம் பொறுத்துக்க, முழு அரசியல் வாதியானபின் உன்னையே எனது பீ.ஏ.யாக வச்சிக்கிறேன்'' என பதிலடி கொடுத்தான் கோபாலும். ''ஐயோ சாமி பீ.ஏ.யும் வேணாம் எம்.ஏ.யும் வேணாம், ஆளை உட்டாப் போதும் '' என கழட்டிக் கொண்டாள் கோகிலா. இவர்களுடைய பேச்சைக் கேட்டு எல்லாருமே கொல்லென சிரித்து விட்டனர்.

அப்போது உள்ளே இருந்து ஆத்தா தேநீர்க் கோப்பைகளுடன் வந்தார்.

''என்னப்பா தணி, காலையிலேயே இந்தப் பசங்கள் வந்திட்டாங்களா! அப்புறம் நீ ரெஸ்ட் எடுத்த மாதிரித்தான். இந்தா எல்லாரும் டீ குடிங்க. ஓக்கே'' என்றார் ஆத்தா.

''அடி ஆத்தே, இந்த ஆத்தா கூட இங்கிலீசு பேசுது டோய்'' என கடித்தாள் கோகிலா.

''அடியே கோகிலா! நீ என்னா நெனச்ச. நான் அந்த காலத்திலேயே ரெண்டாம் கிளாஸ் படிச்சவ தெரியுமா?'' என மிடுக்காகக் கூறி விட்டு கோகிலாவின் முதுகில் செல்லமாக தட்டிவிட்டுப் போனார் ஆத்தா.

''அடேங்கப்பா இப்பவே ஆத்தா இந்த போடு போட்டா வயசு காலத்தில் என்னா போடு போட்டாங்களோ!'' என்று சீண்டினாள் கோகிலா.

''சும்மா சொல்லலாமா, அதுதானே எங்க அப்பாவும் சொக்கிப் போனார்'' என தணி அண்ணனும் கோகிலாவுடன் சேர்ந்து கொண்டார்.

''அடப்பாவி மவனே, நீயும் இந்த சின்னக் குட்டி கூட சேர்ந்துகிட்டியா?'' என கூறி வெட்கப் படுவது போல் மறைந்து விட்டார் ஆத்தா.

தேநீரை குடித்துக்கொண்டே எல்லோரும் மீண்டும் விசயத்துக்கு வந்தார்கள்.

''அப்படீன்னா நம்ப ஜனாதிபதியோட படம் போட்டு ஒன்னு வந்து இருக்கே அது என்னா'' என வினவினார் தணி அண்ணன்.

''அது தாங்க அண்ணே, ரெண்டாவதா அடிச்ச தேர்தல் விஞ்ஞாபனம். அது ஜே.வி.பி காரவுங்களுக்கு தெரியாம அம்மாவோட கட்சி மட்டும் தனியா அடிச்சிவுட்டதாம். அதுலதான் குழப்பமே ஆரம்பிச்சி இருக்கு'' என்றான் சிவலிங்கம்.

''அப்படீன்னா மொதலாவது சிறுபான்மை இன மக்களை வசப்படுத்துவதற்காக அச்சிட்டது. ரெண்டாவது பெரும்பான்மை இன மக்களை ஆவேசப் படுத்தவதுன்னு சொல்லுறீங்களா?; எனக் கேட்டார் தணி அண்ணன்.

''அதுல சந்தேகமே இல்ல. சமாதானம் பேசுவோம். சிறுபான்மையினரைப் பாது காப்போம். விவசாயிகளுக்கு விமோசனம் வழங்குவோம். அப்புடி இப்புடின்னு மொதலாவதுல இருக்காம். ரெண்டாவதுல இதே விடயம் தலை கீழாக இருக்குதாம். ஒன்னுக்கு ஒன்னு முரண்பட்டதாக இருக்காம்'' என்றார் நடராசன்.

அப்படீன்னா ரெண்டாவது புத்தகம் ஜே.வி.பி. காரவுங்களுக்கு தெரியாம ரகசியமா அடிச்சதாம். அதுனாலதான் உள்ளுக்குள்ளே மோதல் ஆரம்பித்துவிட்டதாம்''.

''மோதல் வரத்தானே செய்யும். எண்ணெயையும் தண்ணீரையும் ஒரே போத்தல்ல ஊற்றினாலும் ரெண்டும் ஒன்னு சேராது. அந்த மாதிரித்தான் ஜே.வி.பி.யும், பீ.ஏ.யும் வைச்சிக்கிட்ட கூட்டு'' என்றார் தணி அண்ணன்.

''உண்மை தாங்க அண்ணே. தேர்தல் முடிஞ்ச கையோட இந்த கூட்டுக்கு வேட்டு வைத்து விடுவார்கள். அதுல நாம சிக்காம இருந்தா சரி'' என்றார் சிவா.

''அதுவும் சரிதான். இப்படி விசயம் தெரிஞ்ச நீங்க இதை எல்லாம் நம்ப சனங்களுக்கு சொல்லனும் நமக்கு தேவை நாட்டில சமாதானம். சமாதானத்தை ஏற்படுதத யார் வேண்டும். யாரைத் தெரிவு செய்யணும் என்பதை புத்திசாலித்தனமா யோசிச்சு முடிவு பண்ணணும். கண்ட கிண்டவுங்க கிட்ட எல்லாம் வாக்குவாதம் பண்ணாம அமைதியா இருக்கணும்'' என்று அறிவுரை கூறினார் தணி அண்ணன்.

''ரொம்ப நன்றிங்க அண்ணன். நாங்களும் பொயிட்டு வாரம்.'' என்று அவர்கள் விடைபெற்றனர்.

''டேய் பசங்களா, எங்க கிளம்பிட்டீங்க. உங்களுக்கும் சேர்த்துத்தான் சாதம் வடிச்சி இருக்கேன். சாப்பிட்டுப் புட்டு போங்க''

''அப்படியா ஆத்தா! வாங்கடா நம்ம ஆத்தாவோட சாப்பாட்டை ஒரு பிடி பிடிப்போம்'' என்று கூறியபடி கோகிலா ஆளுக்கு முன் உள்ளே போனாள். மற்றவர்கள் மட்டும் என்னவாம். எல்லாரும் ஒரு பிடி பிடித்து விட்டே சென்றனர்.

# முட்டி மோதும் தலைமைகள் முச்சந்தியினுறும் தொழிலாளர்




பாவம் இந்த அப்பாவிகளான தோட்டத் தொழிலாளிகள். மலையகத் தலைவர்களின் ஆவேசப் பேச்சும் — துவேசத்தைத் தூண்டி விடும் கருத்துக்களும், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் கதைகளும் மலையக தோட்டத் தொழிலாளர்களை சித்த சுவாதீனம் அற்றவர்களாக மாற்றி விடுமோ என்ற அச்ச உணர்வு தான் ஏற்பட்டுள்ளது.

ஒரு சில இளம் தலைவர்களின் ஆவேசப் பேச்சுக்கள், இது வரை இருந்துவந்த ஆதரவையும் செல்வாக்கையும் சிதைத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

பொதுவாக மலையகத்தில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற கட்சிகள் இரண்டு நேரடியாக இந்தத்தேர்தலில் பலப் பரீட்சையில் இறங்கி இருக்கின்றன.

சில அரசியல் மேடைகளில் அரசியல் நாகரிகம் காற்றில் பறக்கவிடப்படுகின்றது. தாம் வெற்றி பெற ஆதரவு தேடுகின்றனரா அல்லது மற்றவர்களைப்பற்றி வசைபாடுவதற்காகவே இவர்கள் அரசியல் மேடை அமைத்துள்ளனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த தலைவர்கள் என்ன சொல்கிறார்கள்? ''காலம் காலமாக நாங்கள் கொடிகட்டிப்பறந்தவர்கள். எங்களை அசைக்க எவராலும் முடியாது'' என்கிறார்கள்.

''சிறைக்கு சென்று வந்து விட்டால் எல்லோரும் தியாகிகளாகிவிட முடியுமா? கசிப்பு விற்றவன் கூடத்தான் சிறைக்குப் போய்வருகிறான். கசிப்புக்காரனும் தலைவராகிவிட முடியுமா?'' என்றுஒரு தலைவர் பேசி வருகின்றாராம்.

என்னடா இந்த தலைவர் தண்ணி அடிச்சிப்புட்டு வந்து கத்தறாரோ, பேசுறது ஒன்றுமே விளங்கவில்லையே என்ற பாமர மக்களும் விமர்சிக்கும் அளவுக்குபேசுகின்றார்களாம்.

''மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு கூரைத் தகடு, சைக்கிள், நாற்காலி, சீமெந்து மூடை என வழங்கி ஓட்டுக்காக லஞ்சம் கொடுத்த தலைவர்கள், கொழும்பில் வந்து சிமெந்தும் தகரமும், நாற்காலியும் கொடுத்து பொது மக்களை ஏமாற்றுகின்றார்கள். நாம் அப்படி இல்லை சேவையால் முன் வந்தவர்கள்'' என்று சாடுகின்றனராம். தற்செயலாக கொழும்புக்கு வந்த ஒரு தோட்டத் தொழிலாளி ''என்னடா இது இந்த தலைவர் தானே எங்க தோட்டத்து தலைவருக்கு சைக்கிள், ஆளுங்களுக்கு நாற்காலி, சீமேந்து மூடை எல்லாம் கொடுத்தாரு. இங்க வந்து அவரே அவரைத்திட்டிற மாதிரி இல்ல பேசுறாரு. இப்படி நேரத்துக்கு நேரம் பல்டி அடிப்பவர்களை எப்படி நம்புவது?'' என்று வாய்விட்டு கூறுகின்றனர்.

இதோடு நின்றுவிடவில்லை. அரசியல் அகராதிக்கு அப்பால் சென்று கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களையும் தனிப்பட்ட விடயங்களையும் விமர்சிக்கின்றனராம்.

தமிழ் பேசத் தெரியாத ஒரு தமிழ் அரசியல்வாதி ஓர் அரசியல் கட்சியின் பெயரை மாற்றிக் கூறிவிட்டார் என்பதால் அதன் உண்மையை அறிய முனையாத ஒரு தலைவர் தமிழனுக்கு ஓட்டுப்போட வேண்டாம். இரண்டு பெரும்பான்மை அரசியல் வாதிகளின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு மட்டும் ஓட்டுப்போடுங்கள்'' என்று வீர முழக்கம் இட்டுள்ளார்.

இப்போது அப்பிரதேசத்தில் காலம் காலமாக இருந்து வந்த சங்கத்தின் செல்வாக்கு இடிந்து விழுந்து தரைமட்டமாகிவிட்டநாம்.

காரணம் இடம், பொருள், ஏவல் என சூழல் நிலை அறியாமல் பேசும் பேச்சுக்கள் தமக்கே வினையாகிவிடுவதை இந்த மலையகத் தலைவர்கள் உணர மறந்துவிடுகின்றனர்.

மலையக மக்களுக்கு இந்த தலைவர்கள் என்ன செய்தார்கள்? எதிர்காலத்தில் என்ன செய்யப்போகின்றார்கள்? எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத் தருவோம்? கல்வி அபிவிருத்திக்கு என்ன செய்வோம்? குடியிருப்பு வசதிகளை எப்படி பெற்றுக்கொடுப்போம்? எங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன? என்பவற்றை மக்கள் முன் வைத்து அதற்கு மக்களின் ஆணையைப் பெற வேண்டும்.

இதைவிட்டு அரசியல் எதிரிகளை தமது சொந்த எதிரிகளாகப் பாவித்து அவர்கள் மீது சேற்றை வாரி வீசுவதாலும் வசைபாடுவதாலும் இவர்களால்வெற்றி பெற்றுவிட முடியாது.


தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் 19ஆம் நூற்றாண்டில் கொத்தடிமைகளாகவே இருக்கின்றனர் என்று நினைத்துக்கொண்டு தான் பேசுகின்றனர்.

ஒரு சில தலைவர்கள் அடிக்கடி புலிகளைப் போய் சந்தித்துப் பேசியதால் தான் அந்த இயக்கமே இரண்டாகிவிட்டது என்று பிதற்றி உள்ளார் ஒரு தலைவர். இவருடைய பேச்சு இவருடைய அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையையும், விவேகமற்ற போக்கையும் வெளிப்படுத்துகின்றது என்று தோட்டத் தொழிலாளர்களே விமர்சிக்க ஆரம்பித்து விட்டனர்.

மலையகத் தலைவர்கள் இனிமேலாவது சிறு பிள்ளைத் தனமாக எதையும் வாரி இறைத்துவிட்டு பின்பு வேதனைப்படுவதில் எந்த பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. மலையகம் இன்னும் கொழுந்துக் கூடைக்குள் மட்டும் முடக்கப்படவில்லை. கொம்பியூட்டர் யுகத்துக்கு முன்னேறிவிட்டது. பின் தங்கிய மலையகம் என்று கூறுவதைக்கூட அவர்கள் விரும்பவில்லை. வளர்ச்சி அடைந்து வரும் மலையகம் என்றே குறிப்பிட விரும்புகின்றனர்.

மகாத்மா காலத்துக்கு ஜே! போட்ட காலம் மலையேறிவிட்டது.

தொடர்ந்தும் இவர்களை உங்களால் ஏமாற்ற முடியாது. உறுதியான வேலைத் திட்டத்துடன் மக்கள் முன் செல்லுங்கள். உங்களுடைய வெற்றி நிச்சயம்.




## சொல்லாதே இது இரகசியம்!

சின்னவீடா இருந்தா அப்ப அப்ப வரலாம். பெரிய வீடா இருந்தா எப்பவுமே வரலாம் என்று வானொலியில் ஒரு பாட்டு ஒலித்ததாம். உடனே அந்த வானொலிப் பெட்டியை தூக்கிப்போட்டு உடைக்காத நிலையில் ஆத்திரத்துடன் ஓப்செய்தாராம், அந்த மத்திய மலைநாட்டின் ராதைகளின் கண்ணன்.

''என்ன சார் நல்ல பாட்டுப்போடும் போது நிறுத்தி விட்டீர்களே!'' கூட இருந்த சகா கேட்டாராம்.

''ஓய் உம்முடைய வேலையைப்பாரும். ஓட்டுக்கேட்கப் போனாலும் ஆபீசுக்குப் போனாலும் கலியாணவீட்டுக்குப் போனாலும் எங்க பார்த்தாலும் இதே பாட்டுத்தானா வேறபாட்டே இல்லியா?'' என எரிந்து விழுந்தாராம்.

பாவம் அந்த சகா. கர்ப்பகக் கிரகத்தில் மூலஸ்தானத்தில் ஒன்று, மற்றும் அந்தச் சுவர்களில் எல்லாம் பலகோண அம்மனின் திருவுருவங்கள், பெரிதாக ஒன்று, சிறிதாக ஒன்று என பலவற்றுக்கும் பூஜை பண்ணிய அந்த ராதைகளின் கண்ணன் எங்கு சென்றாலும் சின்ன வீட்டைப் பற்றியே கேள்வியாம். இந்த நேரத்தில் இப்படி ஒருபாட்டைப் போட்டு மனிதரைக் குழப்பி அடித்தால் ஆத்திரம் வராதா என்ன?




இப்பொழுது வெள்ளவத்தையில்

சுடர் ஒளி உதயன் காரியாலயம்

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C, 6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் நிலையத்துக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பரக் கருமபீடத்திலும் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

011 4734401 - 3, 011 2399566 - 70

071 4801391










இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்டமார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஏப்ரல் 04 ஆம் திகதி வெளியிடப்பட்டது.